
கவிச்சக்கரவர்த்தி கம்பரின்

இராம காதை

(காவிய ஓவியம் - கவிதை நாடகம்)



சந்தக் கவிமாமணி

தமிழழகனார்

2

1024

கவிச்சக்கரவர்த்தி கம்பரின்

இராம காதை

(காவிய ஓவியம் - கவிதை நாடகம்)

அன்புடன்,
இராமன்
23-4-13

நாடக ஆக்கம்:

சந்தக் கவிமாமணி

தமிழழகனார்

பதிப்பாசிரியர்:

K.S.வீரராகவன்

என்னை
இலக்கிய நெறிக்கு ஆட்படுத்தி
அன்புகாட்டி அழைத்துச் செல்வோரில், நான்
தவறியபோதெல்லாம்
வன்மை அன்பையே மேன்மைசெய்தும்
மென்மை அண்ணா
பழ.பழனியப்பன்
(கம்பன் அடிசூடி)
அவர்களுக்கு
பால சீனிவாசன்.
14.03.2014.

வனிதா பதிப்பகம்

11, நானா தெரு, பாண்டிபஜார்,
தி.நகர், சென்னை - 600 017.
☎ 42070663

கவிச்சக்கரவர்த்தி கம்பரின் இராம காதை ☐ சந்தக் கவிமாமணி தமிழழகனார் ☐ முதல் பதிப்பு 2013 ☐ பக்கங்கள் 104 ☐ வெளியீடு: வனிதா பதிப்பகம், எண்.11, நானா தெரு, பாண்டிபஜார், தி.நகர், சென்னை-17 ☐ தொலைபேசி: 42070663 ☐ ஒளி அச்சு: குகன் கம்ப்யூட்டர்ஸ், சென்னை-600 014 (94442 92899) ☐ அச்சிட்டோர்: பத்மாவதி ஆப்செட், சென்னை.

விலை: ரூ.70.00

பதிப்பாளர்: நல்லாமூர் முனைவர் கோ.பெரியண்ணன்,
M.A., M.Ed., M.Phil., Ph.D.,

KAVI CHAKKARAVARTHI KAMBARIN RAMA KAATHAI ☐ SANTHA KAVIMAAMANI TAMILALAGANAR ☐ *First Edition 2013* ☐ *Pages: 104* ☐ *Published by: Vanitha Pathippagam, No.11, Nana Street, Pandi Bazaar, T.Nagar, Chennai-17* ☐ *Phone: 42070663* ☐ *Typeset: Guhan Computers, Chennai-600 014 (94442 92899)* ☐ *Printed at: Padmavathi Offset, Chennai.*

Price: Rs.70.00

Publisher: Nallamur Dr.G.Periannan,
M.A., M.Ed., M.Phil., Ph.D.,

ஸ்ரீ:

ஸ்ரீ மதே ராமானுஜாய நம:

ஸ்ரீமத் பரமஹம்ஸ அப்பன் பரகால ராமாநுஜ எம்பார் ஜீயர் ஸ்வாமி

தலைவர் மற்றும் நிர்வாக அறங்காவலர்,
ஸ்ரீ எம்பார் ஜீயர் மடம்,
30, மணவாளமாமுனி கோயில் வீதி, ஸ்ரீபெரும்புதூர் — 602 105,
காஞ்சிபுரம் மாவட்டம்.
தொலைபேசி : 27162073 செல்: 9994323397

வாழ்த்துரை

ஆதி அந்தமில்லாத வேதத்தின் ஆழ்பொருளை வெளிப்படுத்தவே இராமாயண காவியம் விரிந்தது என்கிறார் ஆதி கவி வான்மீகர்.

இறைவனின் மனித அவதாரமான இராமனைப் பிரிந்து சிறையிருந்த கற்பின் கனலி சீதையின் சீரிய சரிதமே இராமாயணம்.

அரக்கர் என்போர் ஈரம் இல்லாத நெஞ்சினர். அசுரர் பிறரைத் துன்புறுத்தும் இயல்பினர். இவ்விரு தன்மைகளையும் தவிர்த்தவர் தேவர்.

அசுர குலத்தில் பிரகலாதனும், அரக்கர் இனத்தில் வீடணனும் தோன்றி ஆழ்வார்களாகி, சிரஞ்சீவியாக வாழ்கின்றனர்.

கவிச்சக்கரவர்த்தி கம்பன் இவ்விருவரையும் தனது இராம காதையில் இணைத்துக் காட்டுகிறார்.

"தமிழ்மறை அருளிய திருமாலவன் கவி நம்மாழ்வார் கற்பார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ?" என்று கம்பனுக்கு வழிகாட்டினார்.

இராமாநுச நூற்றந்தாதி பாடிய திருவரங்கத்து அமுதனார் இராமாயணத்தை, "பக்தி வெள்ளம்" எனப் பகர்ந்து பாராட்டுகிறார்.

பிற்கால மகாகவி பாரதியின், 'பாஞ்சாலி சபதம்' கவிதை நாடகமாக மேடை ஏறியது போல கம்பனின் இராமகாதையும் கவின்மிகு தமிழில் நாடக உருப்பெற்றுள்ளது.

வான்மீகரின் மூலக்கதையில் சில திருப்பங்களையும், பாத்திரப் படைப்பில் சில மாற்றங்களையும் கம்பன் கையாண்டது போல், பாரதி கலைக்கழக சந்தக் கவிமாமணி தமிழழகனார் நாடக உத்திக்கு ஏற்ப கதைச் சுருக்கமும், பாத்திரப் பாங்கும் அமைய, சுவை குன்றாது, கம்பனின் 'இராமாவதாரத்தை' காவிய ஓவியமாக, கவிதை நாடகமாக இயற்றியுள்ளார். தெய்வமாக்கவி மாட்சி குன்றாது, கவிநயம் மிக்க ஒரு நாடக நூலிது. இப்படி ஒரு கவிதை நாடகத் தமிழ் இலக்கிய மரபு உதயமாகி வளர்வது வரவேற்கத் தக்கது. ஆழ்பொருள் உட்கொண்ட சொல் சுருக்கமல்லவோ கவிதை!

நாடகக் கவிதை சிறந்து மிக்கோங்குக!
தமிழழகனாருக்கு அநேக மங்களா சாஸனங்கள்!
பொலிக! பொலிக!!

- அப்பன் பரகால ராமாநுஜ எம்பார் ஜீயர்

திருமிகு விஜய திருவேங்கடம்

முன்னாள் சென்னை வானொலி இயக்குநர்.

காவியக் கட்டியம்

இராமாயணமும், மகாபாரதமும் பன்னெடுங் காலமாக இந்தியரின் இதயத்தைக் கவர்ந்த இதிகாசங்கள் என்பதோடு, வாழ்க்கை வழிகாட்டிகளாகவும் போற்றப்படுபவை. இன்றைய நவீன வாழ்க்கையிலும் சகலமும் அறிந்தவர் முதல் சாமானியர் வரை அனைவரும் தமது அன்றாடச் சிக்கல்களுக்காக இந்த இதிகாசங்களை நாடுவது நாமறிந்ததே.

பரந்தாமனின் பத்து அவதாரங்களில் நம்முள் ஒருவனாய்ப் பிறந்து, நாம் படும் துன்பங்கள் அனைத்தையும் அனுபவித்து, மிக உன்னத இலட்சியங்களுக்கு உதாரண புருஷனாய் விளங்கிய இராமாவதாரம், அதற்குப் பின்னே தோன்றி தீமையை அழிப்பதில் திறம்பல புதிதாய்க் காட்டிய கிருஷ்ணாவதாரம் இவையே இவ்இதிகாசங்களின் கருப்பொருள்.

பாரத மொழிகள் அனைத்திலும் பெயர்க்கப்பட்டுள்ள இவ் இதிகாசங்கள் அருங்கலைகள் அனைத்திற்கும் ஆதாரப் பொருளாய் அமைந்து வந்திருக்கின்றன.

பாரம்பரிய ஊடகங்களேயன்றி இன்று புதிது புதிதாய்ப் பூத்து வரும் ஊடகங்களும் உவந்தேற்கும் உயர் முதற் பொருளாய் இவ்விரு இதிகாசங்களும் விளங்குகின்றன.

இந்தியாவில் சென்ற முக்கால் நூற்றாண்டு காலமாக நாடெலாம் போற்றும் நற்பணி புரிந்து வரும் தேசிய ஊடகங்களான அனைத்திந்திய வானொலியும், தூர்தர்ஷனும் இவ்விரு இதிகாசங்களையும் அவ்வப்போது வண்ணமயமான கலை வடிவங்களில் வழங்கி மகிழ்ந்துள்ளன. சென்ற அறுபதுகளின் ஆரம்பத்தில் புனே அ.க.வானொலியில் ஜி.டி.மாட்டுல்கர் எனும் மராத்திய அறிஞர் வழங்கிய 'கீத் ராமாயணம்' அன்றாட வழிபாட்டின் அங்கமாக மிளிர்ந்த அற்புதம் நிகழ்ந்தது. தமிழில் 'பால ராமாயணம்' சாதனை படைத்தது. எண்பதுகளில் தூர்தர்ஷனில் இராமானந்த் சாகர் அமைத்தளித்த 'இராமாயண்' ஒரு வரலாற்றுச் சாதனை நிகழ்த்தியது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் சென்னை வானொலி நீள்பயன் நல்கும் நிரந்தர ஒலிக்களஞ்சியத்துக்கென கம்பனின் இராம காதையைத் தொடர்ந்து வாரத்துக்கொன்றாக ஆண்டு முழுவதும்

'காவிய ஓவியம்' எனும் தலைப்பில் முத்தமிழ்க் கலை நிகழ்ச்சியாக வழங்கியது.

இயற்பகுதியாம் இணைப்புரை வழங்கும் இணையிலாப் பேறு எனக்குக் கிட்டியது. புகழ்மிக்க இசைவாணர்கள் கம்பன் பாடல்களைப் பாடினர். வானொலி நாடக நடிப்பில் தேர்ந்த நடிகர்கள் நடிக்க அந்நாடகப் பகுதியைக் கவிதையில் வடித்துத் தந்தவர் கவிமாமுகில் தமிழழகன் ஆவார்.

கவிமாமுகில் தமிழழகன் மிக மூத்த கவிஞர். அகவையாலும், ஆன்ற தமிழ்ப் புலமையாலும், அருங் கவிதையாலும் மிக மூத்தவர். மரபறிந்த மாண்பாளர். யாப்பின் எல்லைக்குள் நின்று புதுக்கவிதைப் புலங்கள் பல காட்டியவர். செவிக்கினிய சந்தமும், சிந்தைக்கினிய கற்பனை அழகும் கருத்தழகும் செறிந்திலங்கும் செந்தமிழ்க் கவிதை பல புனைந்தவர். கம்பமாக் கவிஞன் பன்னீராயிரம் பாடல்களில் யாத்தளித்த இராம காதையைச் சின்னூறு வரிகளில் நாடகமாக்கும் திறன் தமிழழகனார்க்கு வாய்த்தது எவ்வாறோ என்று இவரை அறிந்தார் வியந்தனர்.

மூலக் கவிஞனின் அடியொற்றியும், இக்காலத் தமிழர்க்குரிய எளிமை பொருந்தியும் நாடகம் இயற்றுவது மிகவும் கடினம். இதனைத் தமிழழகன் சாதித்துள்ள விதம் தமிழுலகம் போற்றி மகிழத்தக்கதாகும்.

பால் சோற்றுக்குப் பதச் சோறு வேண்டாம். இப்பாவலர் படைப்புக்கும் அவ்வாறே!

அன்று வான்வழி வந்த விருந்து இன்று நூல்வழி வருகிறது.

வரவேற்போம்.

இராம மந்திரம் இவ்வுலகைப் புரக்கும் வல்லமை உடையது; வரம் பல நல்கும் திறமுடையது. இதனை ஓதுதற்குரிய உயர் வழி ஒன்றினை இந்நூலின் வழி காட்டியுள்ள தமிழழகன் நம் நன்றிக் குரியவர்.

விஜய திருவேங்கடம்,
முன்னாள் இயக்குநர், சென்னை வானொலி.
சென்னை- 96.

காற்றுவெளியில்

உலகில் இதுவரை எத்தனையோ மகா கவிஞர்கள் எல்லா மொழிகளிலும் தோன்றி இருக்கிறார்கள். என்றாலும், அவர்களை எல்லாம் கம்பனுக்கு நிகராகக் கூற இயலாது. அவன் கவிஞர் களுக்கெல்லாம் மேலான மகாகவி. கவிச்சக்கரவர்த்தியும்கூட.

இக்கருத்தை வீண் பெருமையாகவோ, தற்புகழ்ச்சியாகவோ நாம் கூறவில்லை. பன்மொழி அறிஞர்களும், பரந்துபட்ட இலக்கிய வித்தகர்களுமே ஆராய்ந்து ஆராய்ந்து கூறிய உண்மை. கல்வியில் பெரியவன் கம்பன் என்று காலம் காலமாக உலகம் கூறும் உண்மை. கற்பனைத் திறத்தாலும் கவிதை வளத்தாலும் அவனுக்கு நிகர் அவனே.

அந்த மகாகவி வேந்தன் நம் தமிழ் மொழியின் தவம் என்பதே நமக்கு அளவு கடந்த பெருமை. பாத்திரப் படைப்பாலும் சார், பாத்திர நடப்பாலும் சார் இராம காவியம் தமிழுக்கு அவன் தந்த பெரும் கொடைக் கருவூலம்.

அந்தக் கருவூலத்திலிருந்து எடுக்க எடுக்கப் பொன்னும் மணியும் புதுப்புது வைரக் குவியல்களும் வந்துகொண்டே இருக்கும். அதனால்தான் வான்மீகியின் வழிநூலாகவே அவன் படைத்த காப்பியத்தில் இருந்தே இன்னும் பலப்பல சார்பு நூல்கள் பலவேறு வடிவங்களில் வந்துகொண்டே இருக்கின்றன.

விருத்தங்களாகவும், வெண்பாக்களாகவும், இசை நாடகங் களாகவும், கீர்த்தனைப் பாடல்களாகவும் வந்து கொண்டிருக்கும் இராமகாதையைக் கம்பனை ஒட்டிக் காவிய நாடகம் அதாவது கவிதை நாடகமாகவும் எழுதும் பேறு எனக்குக் கிட்டியது.

இப்பெரும் பாக்கியத்திற்கு வாய்ப்பு அமைத்துக் கொடுத்தவர் சென்னை வானொலியின் முன்னாள் இயக்குநர் திரு.விஜய திருவேங்கடம் அவர்கள்தான். இந்திய அரசின் ஒலிபரப்புத் துறையான பிரச்சார பாரதி மூலம் இதை என்னைக் கொண்டு இயற்றுவித்து, வானொலியிலும் தொடர்ந்து வாரம்தோறும் ஒலிபரப்பாக வழிவகை செய்தவர் அப்பெருமகனார். அதற்காக என் நன்றிப் பேருணர்வை அவருக்குக் கட்டாயம் தெரிவிக்க வேண்டும்.

தவிரவும் என்பால் அவர் கொண்ட அன்பால் ஒவ்வொரு வாரமும் ஒலிபரப்புக்கு முன்னால் சில மணித்துளிகள், அன்றைய ஒலிபரப்புப் பகுதியில் இலக்கிய அறிமுகமும் செய்தவர். தொடர்ச்சியாக இந்த நூலுக்கும் அவருடைய அழகிய முன்னுரை அமையும்படி ஆக்கிக் கொடுத்திருக்கிறார். இவற்றை எல்லாம் எண்ணி மீண்டும் மீண்டும் என் நன்றி அவருக்குச் சரியன.

இப்படைப்பை ஒலிபரப்பிய பிரச்சார பாரதி நிறுவனத்திற்கும் மிக்க நன்றி.

இந்நாடகம் வானொலியில் ஒலிபரப்ப அதன் ஆயத்தப் பணிகளில் ஒத்துழைத்த நிகழ்ச்சி திரு.கே.தட்சிணாமூர்த்தி, கவிப்பிரியா எஸ்.சவுந்தரராஜன் ஆகியோர்க்கும், பாத்திரப் பொறுப்புகள் ஏற்று நடித்த கலைஞர் திரு.பீலிசிவம், திருமதி டி.கே.கலா போன்றோர்க்கும், கம்பன் கவிதைகளை ஆங்காங்கு பொருத்தமாகப் பாடிய இசைக் கலைஞர்கள் சீர்காழி திரு.சிவசிதம்பரம், திரு.டி.கே.எஸ்.கலைவாணர் போன்றோர்க்கும் என் நன்றி.

இந்நூலுக்கு ஆசி கூறும் முகத்தான், ஸ்ரீபெரும்புதூர் எம்பன் ஜீயர் அப்பன் பரகால இராமாநுஜ எம்பார் ஜீயர் சுவாமிகள் அற்புதமான வாழ்த்துரை வழங்கியுள்ளார். அந்தக் குருமகா மூர்த்திக்கும் என்னுடைய பணிவான நன்றிகள்.

இந்நூல் விரைவில் வெளிவர பெரும் முயற்சி எடுத்துக் கொண்டு, அதற்காகப் பெரும் ஊக்கமும் உற்சாகமும் தந்து என்னை ஆட்படுத்தியவர் நண்பர் திரு.வீரராகவன் அவர்கள். அன்பர் பணி செய்ய என்றே இறைவனால் ஆட்படுத்தப் பெற்ற இலக்கியத் தொண்டர் அவர். அவருக்கு என் அன்பு கலந்த நன்றி.

என் நூல்கள் அனைத்தும் தொடர்ந்து வெளிவர வேண்டும் என ஆசைப்படும் என் நண்பர்கள் சிலர் உண்டு. திருவெற்றியூர் பாரதிபாசறைத் தலைவர் திரு.பு.சீ.கிருஷ்ணமூர்த்தி, துணைத் தலைவர் திரு.முத்துக்கருப்பன், செயலர் முனைவர் திரு.மா.கி. இரமணன், பாரதி கலைக் கழகத் தலைவர் கவிமாமணி திரு.குமாரச்செழியன், கவிஞர் எழிலன், திரு.பாரதி சுராஜ் மற்றும் நண்பர்களுக்கும் என் ஆழ்ந்த நன்றியை இவ்வாய்ப்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேல் இந்த நூலை வெளியிடுவதில் மிகவும் அக்கறை காட்டியவன், என் மூத்த பிள்ளையும், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞனுமான திரு.முத்துவேலன். அவனுடைய ஆர்வமும் தூண்டுதலும் இல்லையேல் இன்னும் என் இலக்கியப் பணி தாமதித்துக் கொண்டேயிருக்கும். அந்தச் செல்லப் பிள்ளையின் அயராத தூண்டுதலுக்கும் என் வாழ்த்தோடு, பாராட்டுகள்.

நூலை நல்ல முறையில் அச்சிட்டு உதவிய சென்னை வனிதா பதிப்பக முதன்மை நிர்வாகி திரு.பெ.மயிலவேலன் அவர்களுக்கும் என் நன்றியும் பாராட்டும் என்றென்றும் உரியன.

சந்தக் கவிமாமணி தமிழழகனார்

கம்பன் கவியே கவி

சந்தக் கவிமாமணி தமிழழகன்

1. சொல்லுக்குச் சொல்பொருளும் சூழச் சுவைத்திரளும்
நல்லொக்க விம்ம நயம்நயமாய்க் - கல்லொக்கத்
தெம்பன்ன சிற்பம்போல் தெய்வமாக் காவியம்செய்
கம்பன் கவியே கவி.

2. பாற்கடலைப் பூனை பருகமுந்தும் ஆசைபோல்
கார்க்கடல் இராமன் கதை முற்றும் - நூற்கடலாய்த்
தம்பொன் கவிசெய்து தான்அதிலும் வெற்றிகண்ட
கம்பன் கவியே கவி.

3. ஒன்றேதான் இல்என்றும் ஒன்றேதான் சொல்என்றும்
ஒன்றேதான் வில்என்றும் ஓங்குபுகழ் - வென்றேதான்
அம்புவியில் ராமகதை ஆயிரம்கால் சொல்லவைத்த
கம்பன் கவியே கவி.

4. வான்ஆளும் தெய்வமே வந்திங்(கு) அவதரிக்கின்
தான்ஆள நேரும் தகைமைஎலாம் - தேன்ஆள
எம்புமகா காவியமாய் என்றுமுள தென்றமிழ்செய்
கம்பன் கவியே கவி.

5. வில்ஒக்கக் கோதண்டம் வேயும்தேள் என்றாலும்
வல்ஒக்கக் கோ(து)அண்டா வள்ளலெனும் - சொல்ஒக்க
நம்பக் கவியுலக நாயகனைத் தந்துநின்ற
கம்பன் கவியே கவி.

6. சோகவனத் துள்ளுறும் தாய் சூழ்ந்ததுயர் வாட்டமெலாம்
போகவென அங்கும் புகுந்தே - சோகவனம்
சம்பவிக்கச் செய்தமகா சாதுரிய மாருதிமேல்
கம்பன் கவியே கவி.

7. தேரழுந்தூ ரான்எனினும் தீர்தமிழின் பண்பாட்டுத்
தேரழுந்தாப் பண்பினன்தான் தெய்வமென்றே - பாரெழுந்து
தம்பொன் தலைவணங்கித் தான்இருகை கூப்பவரும்
கம்பன் கவியே கவி.

8. சாதா வரிஇன்றிச் சான்றோர் கவிநடைக்கே
கோதா வரிநடையைக் கொண்(டு) உவமைத் - தோதாய்நம்
முன்படைத் தோடவைத்த முத்தமிழின் ஆற்றொழுக்காம்
கம்பன் கவியே கவி.

9. சூரியவம் சம்வந்தும் சூடீன்றித் தண்மைஒன்றே
வீரியநம் ராமன் விளங்குமாய் - நேரியபூங்
கொம்பன்ன சீதை குலக்கொடிமேல் சுற்றவைத்த
கம்பன் கவியே கவி.

10. விருத்தயாப் பேனும் வெகுவாய் முதுமை
வருத்தமுறா தென்றும் வரைப் - பொருத்தமாய்
எம்பெருமா மாருதி ஏந்தியசஞ் சீவிபோல்
கம்பன் கவியே கவி.

சந்தக் கவிமாமணி தமிழழகன்


கம்பன் கவியே கவி

சந்தக்கவிமாமணி தமிழழகன்

கமலபந்த வெண்பா

ஆயநய மேயமைய ஆயமுய ஏயவய
மாயநய மாக மனிதமெய்த - நேயமொடு
செம்பொன் தமிழ்க்கென்றே செம்மலிரா மன்திறம்சொல்
கம்பன் கவியே கவி.

(கமல பந்தம்)



(சித்திரக் கவிதை)

திரு அவதாரப் படலம்

(கயிலாயத்தில் பிரமதேவன் இந்திரன் உட்பட
எல்லாத் தேவர்களும் முனிவர்களும் திரண்டிருந்து
இறைவனைப் போற்றித் துதிக்கின்றனர்)

துதிப்பாடல்

உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுஉடை யார்அவர்
தலைவர்; அன்னவர்க் கேசரண் நாங்களே!

(இவர்களின் சரண முழக்கத்தைக் கேட்டு
இறைவன் சிவபிரான் தோன்றுதல்)

சிவன் : சரணமென இக்கயிலை சாரவந்த மூவுலகீர்
அரணுமென உமக்கென்னால் ஆகஎன்ன? கூறுங்கள்.

பிரமன் : கண்ணுதல் பெருமானே, கடவுள்நீர் அறியாததா?
எண்ணுதற்கே ஒண்ணாத இன்னல்களை இராவணன்தான்
விண்ணுமண்ணு மாகஎங்கும் விளைவித்துத் தள்ளுகிறான்.

இந்திரன் : அண்ணலே, உம்மிடம்தான் அதற்குவழி தேடிவந்தோம்.

பிரமன் : ஆமாம் பெருமானே, அம்மையொடும் இக்கயிலைக்
கோமானாய் இருவரும்நீர் கொலுவீற் றிருக்கையிலே
திக்கு விசயமெனத் தேடிவந்த அவ்வரக்கன்
பொக்கெனஇக் கயிலையையே புலம்பெயரப் பேர்த்தெடுத்தான்.

சிவன் : அறிவோம் அறிவோம்யாம் அவனின்அறி யாமையினை
வெறியோடு தூக்கிஎம்கால் விரலால்தான் நசுக்குண்டே
ஒவென்றே அலறித்தான் உடல்முழுதும் மீண்டெழுந்தான்
சாவுஅன்றே இலாமையினால் தப்பித்தே உயிர்பிழைத்தான்.

இந்திரன் : ஆனாலும் அவன்துணையால் அரக்கர்செயல் நின்றதில்லை;
வானாலும் புவியாலும் வளர்வனஅக் கொடும்வினைகள்.

பிரமன் : முன்னமிந்த இந்திரனை முழுவதுமாய் வழிமறித்துத்
தன்னந்தனிப் பாசத்தால் தான்பிணித்தும் சிறைவைத்தான்,
தசகண்டன் இவன்மகன்தான். தருக்குடனே பேருமதால்
இசைகொண்ட மேகநாதன் இந்திரசித் என ஆயிற்று.
நானேதான் அங்குசென்று நல்வார்த்தை பலசொல்லித்
தான்நேரில் மீட்டுவந்தேன் தருணத்தில் இந்திரனை.

சிவன் : புரிகிறது புரிகிறதுஉம் புண்மனமும் நான்முகரே!
சரிவரவே இதற்குவழி சகலமுமே திருமால்தான்.
தேவரொடு மூவருமே தீர்க்கஒண்ணா இக்கொடுமை
யாவையுமே நீக்கவல்லோர் அரிஎனும்மா மாயன்தான்.

பிரமன் : தேவையுள்ளவரம்அனைத்தும் திரண்டபெரும் பலம்அனைத்தும்
மேவஅவன் முன்பேயே மிகவும்உம்பால் பெற்றமையால்
பாற்கடலின் கண்வளரும் பரமனையே முன்நினைவோம்.
கார்க்கடலாய் எழும்அவனே கருணைமழை உடன்பொழிவான்.

சிவன் : ஆம்; அவருக் கிப்போதே அபயம்எனக் குரல்கொடுப்போம்
தாமதமே இன்றிவரத் தான்நினைந்தும் அஞ்சலிப்போம்.

(அனைவரும் துதித்தல்)

பிரமன் : மாமாயப் பரந்தாமா, மாதுறையும் திருமார்பா,
பூமாது கேள்வனெனப் பொலிதுளவ மணித்தாமா.

இந்திரன் : விண்ணவரும் மண்ணவரும் வேண்டுகிற தனிமுதலே,
எண்ணவரும் எங்களிடர் என்னதெனக் கேட்பதற்கே.
(திருமால் கருடன்மேல் தோன்றுதல்)
இதோஅவரே வந்துவிட்டார், இருதாயார் தம்மோடும்
புதிதொருபொன் மலைபோன்ற புள்ளரசர் ஊர்தியொடும்.

பிரமன் : வரவேண்டும்! வரவேண்டும்! வாழ்வெல்லாம் மீட்டெமக்குத்
தரவேண்டும் உயிர்க்கெமல்லாம் தந்தைஎனும் அருட்கடலே,
நீக்கமற உம்மிடமே நேர்ந்ததுயர் எடுத்துரைப்போம்.
ஆக்கமுற உம்மைஅல்லால் அசுரகுலம் யார்அழிப்பார்?

சிவன் : இலங்கையர்கோன் இராவணர்க்கு யாம்தந்த முன்வரத்தால்
பலம்கொண்ட படிஎல்லாம் பாவியவன் நடக்கின்றான்.
பிரமன்முதல் தேவர்களும் பெரும்தவத்து முனிவர்களும்
வரமதுகொண்டு அவன்புரியும் வதைக்காளாய்த் தவிக்கின்றார்.

இந்திரன் : கிரமமின்றிச் செயும்அவன்அக் கிரமங்களைக் கண்டேதாம்
தருமமென்ற தேவதையும் தலைகவிழ்ந்து படுத்துவிட்டாள்.

பிரமன் : ஆம். இதற்கே எந்தைநீர்தான் அறம்தக்க செயவேண்டும்.
நாம்இதற்கு மேல்செய்ய நயவழியும் சொலவேண்டும்.

திருமால் : அஞ்சஇனித் தேவைஇல்லை; அரன்முதலாம் தேவர்களே,
வஞ்சமுள்ள இராவணனின் வமிசத்தை இலங்கைவிட்டே
வேரறுத்துச் சாய்த்திடுவோம்; வேதனைகள் இனிவேண்டா.
பேரறத்துத் தேவர்களாம் பிரமனொடேன் கட்டளையை
வாங்கிஉடன் பூமியிலே வானராய்ப் பிறப்பெடுங்கள்.
ஆங்கெனது கைச்சங்கும் ஆழிதிருச் சக்கரமும்
தாங்குமென்றன் சேடனுமே தம்பியராய்ப் பிறப்பெடுப்பர்
மானிடரும் வானர ருமாய்அந்த அரக்கர்தமை
ஊனிடமே இல்லாமல் உடன்அழித்தும் உமைக்காப்போம்.

இந்திரன் : பெருமானே, உமதாணை; பிறப்பெடுப்போம் இப்போதே;
வரும்ஆணைக் கேற்றபடி வாழ்ந்திருப்போம் அங்கங்கே
பிரமதேவர் அப்போதே பிறந்துவிட்டார் ஜாம்பவனாய்
கிரமமுடன் நானும்தான் கிளம்புகிறேன் வாலிஎன.

பிரமன் : சூரியன்அவ் வாலிதம்பி சுக்ரீவன் ஆகட்டும்.
வீரியநல் வாயுமகன் வித்தக சிவாமிசமாய்க்
காரியம் அனைத்திலுமே கைகொடுத்தும் உதவட்டும்.
நேரியதீத் தெய்வமுமே நீலனென மாறட்டும்.

இந்திரன்: வாருங்கள், போகலாம்; வானராய்க் கிஷ்கிந்தை
ஊரெங்கும் சேரலாம்; உடன்ஒருங்கே புறப்படுங்கள்!

(அயோத்தி நகர் அரண்மனையில் தசரதர் கவலையோடிருத்தல் -
குலகுரு வசிஷ்டர் காரணம் கேட்டல்)

வசிஷ்டர் : பத்துரதம் ஒருங்கேறிப் பலபேரைக் காத்தமன்னா உன்
முத்துமுகம் கூம்பியதேன்? மொழிந்திடுக, காரணத்தை.

1024

தசரதர் : ரதம்பத்தும் ஏறியதால் ராச்சியத்தில் தசரதனாய்
இதம்பெற்றேன் பேர்எனிலும் எனக்குள்ஓர் குறையுண்டு.

வசிஷ்டர் : குறைஎன்ன மன்னவனே? கூறுகநீ வெளிப்படையாய்.

தசரதர் : அறுபதினா யிரம்ஆண்டாய் ஆட்சியைநான் கொண்டிருந்தும்
மறுபதில் கூறாத மனைமூவர் பெண்டிருந்தும்
முன்நாளில் எனக்குமுன்மூ தாதையர்கள் ஆண்டபடிப்
பின்னாளில் ஆளவுமோர் பிள்ளைவரம் பெறவிலைநான்
இக்குறைதான் என்நெஞ்சை இராப்பகலாய்ப் பிழிகிறது!

வசிஷ்டர் : மெய்க்குறைதான் சொன்னதெலாம்; மேலும்சொல்லா துணர்ந்துகொண்டேன்
அறம்காக்கும் மன்னனுக்கே அவசியம்தான் இக்கவலை
சிரம்காக்கும் முடிசூடச் செங்கோலும் கைப்பிடிக்கப்
பரம்பரையாம் ரகுகுலத்தைப் பாதுகாப்பாய்ப் பின்தொடரத்
திறம்பெறும்ஓர் சந்ததியும் தேவைதான் அரசனுக்கே!

தசரதர் : வரம்பெறும்அப் பிள்ளைநல வாய்ப்புக்கே வழிஎன்னதான்?

வசிஷ்டர் : சொல்லுகிறேன் மன்னவனே; சுருக்காக வேள்விஒன்றை
நல்லவிதம் நடத்துவையேல் நாடிவரும் அப்பேறு!

தசரதர் : யாரைக் கொண்(டு) இவ்வேள்வி அவ்விதமாய் நடத்துவது?

வசிஷ்டர் : பேருக்கே பலர்இருந்தும் பெருமைதரா(து) அவ்வேள்வி
சீருக்கும் சிறப்புக்கும் சேரஒரு மாமுனிவர்
பாரொக்கும் அங்கதேசம் பால்இருக்கும் தவச்சிகரம்
கலைக்கோட்டு மாமுனிவர் கரங்களால்தான் அவ்வேள்வி
நிலைக்கோட்ட மாய்நடந்தால் நிச்சயம்அப் பயன்கிட்டும்.

அதுமட்டு மல்லமன்னா அக்கோட்டு மாமுனியால்
நிதம்கொட்டும் மாமழைமேல் நிலவளமும் தான்கொழிக்கும்
அங்கமன்னர் அம்முனியை அதற்கென்றே மருகனுமாய்த்
தங்கமுன்னம் மகளையுமே தந்தபடி வைத்துள்ளார்.

தசரதர் : அவ்விதமேல் நாமேபோய் அழைத்துவரு வோம்அவரை
எவ்விதமும் குறைவின்றி இவ்வேள்வி நடந்திடணும்
தூதேதும் அனுப்பாமல் தொல்முனியை நாமேபோய்
வாதேதும் இல்லாமல் வரவழைத்து வேள்விசெய்வோம்.

(வேத ஒலிகள் முழங்குகின்றன வேள்வி நிகழ்கிறது மந்திர இசைகளும் மறையோர்களால் ஒலிக்கப்பெறுகின்றன)

(கலைக்கோட்டு முனிவரால் வேள்வி நிகழ்ந்து நிறைவேறியதும்)

தசரதர் : கருணையொடும் வேள்வியினைக் கச்சிதமாய் நடத்திவைத்த
அருணகலை மாமுனியே, ஆயிரம்கால் எங்கள்நன்றி.

கலை : வேள்வியினைச் சிறப்பாக வெற்றிபெற நடத்திவிட்டோம்
கேள்; வியக்க இவ்வேள்வி கிட்டிவரும் அதன்முடிவில்
புனிதமிகும் அமிர்தமொன்று புலப்படும்ஓர் பூதம்பால்
இனிதுமிக வாங்கிஅதை ஈந்திடுக தேலியர்க்கு.

தசரதர் : அவ்வாறே செய்கின்றோம், ஆணைஎன மாமுனியே.

கலை : செய்வாயேல் மூவுலகும் சேவிக்கும் பிள்ளைநலம்
நிச்சயமாய் அரண்மனையில் நிகழ்ந்துவிடும், சீக்கிரமே!
இதோஅந்த அமிர்தகிண்ணம் ஏந்திவரும் பூதம்பார்!

தசரதர் : இப்பொழுதே பங்குவைத்து - மதுரமொழி மனைவியர்க்கு
மகிழ்ந்துண்ண அனுப்புகின்றேன்.

கலைக் : கோசலைக்கு முதற்பங்கும் கொடுத்ததன்பின் கைகேயி
பாசம்மிக்க கைக்கடுத்த பங்கினையும் தந்துவிட்டுச்
சுமித்திரைக்கும் ஒருபங்கு சூழ்ந்து அதிலும் மிச்சமுண்டேல்
அமிர்தத்தின் அப்பங்கும் அவருக்கே தந்திடுக.

தசரதர் : யார் அங்கே பாங்கியரே, ஆணை இது செய்திடுக.

பணிப்பெண்: தாருங்கள் மாவேந்தே; தவறாமல் செய்கின்றோம்.

(சில மாதங்கள் சென்றபின் அயோத்தி அரண்மனையில் குழந்தைகள் பிறந்துவிடுகின்றன குழந்தைகளின் மழலை ஒலி - அழுகை ஒலி மென்மையாகப் பின்னணியில் ஒலிக்கின்றன. இச்சூழ்நிலையில்)

கோசலை வயிற்றில் திருமால் திருஅவதாரம் செய்தல்.

ஆயிடை, பருவம்வந்து அடைந்த எல்லையின்
மாஇரு மண்மகள் மகிழ்வின் ஓங்கிட
வேய்புனர் பூசமும், விண்ணு ளோர்களும்
தூயகர்க் கடகமும், எழுந்து துள்ளவே.

ஒருபகல் உலகுஎலாம் உதரத்துள் பொதிந்து
அருமறைக்கு உணர்வுஅரும் அவனை, அஞ்சனக்
கருமுகிற் கொழுந்துஎழில் காட்டும் சோதியை;
திருஉறப் பயந்தனள்; திறம்கொள் கோசலை.

பணிப்பெண்: பங்கமிர்தம் தந்தபடிப் பாலர்நால்வர் பிறந்துவிட்டார்
தங்கநிகர் மதலைஒன்று தாய்கோ சலைபெற்றார்.

வசிஷ்டர் : ரம்மியமாய் அச்சேய்க்கு ராமனெனப் பேர்வைப்போம்
விம்மிதமாய் அச்சேயை விண்ணவர்க்கும் மேல்வளர்ப்போம்.

பணிப்பெண்: கேகயமா தரசிக்கும் கிட்டியதோர் மணிக்குழந்தை
தேகமெலாம் பேரொளிதான்; தெய்வீகம் சுடர்கிறது!

வசிஷ்டர் : பரதனென அச்சேய்க்குப் பலர்போற்றப் பேர்இடுவோம்
விரதமென உடன்பிறந்தோர் விரும்பஅவன் வளர்ந்திடுவான்.

பணிப்பெண்: சுமித்திரையாம் இளையாளும் சூல்கொண்டே இருபங்கின்
நிமித்திகமாய் மகவிரண்டை நிறைமதிபோல் பெற்றுள்ளார்.

வசிஷ்டர் : இலக்குவனும் சத்துருக்கனும் எனஇவர்க்குப் பேரிட்டுத்
துலக்கமுற நாம்வளர்ப்போம்; தொல்புகழை இவர் வளர்ப்பார்.

தசரதர் : ஆம்; இந்தக் குழந்தைகளை அவ்வாறே வளர்ப்பதற்குத்
தாம் மிகுந்த அக்கறையும் தாங்கள்தான் கொளவேணும்
பேரிட்ட வசிட்டகுரு பீடமெனும் தங்களிடம்
சீரிட்டிக் குழந்தைகள்தாம் சிறந்த பல வித்தைகற்றால்
நாட்டுக்குப் பெருமை; இந்த நால்வருக்கும் பெருமையுண்டு
கேட்டுக்கொள் கிறேன், பெரியோய், கீர்த்திதர ஏற்றிடுக!

வசிஷ்டர் : ஏற்கின்றேன், அவ்வாறே; இனிக்கவலை நீவிடுக;
காக்கின்ற தெய்வமெனும் கடல்வண்ண மால்அவனே
ராமனெனப் பிறந்துள்ளான். ரகசியத்தை நான்அறிவேன்
சேமநறும் புனர்பூசம் சீர்நவமித் திதியொருநல்

நேமமிகு கடகத்தில் நிமிர்வியாழன் உச்சமுமாய்த்
தாம்இருக்க முதற்பிள்ளை தவப்பயனாய்த் தோன்றியுள்ளான்
ஆம்; அவன்தன் சங்குசக்ர ஆயுதமும் சேடனுமே
நாம்மகிழப் பின்பிறந்தார், நாடியுகம் வாழ்விக்கப்
பின்பிறந்தோர் கோள்நிலையும் பெருமையதாய் உளதுஎனவே
நம்பியர்இந் நால்வருக்கும் நாமேகுரு வாய்அமைவோம்.

தசரதர் : ஆசிரிய மணியாய்நீர் அமைவதால்இப் பிள்ளைகளின்
பேசரிய இன்பமொடு பெரும்பேறும் யான்பெற்றேன்
தக்கதொரு ஆசிரியர் தாம்இலையேல் மாணவரும்
மிக்கபெரும் பயன்அடையார்; மேல்நிலையும் தான்அமையார்.

வசிஷ்டர் : எல்லாமே நலமாகும் எதிர்கால மேல்இவர்தம்
வல்லாண்மை, காப்பியமாய் வாழத்தான் போகிறது!

தசரதர் : வாருங்கள் நாமும்தான் வாழ்த்துவம்இச் செல்வங்களை!
சீரெங்கும் ஒலித்திடுமாய்ச் சீராம ஜெயம்என்றே!

(குழந்தைகளின் பிறந்தநாள் கொண்டாட்டம் குதூகலமான இசைக்கும்மாளியாக நிகழ்த்தப்பெறுகிறது.)

(அயோத்தி அரண்மனையில் வசிஷ்டரும் தசரதரும் உரையாடுதல்.)

(நல்லபடியாகப் பிள்ளைகள் நால்வரும் சகல வித்தைகளையும் வசிஷ்டர் பால் கற்று வளர்கின்றனர் அதனால் பெருமகிழ்வு அடைந்து தசரதரை நோக்கி...)

வசிஷ்டர் : ரகுவம்சப் பேரரசே, ராமன்முதல் நால்வருமே
மிகவம்சம் ஓங்கிடவே மேன்மேலும் கற்றுவிட்டார்.
என்னகுறை இனிஉனக்கு? இனிதுஅவர் கோசலத்தைப்
பின்னர்தொடர்ந்து ஆள்வதற்குப் பெரும்பெரும் தகுதியும்
ஆனார்.

தசரதர் : என்னாலே ஆவதென்ன? எல்லாம்உங் கள்திறம்தான்.
பொன்னாக விளைவதெல்லாம் பொறுப்புழவர் செயல்தானே!
தங்கமணிப் பிள்ளைகளாய்த் தகுதிபெறச் செய்துவீட்டீர்.
சிங்கமணிப் பிள்ளைகளாய்ச் சிறக்கவுமே வைத்துவிட்டீர்.

வசிஷ்டர் : பிள்ளைகளின் திறமைகள்தாம் பெரிதுமிதன் காரணமாம்.
கொள்ளைஎழில் ராமனொடு கூடநிழல் இலக்குவன்தான்

பரதனொடு சத்துருக்கன் பார்சற்றும் பிரிந்தறியார்.
விரதமென நால்வருமே விடாஅன்பில் தோழர்கள்தாம்
சொல்லுமுன்பே இராமனைப்பின் தொடரஇதோ இலக்குவனும்
வெல்லுமொரு நேர்மையோடு வெற்றியைப்போல் வந்துவிட்டாள்.

(இராமனும் இலக்குவனும் அங்கு வருதல்)

தசரதர் : வாஇராமா, வாஇலக்குவா, வாழ்த்துங்கள் இருவருக்கும்.

வசிஷ்டர் : சீராமா, தம்பியொடு சேர்த்துனக்கும் வாழ்த்துகள்தாம்.

இராமன் : தந்தையே குருபிரானே, தங்களுக்கெம் வணக்கங்கள்.

தசரதர் : வந்தஎம் செல்வங்காள் வருவதுநீர் எங்கிருந்து?

இராமன் : நகரத்து மாந்தர்களின் நலம்எல்லாம் வீடுதொறும்
பகரத்தான் கேட்டுவிட்டுஇப் படிஇங்கும் வந்துவிட்டோம்.

இலக்குவன்: குருபிரானொடு உங்களையும் கும்பிட்டு வாழ்த்துறத்தான்
ஒருமனதாய் அண்ணனொடும் உடன்இங்கு
புகுந்துவிட்டோம்

வசிஷ்டர் : வளர்பயிரின் வளமெல்லாம் முளையிலேயே தெரியுமெனும்
பழமொழியின் முழுப்பொருளைப் பார்இங்கு
தெரிந்துகொண்டோம்

தசரதர் : பின்நாளில் நாட்டுநலம் பெருகிவரும் மக்கள்நலம்
எந்நாளும் அக்கறையாய் எண்ணுகிற பெரும்குணம்தான்
இப்போதே இளம்சூரியர் இவர்கள்பால் மிளிர்கிறது!

வசிஷ்டர் : தப்பாதே இவரால்இத் தாரணியே பெருமைபெறும்!

தசரதர் : சரி குழந்தை காள், உங்கள் தனிமனைக்குப் போய் வருக
பரிவுடன்உம் அன்னைமார் பார்த்திருப்பர் எதிர்நோக்கி.

(பேசிக்கொண்டிருக்கும் போதே எதிர்பாராது விசுவாமித்திரர் அங்கே வருகிறார். விசுவாமித்திரரின் வருகையைக் கண்டு...)

தசரதர் : வாருங்கள் வாருங்கள் வாய்மைகுன்றா முனிபுங்கவ,
நேர்உங்கள் தரிசனத்தால் நிறைமகிழ்வே பெற்றுவிட்டோம்.

விசுவா : வந்ததற்குக் காரணமும் வாய்ப்புமுண்டு மாமன்னா
முந்தஉன்பால் அதனால்தான் முறையொடுமாய்
இங்கெழுந்தோம்!

தசரதர் : தவக்குன்றே, சொல்லுங்கள்; தாமதியோம்; நடத்திவைப்போம்.
உவக்கின்ற வாறேயாம் உங்களெண்ணம் போல் புரிவோம்.

விசுவா : தேவர்க்கும் முனிவர்க்கும் தீராத இடர்வருமேல்
மூவர்க்கும் அவரைவிட்டால் முறையிடவே றெவர்உண்டு?
காலங்கள் தவறாமல் கடவுளர்க்கு வேள்விசெய்தல்
சீலம்கொள் முனிவர்தம் சிறந்தகட மைஅல்லவா?

வசிஷ்டர் : கடமைமட்டு மா? அதுதான் கடவுளர்க்கே வழிபாடு!
மடமடெனக் சொல்லுங்கள்; மன்னர்கேட்டு ஆவனசெய்வார்.

விசுவா : அவ்வேள்வி நடக்கும்கால் அரக்கர்குலம் ஆங்காங்கே
எவ்வேளை யும்வந்தே இடர்மிகவும் புரிகிறது.
ஊனோடு கள்குடியும் உண்டவராய் யாகத்தைக்
கானோடு வீணாக்கக் கலைத்தபடித் திரிகிறது.

(விசுவாமித்திரர் சற்றுத் தயங்குதல்.)

வசிஷ்டர் : தயக்கமென்ன? விசுவமகா தவமுனியே தொடருங்கள்.

விசுவா : மயக்கமே வருகிறது மகாக்கொடுமை எண்ணுங்கால்
எங்கெங்கும் ஊன்சதைகள்! எங்கெங்கும் பெரும்பிணங்கள்!
அங்கங்கு கால்நடைகள் ஆயிரமாய் உயிர்ப்பலிகள்!
வேள்வியின் தூய்மையையே வேணுமட்டும் மிகக்கெடுத்துக்
கேள்விமுறை இல்லாமல் கேவலங்கள் பண்ணுகிறார்!
பார்க்குமிடம் எல்லாமே பச்சைரத்தப் படையல்கள்.
யார்க்குமனம் தாங்குமந்த அரக்கர்செயல் பார்த்திருக்க?
அவரைஎலாம் விரட்டியடித்து ஆங்காங்கு வேள்வியினைத்
தவறாமல் காப்பதற்குத் தருவாய்உன் முதல்மகனை.

(வேள்வி காக்க இராமனைத் தன்னுடன் அனுப்புமாறு கேட்டல்)

(பாட்டு)

தருவனத்துள் யான்இயற்றும் தகைவேள்விக்கு
இடையூறா, தவம்செய் வோர்கள்
வெருவரச்சென்று அடைகாம வெகுளிஎன
நிருதர்இடை விலக்கா வண்ணம்

செருமுகத்துக் காத்திஎன நின்சிறுவர்
நால்வரினும் கரிய செம்மல்
ஒருவனைத்தந் திடுதிஎன உயிர்இரக்கம்
கொடுங்கூற்றின் உளையச் சொன்னான்.

(தசரதரின் மவுனம் கண்டு...)

விசுவா : என்னமௌனம்? எதைஎண்ணிச் சிந்தனைகள்?
முன்னம்அந்தச் சம்பரனை முற்றுமே ஒழித்துவிட்டு
இந்திரனை வாழ்வித்த ஏந்தலும் நீஅல்லவோ?
மைந்தனைமுன் அனுப்பிவை; மவுனங்களே வேண்டாம்.

தசரதர் : சின்னஞ்சிறு பையன்அவன் சீர்அதிலும் தலைப்பிள்ளை
என்னஅவன் சாதிப்பான்? ஏன்நானே வருகின்றேன்.
உங்களிடர் அத்தனையும் ஒருநொடியில் தீர்த்துவைப்பேன்.

விசுவா : பொங்குபுகழ் தசரதாஉன் பொறுப்பான பதில்இதுவா?
வேண்டாம் வேண் டாம்இதன்மேல் வேறுபதில் தேவைஇல்லை
மீண்டாங்கு வேறுவழி மேல்தேடிக் கொள்கின்றேன்!

வசிஷ்டா : மாமுனியே பொறுத்திடுவீர் வசிட்டன்நான் சொல்கின்றேன்;
நீர் முனியத் தேவை இல்லை.
(தசரதரை நோக்கி)
கோசிகராம் இவர்பின்னே குலமுதல்வன் செல்லவீடு
ஆசியொடு நன்மைபல அதனால்பின் உண்டாகும்.

விசுவா : யோசனையே தேவைஇல்லை யூகமுமே தேவைஇல்லை
மாசிறியோன் ஆனாலும் மகிமை மிக்கோன் இராமனிவன்.

தசரதர் : அவ்விதமேல் அழைக்கின்றேன் அன்போடு இராமனுடன்
செவ்விஇள இலக்குவனும் செல்லட்டும் உறுதுணையாய்!

(குழந்தைகளை அழைத்து)

குழந்தை இராமா, இலக்குமணா குன்றாயித் தவப்பெரியார்
விழைந்தபடி யேஅவர்தம் வேள்விக்குக் காப்பாக
இருந்துதவி வாருங்கள், இவர்இடும்எக் கட்டளையும்
பொருந்தஉடன் ஏற்றபடிப் பொறுப்புடனே நடத்திடுங்கள்.

வசிஷ்டர் : பெரும்முனியே, இவர்கள்பெரும் பிழைசெய்யினும்
பொறுத்திடுங்கள்
வரும்உங்கள் மக்களைப்போல் வழிநடத்திச் செல்லுங்கள்.

விசுவா : கவலைகளை விட்டிடுங்கள் கண்மணிகள் இவர்களால்பின்
நுவலரிய சாதனைகள் நொடிதோறும் நடக்கஉண்டு.
வருகிறோம் மன்னரொடு வசிட்டராம் குருமணியே,
பெருகட்டும் புகழ்உமக்கு; பிள்ளைகளால் வரும்உமக்கு!

இராமன் : வருகிறோம் தந்தையே; வருகிறோம் குலகுருவே;

(இராம இலக்குமணர்களை விசுவாமித்திரர் அழைத்துச் செல்லுதல் - அதற்கான ஒலிக்குறிப்பு இசையுடன்.)

விசுவா : சரயுநதி கடந்துவிட்டோம்; சாருமிந்தப் பாலைநிலம்
விரையுமுங்கள் இருவருக்கும் வெப்பமெனத் தான்இருக்கும்.

இராமன் : காரணம்என், தவப்பெரியோராய்? கனலாய்க்கொப் புளிக்கிறதே!

விசுவா : காரணம்இங் கேதான்முன் காமனவன் எரிந்துபட்டான்.
சிவன்தவத்தைக் கெடுக்கஎண்ணிச் சிறுமையாய் அம்பெறிய
அவன்சினத்தால் சாம்பலென அழிந்துபட்டது இவ்இடம்தான்!
வெப்பத்தின் கொடுமைஉம்மேல் விழாதுபலை அதிபலையாய்
நுட்பத்து மந்திரங்கள் நுமக்குரைப்பேன்; இனிச்சுடாது.

(அப்போது அங்கு தாடகை அதிக பயங்கரமாய்த் தோன்றுகிறாள்)

அதோ பாருங்கள்! அவள்தான் அரக்கியாம் தாடகைஎன்பாள்!
மெதுவாக அல்லஅவள்; மிகப்புயலாய் வருகின்றாள்!

இராமன் : யார்இவளாம் தவமுனியே? யாதுஇவளின் வரலாறு?

விசுவா : காரிகையாய்ப் பிறந்தாலும் கட்டழிந்து இராவணனின்
ஏவல்படி முனிவர்களை எல்லாமே கொன்று அவர்தம்
வேள்விகளை யும்கெடுக்கும் வேலைஒன்றே இவளுக்கு!

இராமன் : ஆனாலும் பெண்தானே! அடக்கமேஇல் லாதவளா?

விசுவா : கான்ஆளும் இவள்பெண்ணாய்க் கருதவே இடம்இல்லை
இவளும்இவள் மகன்களுமே இழிசெயலாய் வேள்விகளைக்
கவிழும்வகை செய்வதொன்றே கடமைஎனக் கொண்டவர்கள்.

தாடகை : யாரடா நீங்களெலாம்? அப்படியே விழுங்கிடுவேன்!

விசுவா : வீரமதைப் பார்த்தீர்களா? விழுங்கிடுவேன் என்கின்றாள்
ஆகையினால் முன்இவளை அழிப்பதொன்றே பெருந்தருமம்!
ஏகவிடு உன்அம்பை; இவள்முதலில் மடியட்டும்.
வேகமிகும் உன்கணைக்கே விருந்திவளாய் முடியட்டும்.
(இராமன் சற்றுத் தயங்குதல்)
பெண்என்று தயங்காதே பின்இவளால் பாபமில்லை
புண்ணியம்தான் நேருமல்லால் பொருந்துதல்வே றெதுவுமில்லை.

இராமன் : இதோ வில்லை வளைத்துவிட்டேன்; எய்துவிட்டேன் அம்பையுமே!

(தாடகை ஓவென அலறிக் கொண்டு கீழே விழுந்து மடிகிறாள் அதற்கான ஒலிக்குறிப்பு.)

விசுவா : அதோகதிதான் பார்அங்கே அடிபட்டே பெருந்தரையில்
வீழ்ந்துவிட்டாள் தாடகைதான்; வேர்அறுந்த மரம்போல.

இராமன் : ஈந்துவிட்ட கட்டளையை ஏற்காதும் இருப்போமா?

விசுவா : இனிஅணுவும் கவலைஇல்லை எவர்க்குமினித் துயருமில்லை
நனிவிரைந்து மேற்செல்வோம்; நடங்கள்இளம் சிங்கங்களே.

(மூவரும் நடந்து செல்லும் ஒலிக்குறிப்பு சில நொடிகள் கழித்து)

விசுவா : தக்கஇடம் வந்துவிட்டோம்; தான்இதுவே சித்தாச்ரமம்!
பக்கபலம் நீர்இருக்கப் பக்தியுடன் வேள்வி ஒன்று
செய்யஇங்கே விழைகின்றேன் செய்யலாமா, இளவல்காள்?

இராமன் : ஐய உங்கள் விருப்பம்போல் ஆகட்டும்; தம்பியொடு
வேள்விக்கே காவலெனும் வீரர்களாய் யாம்இருப்போம்
கேள்விக்கே இடம்இன்றிக் கிட்டவரும் தடைதகர்ப்போம்.

(வேள்வி நிறைவேறுகிறது.)

விசுவா : சொன்னவண்ண மேவேள்வி சுற்றிவந்து காத்தீர்கள்.
என்னவண்ணம் கைம்மாறும் இருவருக்கும் செய்திடுவேன்?

இராமன் : கைம்மாறும் வேண்டுமோ, கடமைகளைச் செய்வதற்கு?

விசுவா : மைவண்ண இராகவாஉன் மகத்தான ஆற்றலினை
எவ்வண்ணம் புகழுவது? இருந்தஇட மேதம்பி
காவல்செய்ய நீயோஉன் கண்இமைக்காதுமுற்றும்
ஆவலுடன் வேள்வியினை அயராது சுற்றி வந்தாய்.
தாடகையின் பிள்ளைகள்அத் தறுதலையரைவென்று
ஓடோடி மாரீசனும் ஒளியவே செய்துவிட்டீர்!

இராமன் : செய்யஇனி என்னஉண்டு? செப்புங்கள் மாமுனியே,
உய்யஇனி யும்செய்ய ஒருங்கேயாம் காத்துள்ளோம்!

விசுவா : செய்யஇனிப் பலஉண்டு; சீராய்இப் போதைக்கு
வையம்புகழ் மிதிலைக்கு வழிநடப்போம்; வாருங்கள்.

(வழியில் ஒரு கல் இராமனின் காலில் இடறுகிறது.)

இலக்குவன் : என்னஇது விந்தைஅண்ணா? இடறியகால் உங்களின்பால்
முன்னமொரு பெண்வடிவில் முகம்கவிந்து நிற்கிறதே!

விசுவா : ஆம் இப்பெண் கோதமனின் அரும்துணை அகலிகையாம்
தாம்முன்னம் இந்திரனால் தன்பெண்மைக் கிழிவுபெற்றுக்
கணவரிட்ட சாபத்தால் கல்லானாள் தற்போதுஅத்
துணைவரிட்ட சொல்படிப்புத் துயிரையும் இங்குபெற்றாள்.
கைவண்ணம் இராமாநீ காத்த வேள் வியில்கண்டேன்.
மெய்வண்ணக் கால்வண்ணம் மின்ன இங்கோ இன்றுகண்டேன்

(அகலிகை சாபம் தீர்த்த இராமனைப் பாராட்டுதல்.)
(பாராட்டுப் பாட்டு)

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனிஇந்த உலகுக்குளல்லாம்
உய்வண்ணம் அன்றி மற்றுஓர் உயர்வண்ணம் உறுவது உண்டோ?
மைவண்ணத்து அரக்கிபெண் மழைவண்ணத்து அண்ண லே!உன்
கைவண்ணம் அங்குக் கண்டேன். காலவண்ணம் இங்குக் கண்டேன்.

இராமன் : எல்லாமே உங்கள்வழி எங்களுக்கு வாய்த்தனவாம்.

விசுவா : பல்லாண்டு வாழ்கநீவிர்; பயணம்இனி மிதிலைசெல்வோம்.

(மிதிலை நோக்கி மூவரும் நடக்கிறார்கள்)

(மிதிலை நகர்ப்புரத்தில் இராம இலக்குமணரும் விசுவாமித்திரரும் தொடர்ந்து செல்கிறார்கள். வீதி அழகு பார்த்து இராமன் வியந்து பேசுகிறான்.)

இராமன் : கோட்டைஎன்ன? மதில்என்ன? கோபுரம்போல் ஓங்கிநிற்கும்
தேட்டமென்ன! அழகழகு! தேவபுரி போல்உள்ளதே!

விசுவா : ஆம் ராமா; இதுதான்நாம் அணுகி வந்த மிதிலை நகர்!
பூமாதும் கலைமாதும் பொலிந்தொருங்குத் திகழ்வரிங்கு
சனகரெனும் மனத்துறவி சத்தியம்மேல் ஆளுவதால்
கனதனமும் பலகலையும் கைகோக்கும் செல்வபுரி!

(இராமனின் பார்வை எங்கோ இருப்பது கண்டு)

விசுவா : ஏன் இராமா, அங்கே உன் இருவிழியும் கொள்கவனம்?
வான்இலகும் மாடத்தில் வனைந்தெதைநீ பார்க்கின்றாய்?

இராமன் : ஒன்றுமில்லை மாமுனியே, உயர்ந்துயர்ந்த மாடங்கள்
நின்றுமெல்லப் பாப்பதற்கு நிமிர்ந்திருக்கும் வீதிகள்தாம்
கண்களையும் கருத்தினையும் கவர்ந்திழுக்க எனைமறந்தேன்

விசுவா : கண்ணோடு கண்கோக்கக் கவ்வும்எழில் புரிகிறது.
மண்ணோடு தொடுவானம் மருவுவதும் தெரிகிறது
எல்லாம்நன் மைக்கேதான்; எய்திடுவோம் சனகனில்லம்
வில்லாண்மை இளைஞர்காள், விரைந்தெனையே தொடருங்கள்

(அப்பொழுது கன்னிமாடத்தில் சீதை, வீதியில் போகும் இராமனையே பார்த்துக் கொண்டிருப்பதைத் தோழி நீலமாலை பார்த்து விடுகிறாள்)

(இராமனும் சீதையும் ஒருவரையொருவர் கண்டு காதல் கொள்ளுதல்)
(பார்வைப் பாட்டு)

எண்ணரு நலத்தினள் இணையள் நின்றுழி
கண்ணொடு கண்இணை கவ்வி ஒன்றைஒன்று
உண்ணவும், நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்!

மருங்குஇலா நங்கையும் வசைஇல் ஐயனும்
ஒருங்கிய இரண்டுஉடற்கு உயிர்ஒன்று ஆயினார்
கருங்கடல் பள்ளியில் கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ?

நீலமாலை : வைத்தவிழி வாங்காமல் வரிந்தெதைநீ பார்க்கின்றாய்?
மொய்த்தவிழி திரும்பஅந்த முகவிழியும் தடுக்கிறதோ?

சீதை : போடிபோ, அவ்வழகன் போல்எவரும் புவியில்இல்லை.
கோடிப்பொன் சூரியர்போல் குவிந்துஅட்டா பேரழகு!
என்னநடை! என்னஎழில்! எங்கும்அதில் தெய்விகம்தான்.
முன்னையொரு சடைமுனிவர் - முறையோடு பின்தொடரப்
பின்னையொரு இளம்குரிசில் பெறஇவர்தம் நடுவிலொரு
மின்னல்தான் கம்பீரமாய் மிதக்கிறது, யார்எவரோ?

நீலமாலை : அன்னவர்தாம் சூர்யகுல அயோத்திமன்னர் தசரதரின்
முன்னவராம்; தொடர்பவரோ, மூன்றாவது பிள்ளையாம்.
எல்லாமே கேட்டுத்தான் இங்குவந்தேன் சீதையம்மா.

சீதை : வல்லாய்நீ நீலமாலை; வாழ்த்தத்தான் வேண்டுமுனை!

நீலமாலை : வாழ்த்தெல்லாம் பின்னாலே வைத்திடுங்கள்; தேவிநீங்கள்
பார்த்தஅந்தச் சுந்தரனே பதிஉமக்காய் ஆமையட்டும்!
இருவருமே இடம் மாறி இதயங்கள் புகுந்துகொண்டீர்
மருவவும்பின் பேச்செதற்கு? மற்றமற்றச் செயல்எதற்கு?

சீதை : என்னேடி செய்வேன்நான்? எத்தனையோ பேர்முயன்றும்
பின்னோடிப் போய்விடவே பீதிதரும் சிவதனுசாம்
வில்லைஒடிப் பார்க்கன்றோ விரைந்துதந்தை மணம்முடிப்பார்.
சொல்லுமந்த நிபந்தனைபோல் சுந்தரன்வில் ஒடிப்பாரோ?

நீலமாலை : தெய்வசித்தம் நிகழுமது; தேர்கமனம் சீதையம்மா?
கைவசத்தில் எடுத்துவில்லைக் கட்டாயம் அவர்முறிப்பார்!

(மறு காட்சி)
(சனகர் அரண்மனைக்குள் இராம இலக்குமணருடன்
விசுவாமித்திரர் வந்து விடுகிறார் சனகர் வரவேற்கிறார்)

சனகர் : வாருங்கள், வாருங்கள், வருகராஜ தவமுனியே.

விசுவா : சீரும்கொள் நீங்களும்தான் சிறந்துமன் னருள்துறவி!

சனகர் : எல்லாம்உங்கள் வாழ்த்தால்தான்! இவ்விருவர் யார்மகவோ?

விசுவா : பொல்லாத அரக்கர்கள் புகுந்துகொண்டு வனத்தில்தரும்
தொல்லைகளை ஒடுக்கத்தான் துணைக்கிவரை
அழைத்துவந்தேன்
அயோத்திமன்னர் தசரதரின் அரும்புதல்வர் ராம இலக்குமணர்
செயஉத்தமர் இவர்துணைதான் சிறக்கவும்ஓர் வேள்விசெய்து
வழிநேர்ந்த தாடகையும் வானுலகு செல்லவைத்தோம்
பழிநேர்ந்த கல்லும்ராமன் பாதம்பெண் ஆக்கியது

சனகர் : விசுவமெல்லாம் மித்திரராய் விரும்புகிற மாதவத்தீர்,
சிசுவெனினும் நீங்கள்எண்ணின் செகமெல்லாம் வெல்லாரோ?
மாவீர ராய்எதையும் மகத்துவங்கள் ஆக்காரோ?
நாவீறு மாமுனியே நங்கைஎன்பெண் சானகிக்கு
மணாளனென ராமன்வரின் மகாமகா மகிழ்ச்சிகொள்வேன்
குணாளிவர் வில்முறிக்கக் கூடுமோஎன் றெண்ணுகிறேன்.

விசுவா : கவலைகொள்ளத் தேவைகில்லை; கண்ணுதலோன் வில் எனினும்
அவலையே நொறுக்குதல்போல் அரைநொடியில் ஒடித்தெறிவான்.

சனகர் : அவ்விதமேல் நாளைக்கே அவ்வில்லை முறிப்பதற்குத்
திவ்வியமாய் ஏற்பாடு திருவிழாபோல் செய்கின்றேன்

மறுநாள்
(கன்னிமாடத்தில் நீலமாலையும் சீதையும் பேசிக்கொள்கிறார்கள்)

நீலமாலை : உழுபடையின் சால்முனையில் உதித்தனால் சீதைஎனத்
தொழுபவளாய் வந்தமணித் தோகையே, இன்றுனது
ஆசைஎல்லாம் நிறைவேறி அகம்மகிழப் போகிறது.
ஈசனவன் வில்லும்தான் இரண்டாகப் போகிறது.

சீதை : என்னேடி சொல்லுகிறாய்? இயம்பிடுக நீலமாலை

நீலமாலை : முன்னோடி வந்துபலர் முயன்றிடினும் அதோவில்லை
எடுத்தொடிக்க இயலாது ஏமாற்றமாய் நிற்கின்றார்
அடுத்தொடிக்க ராமனெனும் அவ்வழகன் அதோபாரேன்!
வந்துவிட்டான்; நிச்சயமாய் வளைத்தொடிப்பான், அவ்வில்லை!

சீதை : முந்தவிட்டுப் பேரொலிவில் முறிவதன்றோ கேட்கிறது!

நீலமாலை : ஆசைநிறை வேறுமினி; அம்மாநீ அஞ்சாதே,
பேசுமவர் வார்த்தைகளைப் பின்இருந்து செவிமடுப்போம்.

(அரண்மனையின் அரச மண்டபத்தில்)

சனகர் : தேவாதி தேவர்களும் திரள்வலித்தோள் வீரர்களும்
வாழ்வான மன்னர்களும் வாங்கிவில்லை முறிக்கவில்லை.

சதானந்தர் : ஆனால்இவ் இளைஞரன்றோ அரைநொடியில் ஒடித்து
விட்டார்!
தானாய்வில் எடுத்தறியோம்; தளர்ந்துஇற் றதேகேட்டோம்!

சனகர் : தேனான நிகழ்ச்சிஇது; திருமணத்திற் கேற்பாட்டை
வான்நா டரும்வியந்து வாழ்த்தஇனிச் செய்வதுதான்!

விசுவா : செய்திடுமுன் பெற்றோரைச் சீக்கிரமாய் மிதிலைவர
எய்திடுமாய்த் தசரதர்க்கும் ஈன்றெடுத்த தாய்மார்க்கும்
தூதனுப்ப வேண்டும்இன்றே தொடங்கிடுக சனகமன்னா.

சனகா : சேதிஇதோ அவர்க்கின்றே சீக்கிரமாய் அனுப்புகின்றேன்

(சீதையின் கன்னிமாடத்தில்)

நீலமாலை : மனத்திடையே இப்போது மகிழ்வுதானே சீதைஅம்மா?
நினைத்தபடி இராமனேஉன் நேர்கைபற்றப் போகின்றான்
(சனகர் அங்கு வருகிறார்)
வந்துவிட்டார் உன்தந்தை; வாருங்கள் மாமன்னா!

சனகர் : தந்துவிட்ட கவலைஎல்லாம் தான்மறந்து போனதம்மா!

சீதை : என்னஅப்பா சொல்கிறீர்கள்? எடுத்து விளங்கச் சொல்லுங்கள்

சனகர் : முன்னமிந்த நீலமாலை முழுதையுமே சொல்லவில்லை?
உன்னரிய திருமணமே உடன்நிகழப் போகிறது.
என்னரிய சீதையும்நீ இராமனுக்கே ஆகிவிட்டாய்!
மகிழ்ச்சிதா னேஉனக்கு? மலர்முகத்தில் நாணமொடு
நெகிழ்ச்சியும்பார்! அப்பப்பா! நிறைந்துபொங்கி வழிகிறது!

சீதை : எல்லாமே தந்தைநீங்கள் எனக்குவாய்த்த புண்ணியம்தான்.

சனகர் : வல்லான்அவ் இறைவன்தான் வழங்குவன இவைஎல்லாம்.
சரிஇனிமேல் திருமணத்தின் சகலஏற் பாடுகளும்
நெறிஎனநான் முன்னிருந்து நிகழ்த்திடணும்; வருகின்றேன்.

(மிதிலையில் திருமணநாள் கோலாகலம்.
தசரதர் முதல் எல்லோரும் வருகின்றனர்.
சனகர் வரவேற்கின்றார்)

சனகர் : நன்னாளாம் இன்றுமிக நலம்சிறந்த பொன்னாளாம்
பன்னாளே வாய்த்தாலும் பார்அறியார் இந்நாள்போல்
முரசறைந்து மிதிலைஎங்கும் முழக்குங்கள் மணநாளை
அரசர் முதல் அனைவருக்கும் அறிவியுங்கள் இந்நாளை
தோரணங்கள் தொங்கட்டும்; தூங்காமணி மாடமெலாம்
பூரணம்கொள் கும்பங்கள் பொன்னொளியாய் அமையட்டும்.
திருமண மண்டபமும் தெய்விகமாய்ப் பொலியட்டும்
நறுமணம்கொள் தூபதீப நலங்களுமே சூழட்டும்.

பணியாள் : அவ்வாறே செய்கிறோம் ஆணையாய்ப் பேரரசே!

(தசரதர் பரிவாரங்களுடன் திருமண மண்டபத்திற்கு வருதல்)

சனகர் : வாருங்கள், வாருங்கள், வந்தமர்க ஆசனத்தில்.
பேரெங்கும் கோசலைப் பேரரசே வந்தருள்க.

வசிஷ்டர் : மணமகளாம் தேவியினை மண்டபத்திற் கழையுங்கள்.
குணமகளாய் மணத்தவிசில் கொலுஏற அமர்த்துங்கள்.

தசரதர் : ராமனுமே வந்து விட்டான், ரகுதிலகக் குலக்கொழுந்து!
வாமகனே அனைவரையும் வணங்கிவிட்டு மணத்தவிசில்
நேமமுடன் ஏறி அமர், நெஞ்சமெலாம் இனிக்கிறது.
சேமமுடன் வாழ்கஎனச் செல்வியினை என்மகன்பால்
தாரைவார்த்துத் தந்திடுக தருமமிகு சனகஅரசே
ஊரும்வாழ்த்த மக்களுமே உடன்இருந்து வாழ்த்தட்டும்.

சனகர் : இப்போதே என்மகனை ஏந்தல்இந்த இளவலுக்கே
கைப்போதில் நீர்வார்த்துக் கடிமணமாய்த் தருகின்றேன்.

(மங்கல வாத்தியங்கள் முழங்கச் சனகர் தாரை வார்த்துச்
சீதையை இராமன்கையில் வழங்குகிறார்.
மணத் தவிசில் இராமனும் சீதையும் அமர்கின்றனர்.

பாட்டு

மன்றலின் வந்து, மணத்தவிசு ஏறி
வென்றி நெடுந்தகை வீரனும், ஆர்வத்து
இன்துணை அன்னமும், எய்தி இருந்தார்
ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தார்

(சனகன் தாரை வார்த்துக் கொடுத்தல்)

கோமகன் முன்சன கன்குளிர் நல்நீர்
பூமகளும் பொருளும் என, நீ என்
மாமகள் தன்னொடும் மன்னுதி என்னா
தாமரை அன்ன தடக்கையின் ஈந்தான்

சனகர் : பூமகளும் பொருளும்போல் போகமொடு யோகமும்போல்
மாமகள்இச் சீதையொடு மன்னுக இராமாஉன்
தாமரையாம் தடக்கையில் தருகின்றேன். இத்திருவை.
காமர்மன் மதன்ரதிபோல் கலந்துஅறமே நடத்துங்கள்.

வசிஷ்டர் : ஓமகுண்டம் சுற்றி, உடன்வலமாய் வாருங்கள்.
நாம்மகிழ்ந்தும் பொரிதூவி நன்றிவரை வாழ்த்திடுவோம்.

சதானந்தர் : வாழ்த்துகிறோம் வாழ்த்துகிறோம் வாயார வாழ்த்துகிறோம்.
பூத்துகள்விண் மீன்களையே பொரிதூவி புகம்வாழ்த்தும்.

வசிஷ்டர் : பாற்கடலை விட்டுவந்த பரந்தாமன் தான்அந்தப்
பாற்கடலில் தோன்றிவந்த பாவையினைக் கைபற்றும்
கோலம்போல் தோன்றுகிறது. குளிரவிழி மலர்கிறது.
சீலம்பூத் திருக்குமணச் செல்வர்காள், நீவிர்இங்கு
வந்துள்ள அன்னையரை வணங்கிவாழ்த் துப்பெறுங்கள்
தந்தை தசரதரையும் தருமநெறிச் சனகரையும்
முந்த வணங்கி முறையாய்வாழ்த்துப் பெறுங்கள்.

இராமன் : அவ்வாறே செய்கின்றோம் அன்னையே, சிற்றன்னையீர்
தவ்வாமல் எங்களுக்குத் தருகஉங்கள் வாழ்த்தெல்லாம்.

கோசலை : பெருவாழ்வு வாழ்க எனப் பெருமையொடு உன்னையுமுன்
நிறைவாழ்வுச் செல்வியையும் நெஞ்சார வாழ்த்துகிறோம்

(மங்கள இசை மென்மையாய் ஒலிக்கிறது.)

சனகா : கோசலமா மன்னவரே கோரிக்கை ஒன்றும் இத்துடன்
பாச என்பெண் ஊர்மிளையைப் பத்தினியாய் இலக்குவரும்
தம்பிபெண்கள் மாண்டவி தவசுருத கீர்த்தியைப்பரத
நம்பிசத் துருக்கனரும் நன்மணமாய்க் கொளவேண்டும்.

தசரதர் : அப்படியே ஆகட்டும் அவர்மணமும் நடக்கட்டும்
பொற்புடைய திருமணங்கள் போல்உறவும் தொடரட்டும்.

(மங்கல வாத்தியங்கள் மண வாத்தியங்களாயத் தொடர்கின்றன. மணம் முடிந்து எல்லோரும் அயோத்திக்குத் திரும்புகின்றனர்.)

(அயோத்தி அரண்மனையில் மந்திராலோசனை மண்டபம். மன்னர் அழைத்தபடி மந்திரி சுமந்திரர் வசிஷ்டர் அமர்ந்திருக்கின்றனர்.)

தசரதர் : மாதவத்துக் குலப்பெரியீர் மந்திரிகாள், உங்களைஇப்
போதழைத்த காரணத்தைப் புரிந்துகொளச் சொல்லுகின்றேன்
வயதெனக்கோ ஆயிற்று; வருடம்அறு பதினாயிரமும்
பெயர்தரவே ஆண்டுவிட்டேன் பின்தொடர ஆற்றலில்லை
கண்ணாடி முன்இருந்து கண்டசிறு நரைஒன்றே
உள்நாடி என்முதுமை உணர்த்தியது; ஆகையினால்
மூத்தமகன் இராமனுக்கே முடிசூட்டி நான்துறவு
காத்துவிட எண்ணுகிறேன்; கருத்தென்ன, சரிதானே?

வசிஷ்டர் : சரியான கருத்தேதான்; தவறொன்றும் இல்லைஇதில்
நெறியான நன்றி அல்லால் நினைப்பாரோ, வேறெதுவும்?

சுமந்திரர் : காலத்தை உணர்ந்துசெயும் கருத்தான முடிவிதுதான்.
கோலத்தின் முதுமையினால் கொள்துறவு தேவையும்தான்!

தசரதர் : அவ்விதமேல் சுமந்திரரே, அழைத்திடுக; இராமனை இங்கே.
சொல்விதமாய்ச் சொல்லிமுடி சூட்டஅவன் ஒப்பவைப்போம்.
அரண்மனையில் கோசலையோடு அனைவருக்கும் இச்செய்தி
விரைவில்சென்று சேர்வதற்கே வேண்டியதைச் செய்யுங்கள்.

சுமந்திரர் : இளவரசர் வந்துவிட்டார்; இதோ அழைத்தும் வந்துவிட்டேன்!

தசரதர் : உளம்நிறைந்த இராமாவா; உனக்குமுடி சூட்டிஇந்த
நாடாளும் பொறுப்பினைஎன் நரைமுதுமைக் காரணத்தால்
ஈடாக ஒப்படைக்க எண்ணியுள்ளேன்; ஏற்பாயா?

இராமன் : தந்தைக்கு மறுவார்த்தை தனயனென்றும் சொல்வேனா?
எந்தைக்கோர் கருத்திருப்பின் ஏற்பதன்றோ மகன்கடமை!

தசரதர் : அவ்விதமேல் முடிசூட்ட அமைவான நன்னாளை
நல்விதமே தேர்ந்தெடுத்து நவிலுகநூல் வல்லோரே.

வசிஷ்டர் : நாளையேஒர் நன்னாள்தான்; நடத்திடலாம் இந்நிகழ்வை.

தசரதர் : சூழஅதற் கேற்பாட்டைச் சுணங்காமல் தொடங்குங்கள்.
முரசறைந்துஇவ் விழாவைநகர் முழுவதுமே அறிவியுங்கள்
அரசவிழா என்பதனால் அனைவர்க்கும் தெரிவியுங்கள்

மறுகாட்சி

(அரண்மனையில் கைகேயி மாளிகை. இராமனுக்கு முடிசூட்டும் விழா ஏற்பாடுகள் கண்டு மந்தரை பொருமுகிறாள்!)

மந்தரை : என்னஇது? முடிசூட்ட இராமனுக்குத் திருவிழாவா?
(தனக்குள்)
அன்னஇது நிகழ்வதற்கே அணுவளவும் விடுவேனா?
சின்னவய தென்னைஅவன் சிறுமைபல செய்தவனாய்
முன்னையும் வில்உருண்டை முதுகெறிந்தான் மறப்பேனா?
விடமாட்டேன் விடமாட்டேன் விழாஇதனை நடத்துதற்கு
கெடமாட்டாக் கைகேயி கிளர்ந்தெழவே தூண்டிவிட்டு.
விழாஎன்று சொல்லுமிதை விழுமாறே செய்திடுவேன்
(தொடர்ந்து) பளார் என்று கன்னமறை பட்டாலே மறந்திடுமா?
பழிதீர்த்துக் கொள்வேன்அப் பாவையினை உசுப்பிவிட்டே
வழிகோத்துக் கொள்வேன்அவ் வஞ்சம்அரங் கேறுதற்கு.
(கைகேயி துயிலும் இடத்தில் சென்று)
என்னேடி கைகேயி, இன்னுமா பெரும்தூக்கம்?
முன்னோடி எழுந்தேவா; முறையிலா அநியாயம்பார்!

கைகேயி : (கண் விழித்து) மந்தரைநீ சொல்வதென்ன? மனப்பதற்றம் ஏன்உனக்கு?

மந்தரை : வந்ததடி மோசம்; உன்றன் வயிறுபெற்ற பரதனுக்கு.

கைகேயி : விளக்கமுடன் சொல்வதைச்சொல்; விபரமுற்றும் புரியவேசொல்.

மந்தரை : முழுக்கஇந்தக் கோசலத்தின் முடிஆட்சி இராமனுக்காம்
தடபுடலாய் ஏற்பாடு தான்அதற்கே நடக்கிறது!
விடலாமா, பரதனையே விட்டரசு போவதற்கு?
உன்நிலைமை என்னாகும்? உணர்ந்துசற்றும் பார்த்தாயா?
மன்னனென அவன்ஆனால் மரியாதை உனக்கில்லை.

கைகேயி : ஏன்இல்லை மரியாதை? இராமனும்என் மகன்தானே!
வான்எல்லை புரியாமல் வந்துதொடு வான்என்கிறாய்!
மூத்தமயிற் கேநடன முன்உரிமை உள்ளதுபோல்
வாய்த்தமயிற் பிள்ளைக்கே வரும்அரசும் மறந்தாயா?

மந்தரை : மறக்கவில்லை; ஆனாலும் மரியாதை உனக்கில்லை.
சிறக்கஎல்லாப் பெருமைகளும் சேரஉண்டுஅக் கோசலைக்கே
நிச்சயமாய் அத்தனையும் நேர்உனக்கோ பறிபோகும்!
கச்சிதமாய்ப் பின்நடக்கும் கழித்துமுனை ஓரம்கட்ட.

கைகேயி : நீசொல்வதும் ஒருவகையில் நியாயம்தான்; ஆனாலும்
பேசஎன்ன வகையுண்டு, பெரும்விழாவைத் தடுப்பதற்கு?

மந்தரை : ஏன்இல்லை? சொல்லுகிறேன்; இந்திரர்க்காய்ச் சம்பரன்போர்
தான்நிகழ அந்நாள்நீ தானேஅத் தேர்நடத்தித்
தசரதனார் வெற்றிபெறத் தந்திரமெல் லாம்செய்தாய்
அசரஅவர் அதனால்பின் அளிப்பன்இரு வரம்என்று
சம்மதித்தார் அல்லவோ? சந்தர்ப்பம் இன்றேதான்!
மென்மதியாய்க் கேள் அவற்றை மிகநயமாய் நினைவுறுத்தி.

(பாட்டு)

இருவரத்தினில், ஒன்றினால் அரசு கொண்டு இராமன்
பெருவனத்திடை ஏழ்-இரு பருவங்கள் பெயர்ந்து
திரிதரச் செய்தி, ஒன்றினால், செழுநிலம் எல்லாம்
ஒருவழிப்படும் உன் மகற்கும் உபாயம் இது என்றாள்.

ஒருவரம்இக் கோசலத்தை உன்மகனே ஆண்டிடவும்
மறுவரம்ஈ ரேழாண்டுஅம் மகன்ராமன் வனம்புகவும்
கேட்டுவிடு இப்போதே கிளர்ச்சிசெய்துஅவ் வரங்கள்பெற
நாட்டம்இல்லை யேல்பரதன் நாடாளல் நழுவிவிடும்!

(கைகேயி மனம் மாறுதல்)

கைகேயி : இப்போதே வரட்டும்அவர்; இருவரமும் கேட்டுஅதனால்
தப்பாதென் மகன்ஆளத் தான்இராமன் வனம்செல்விப்பேன்.

(கைகேயி அலங்கோலமாய்ப் படுத்திருக்க,
தசரதர் அங்கு வருகிறார்)

தசரதர் : என்அன்புக் குறுதுணைவி ஏன்இந்த அலங்கோலம்?
மின்அன்புக் கண்இரண்டும் மிதந்தனஏன் கண்ணீரில்?
மாலைமணி மொத்தமுமே மண்தரையில் கிடக்கிறது.
சேலைமணி மேகலையும் சிதறிப்போய் இருக்கிறது.
என்னதுயர் நேர்ந்ததிங்கே, இதயமுமே வெடித்துவிட?
சொன்னால்தா னேதெரியும்? சொல்லுகநீ உறுதியுடன்.
வல்லிவிட்ட ஆணைக்கே வாளாநான் இருப்பேனா?
இப்போதே சொல்லிவிடு; இக்கணமே நீக்குகிறேன்.
கைப்போதில் அடித்துறுதி கட்டாயம் செய்கின்றேன்.

கைகேயி : நமதுமகன் பரதனேஇந் நாடாள வேண்டும்; மற்றும்
அமைதியுடன் இராமன்தான் ஆண்டுபதி னான்குமே
கானகம்போய் வரவேண்டும்; கட்டளைநீர் இடுவீரா?

தசரதர் : (கோபத்துடன்) என்னசொன்னாய் கைகேயி, இருசெவிக்கும்
தீத்தணல்போல்?

கைகேயி : முன்னம்நீர் எனக்கிரண்டு முழுவரம்வாக் களித்துள்ளீர்.
சொன்னஉடன் செய்வதுவாய்ச் சூளும்இங்கே தந்துள்ளீர்.
அன்னவற்றைச் செய்வதற்கே ஆம், நினைவு படுத்திகிறேன்.

தசரதர் : நீயாஇவ் வாறுரைத்தாய்? நியாயம்உண்டோ கைகேயி?
தாயாகக் கோசலைதான் தவராம னைப்பெறினும்
வாயார வயிறார வாழ்த்திஅவ னைமுழுநாள்
சேயாக மடிஇருத்திச் செல்லமுடன் சீர்சிறப்பாய்
வளர்த்ததெலாம் நீதானே! வந்து அவனும் சிற்றன்னையாய்க்

கிளர்த்துதலே இல்லாமல் கீர்த்திமிகு தாயாகக்
தான்அன்றோ உனைப்போற்றித் தக்கபடி வளர்ந்துவிட்டான்!
ஏன்இன்றோ இவைஎல்லாம் எண்ணியே பாராமல்
என்உயிரையும் போக்கென்றே என்னிடமே சொல்வதுபோல்
மன்னுயிர்க்கே இராமன்எனும் மகிமையதும் தேராமல்
காகைத்திற் கேஅவனைக் கடிதனுப்ப எண்ணுகிறாய்.

கைகேயி : வேண்டவேவேண் டாம்உமக்கு விருப்பமே இல்லைஎனில்
மாண்டுவிடு வேன்அன்றி மனம்வேறாய் எண்ணாது.

தசரதர் : தூண்டிற் புழுவாகத் துடிக்கின்றேன் கைகேயி.
வேண்டின் பரதனேஉன் விருப்பம்போல் ஆளட்டும்.
இராமன்மட்டும் காட்டுக்கே ஏகும்;எண்ணம் விட்டுவிடு
தாம்அவனும் போய்விட்டால் தாங்காதடி என்உயிரும்!

கைகேயி : அடேயப்பா! மன்னருக்கே அடாதுஇந்தச் சாகசங்கள்
விடேன்என்றே என்பரதன் விருப்பமுடன் பாட்டன்தம்
ஊருக்குச் சென்றிருக்க உள்ளூரில் திட்டமிட்டுச்
சீரொக்க அரங்கேறச் செய்கின்றீர் ஒத்திகைதான்!
நாளைக்கே இராமன்இந்த நாட்டுக்குள் இருந்தபடிப்
பாழுக்கே பூசலிட்டுப் பரதனின்முன் எதிர்த்துநின்றால்
என்செய்வான் என்பிள்ளை? இராமன்செயல் நியாயம்என்பார்
முன்செயலாய் அதனால்தான் முறையாக இராமனையும்
வனத்திற்கே அனுப்பிவிட வற்புறுத்திச் சொல்லுகிறேன்.

(சுமந்திரர் வருதல்)

பணிப்பெண்: மனைக்கேகச் சுமந்திரர்நம் மன்னர்பால் வந்துள்ளார்.

கைகேயி : அன்னவரை வரச்சொல்க; அழைத்து வரட்டும் இராமனையும்
சொன்னஉரை காப்பாற்றச் சுயதுணிச்சல் மன்னர்க்கில்லை

(இராமன் வருதல்)

இராமன் : என்ன உரை காப்பாற்ற எந்தை இடம் வேண்டுகிறீர்?

கைகேயி : வாராமா வாஎனது வாழ்த்துனக்கு. தந்தைஉரை
சீராக இன்னதெனச் செவிநிரம்பச் சொல்லுகிறேன்

(கைகேயி மன்னன் ஆணை இது எனல்)
(பாட்டு)

ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள நீபோய்
தாழ்இரும் சடைகள் தாங்கித் தாங்கரும் தவம்மேற் கொண்டு
பூழிவெங் கானம் நண்ணி, புண்ணியத் துறைகள் ஆடி
ஏழ்இரண்டு ஆண்டில் வாஎன்று இயம்பினன் அரசன் என்றாள்.

இராமன் : அப்படியா? மிகமிகவே அளவில்லா மகிழ்ச்சிஅம்மா!
இப்படியே கானகம்நான் ஏகஉடன் ஒப்புகிறேன்.
தந்தைஇவர் ஆணைஎனில் தமையனுமே மறுக்கஉண்டோ?
முந்தவும்இவ் ஆணையினை முகமலர்ச்சி யுடன்ஏற்பேன்.

கைகேயி : ஏற்பாய்நீ மறுக்காமல் என்பதனை நான்அறிவேன்.
காப்பாய்நீ தந்தைசொல்லைக் கனிவோடுஅதை யும்புரிவேன்.

இராமன் : அதுமட்டும் அல்லஅம்மா; அன்புஇளையோன் நாடாள
இதமுற்ற நல்வாய்ப்பும் யான்பெற்றாற் போன்றதுதான்.
தந்தையே வருகின்றேன் தாய்சொன்ன உங்கள்எண்ணம்
சிந்தையே ஏற்றவண்ணம் சிரம்தாங்கிச் செல்கின்றேன்.

(அப்போது, இராமனின் தோற்றப் பொலிவு)
(பாட்டு)

இப்பொழுது, எம்ம னோரால் இயம்புதற்கு எளிதே? யாரும்
செப்பஅருங் குணத்து இராமன் திருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்புஅவ் வாசகம் உணரக் கேட்ட
அப்பொழுது அலர்ந்த செந்தா மரையினை வென்றது அம்மா!

தசரதர் : மகனேநில் - என்னுடைய மறுமொழியும் கேட்டுப்போ.
(இராமன் இதைக் கேட்கும்முன் சென்றுவிடுகிறான்)
தகநேரில் கேட்காமல் தானும்போய் விட்டானே!
(மூர்ச்சையாகிக் கீழே விழுதல்)

மறுகாட்சி
(அரண்மனையில் கோசலை மாளிகை)

கோசலை : தவமகனே வா;உனது தந்தையினைப் பார்த்தாயா?
அவர்மிகவே உனக்குரைத்த அறஉரைஎன்? சொல்ராமா!

இராமன் : அன்பிளவல் பரதனுக்கே அரியணையை நல்கிஅதால்
தம்பிஅவன் நாடாளத் தந்தைஅவர் கட்டளைதான்
இத்தகைய வாய்ப்பினையே என்தம்பி பெற்றதனால்
மெத்தமெத்த மகிழ்ச்சியினால் மேன்மேல்மனம் பூரிக்கிறேன்.

கோசலை : சித்திரத்துத் தாமரையே சிரிப்பதுபோல் உன்முகத்தை
இத்திறத்தில் பார்க்கின்றேன்; இசைந்துதுணை நீயும்இரு.

இராமன் : அவ்வாய்ப்புஎனக் கில்லைஅம்மா. ஆரணியம் செல்கஎனச்
செவ்வாயால் தந்தைசொன்ன செய்தியினால் ஒப்பிவிட்டேன்.

கோசலை : என்னசொன்னாய், இராமாநீ ஏகிடவா காட்டிற்கு?

இராமன் : அன்னைகை கேயும்தான் அப்பாவின் ஆணைசொன்னார்.

கோசலை : தந்தைசொல்லே அதுவாயின் தான்ஏற்க மந்திரமாய்.

இராமன் : அந்தவகைக் கேஉடனும் அன்னாய்நான் செல்கின்றேன்.

மறுகாட்சி

(சீதையின் அந்தப்புரம் - இராமன் அங்கு வருதல்)

இராமன் : அனைவர் இடமும் விடைபெற்றேன்; அன்புத்தம்பி இலக்குவனும்
எனைவிட்டுப் பிரியாமல் இருக்கஉடன் வருகின்றான்
திருமகளே சீதாநீ தேற்றிக்கொள் உன்மனத்தை.
மருமகளாய் இங்கிருந்து மாமியர்க்குப் பணிவிடைசெய்.

சீதை : என்னநீங்கள் சொல்கிறீர்கள்? இங்கேநான் தனிமையிலா?

இராமன் : அன்னமேஅக் கானகத்தில் அருக்கனால்உன் கால்கள்சுடும்
அதனால்தான் சொல்லுகிறேன்; அமைதியொடும் இங்கிரு நீ
பதமாக ஆண்டுகள்தாம் பதினான்கின் பின்மீள்வேன்.

சீதை : ஒப்பேன்நான்; கணவனெனும் உங்களைநான் பிரிந்திருக்க
அப்போது சுடுவதிலும் அனல்சுடுமோ அக்காடு?
வேண்டாமே இச்சுடுசொல்; விரைந்துங்கள் துணைவருவேன்
ஆண்டாண்டோர் கணம்யுகமும் அடியாள்உங் களைப்பிரியேன்
இருங்கள்; இதோ மரவுரியும் இணைந்துடுத்தி வருகின்றேன்.

(பாட்டு)

பரிவு இகந்த மனத்துஒரு பற்று இலாது
ஒருவு கின்றனை ஊழி அருக்கனும்
எரியும் என்பது யாண்டையது? ஈண்டு நின்
பிரிவினும் சுடுமோ பெருங்காடு? என்றாள்.

இராமன் : பெரும்குணத்துக் சீதாய்நீ பிரிவறியாய் என்றறிவேன்.
வருகநீயும் எம்மொடுதான்; வணங்கிமற்றோர் பால்விடையும்
தருகஎனப் பெறக்கேட்டுத் தம்பியொடும் கான்புகுவோம்.

(இராம இலக்குமணர்கள் சீதையொடும்
கங்கைக் கரையை அடைதல்)

இராமன் : யாருக்கும் தெரியாமல் அப்பொழுதே புறப்பட்டதால்
ஊர்ஒக்க ஒயிலவிட்டே உடன்கங்கை வந்துவிட்டோம்!

சீதை : சிறிதேநாம் இளைப்பாறிச் சேரலாம்பின் அக்கரையை.
பெரிதேநாம் புரிந்துகொண்டோம். பேசாது அப்படியே செய்வோம்.

இலக்குவன்: யாரோஓர் படகோட்டி யாம்; குகனாம். வந்துநின்று
சீரோடும் உங்களையே சேவிக்கக் காத்துள்ளார்
காத்தவர்கள் நமைக்காணக் கடிதில் வரச்சொல் தம்பி.

(இலக்குவன் குகனை அழைத்து வருகிறான்.)

குகன் : பேரருளின் குணப்பிழம்பே, பெயர்குகன்நான் வணங்குகின்றேன்.
சீர்அருளால் நீர்உண்ணக் சிறிதுமீன்தேன் கொணர்ந்துள்ளேன்.
தாங்கள்இங்கு வந்ததெலாம் தம்பிசொலக் கேட்டறிந்தேன்.
ஓங்குபசிக் காளாகி உடல்மிகவும் சோர்ந்துள்ளீர்
வாங்கிஅத னால்உண்ண வாய்இரந்து வேண்டுகிறேன்.

இராமன் : பாங்குமிகு குகனே,உன் பாசத்தை என்னென்பேன்!
வானவர்க்கும் கிட்டாத வகையான அமிர்தமன்றோ
தான்உவந்து கொடுக்கவந்தாய்! தாயினும்மே லானவன்நீ!
வாங்கிஉண்ட தாய்எனவே வைத்துக்கொள்; உன்பரிவே
நீங்கிவிடா தென்றென்றும் நெஞ்செல்லாம் இனித்திருக்கும்.

குகன் : அண்ணலே, நான் உம்அடிமை; அண்மையுள்ள சிருங்கிபேரம்
வண்ணமிகு கிராமத்தில் வாழ்கின்றேன் ஓடம்விட்டு!

இராமன் : கங்கையினை இருகரையும் கடக்கவருவோர்க்குதவும்
பங்குடைய அல்ல அல்ல; பாங்குடைய நீபெரியோய்!
பிறவிஎனும் நதிகடக்கப் பேருதவி செய்வார்போல்
நிறைவுடைய வாழ்க்கையினை நீநடத்திக் கொண்டுள்ளாய்!

குகன் : எல்லாமே உங்களைப் போல் இணையில்லார் சேவைகள்தான்
நல்லோனாய் வாழ்வதற்கு நாளும்துணை புரிகிறது
நீங்களுமே என்னோடு நிரந்தரமாய்த் தங்கிவிட்டால்
ஈங்கமைந்த பேறுஎனக்கு இதைவிடவும் என்னஉண்டு?

இராமன் : தானாக இன்றுமட்டும் தங்குகிறோம். பொறுத்திடுக.
நாளைக்கு நாங்களும்இந் நதிகடந்து அக்கரைக்கே
வேளைக்குள் விடிந்ததுமே விரைந்து செல்ல
வேண்டுமதால்
ஓடங்கள் கொண்டுவந்தே உதவிடுக மாமனத்துப்
பீடம்கொள் குகனே, உன் பேருதவ தேவை இதில்.

குகன் : தேவைஎன்ன? ஆணைஎன்றே திருவுள்ளம் கொண்டபடிச்
சேவைஎல்லாம் செய்வதற்கே சென்மமெலாம் காத்துள்ளேன்
பூவாக இவ்விரவு போய்க்கிழக்கு வெளுக்குமுன்னே
நாவாய்கள் காத்திருக்கும் நதிக்கரையில் உங்களுக்காய்!
நானும்தான் காத்திருப்பேன் நள்ளிரவு விடியுமட்டும்!
ஆனந்தம் இதைவிடவும் அடையவே றென்னஇங்கு?

(பொழுது விடிகிறது. அதற்கான பூபாள இசை ஓடங்களில் ஏறி அனைவரும் நதியைக் கடக்கிறார்கள்.)

இராமன் : நல்லபடி யாய்க்குகனே நதியும்கடந் தாயிற்று
செல்லும்படி எங்களுக்குச் சித்ரகூடம் போம்வழிசொல்.

குகன் : கூடவே நானும்வரின் கொஞ்சம் உதவியாய் இருக்கும்.
ஓடமிங்கு நிறுத்திவிட்டே உங்களுடன் வருகின்றேன்.

இராமன் : பரவாயில் லைகுகனே பயணம்பின்னும் தொடரஉண்டு.
நிறைவான துறைகளெலாம் நீராடச் செலவேண்டும்.
ஆகையினால் உயிர்அனையாய், அன்பிலக்குவன் உன்தம்பி!

பாகு மொழிச் சீதையொடு பரிந்தெல்லோரும் உன்உறவே.
ஏகஇனி விடைகொடுப்பாய் எல்லோரின் துணையோடும்
ஆகவழி நடக்கவும் அறிவி சித்த கூடத்தின் மேல்.

குகன் : நன்று நன்று இவ்வழியே நடக்கநதி காளிந்தியும்
குன்றுகளும் சோலைகளும் கூடவேநீர் ஓடைகளும்
வரும்அவையும் கடந்துவிடின் வருவதுசித்ர கூடம்தான்!
பொறுமையுடன் சென்றிடலாம் போய்வருக புனிதமுள்ளீர்.

(குகன் விடை பெறவும் இராம இலக்குமணர்கள் சீதையொடும் சித்ர கூடத்தை அடைகிறார்கள்)

சீதை : சித்திர கூடமும்நாம் சேர்ந்துவிட்டோம் பெயர்க்கேற்ப
விசித்திரமெல் லாம்கூடி விரிந்தஎழில் பாருங்கள்.

இராமன் : வருந்துகிற பெண்யானை வலிநீங்க ஆண்யானை
பொருந்தஅதோ கைகோத்துப் போகிறது பார்சீதா!

சீதை : ஆனைகளின் கும்பலையும் அப்படியே விழுங்கிவிட்டு
வானகம்போ கப்படிபோல் வளைந்துமலை நாகமும்தான்.

இராமன் : இங்குதவ முனிவர்களும் இருக்கின்றார் என்பதனால்
சங்கமென நாமுமவர் சார்ந்திருத்தல் புண்ணியம்தான்!

காட்சி மாற்றம்
(அயோத்தி அரண்மனையில் கைகேயி மாளிகை.)

(பாட்டனார் ஊருக்குச் சென்றிருந்த பரத சத்துருக்கனர்கள் ஆவலுடன் நுழைகிறார்கள்)

கைகேயி : வாபரதா, சத்துருக்னா, வரணுமென உங்களைத்தான்
தாபமுடன் எதிர்பார்த்துத் தவித்திருந்தேன்; வந்துவீட்டீர்!

பரதன் : அப்பாஎங் கேஉள்ளார்? அவசரமாய் அழைப்புமென்ன?

கைகேயி : தப்பாக எதுவுமில்லை தான்; இங்கே கொஞ்சம்பொறு.
அமரர்களே வரவேற்க அரசப்பிரான் வான்உலகை
எமதெனவே கொண்டபடி ஏகிவிட்டார், சிலநாள்முன்!

பரதன் : என்னம்மா சொல்கிறீர்கள்? எந்தைக்கு நேர்ந்ததென்ன?

கைகேயி : முன்னம்நீ நாடாள முறையாக இராமனுமே
காடுபுகும் ஏற்பாட்டால் கணம்பொறாமல் உயிர்நீத்தார்!

பரதன் : நாடுபெறும் ஆசையினால் நடந்தஇந்தச் சேதியினைக்
கேடுபெறக் கேட்பதற்கோ கிளம்பிஇங்கே ஓடிவந்தேன்?

கைகேயி : கேள்,மகனே கேள்; இந்தக் கேகயத்தாய் செய்ததெலாம்
நாள்முழுதுமே நாட்டின் நல்லாட்சி பெறத்தானே?

பரதன் : நன்று நன்று நீஎனக்கு நவிலும்சமா தானமெல்லாம்
என்றென்றும் பெரும்பழியை எனக்கேஉண் டாக்கிவிட்டாய்!
பாவியேநான் பாவி, பெரும் பாவி!எனைப் பெற்றதந்தை
ஆவியுமே போய்விடஇங்கு அண்ணனுமே இலாக்கொடுமை
அந்தோ!எவ் வகையில்நான் அமைதியொடும்
பொறுத்திருப்பேன்!
பைந்தாள் நம் அண்ணனிலாப் பாழ்நிலம்தான் அயோத்தியுமே!

கோகலை : சற்றேநீ பொறுபரதா; சாா்ந்தெல்லாம் நடந்தபின்னும்
கற்றோன்நீ பொறுக்காவிடின் காரியங்கள் சிதறிவிடும்.
நடக்கஇனி என்னஎன்றே நன்றாகச் சிந்தித்து
அடக்கமுடன் மேற்கொண்டும் ஆவனநீ செயத்துணிக.

பரதன் : தாயேநீ கேள்இனியும் தாமதியேன் ஒருகணமும்,
போய்ஏறித் தேரோடு புகுந்தண்ணல் தேவியரை
வருந்தியும் நல் வார்த்தையுமாய் வரஅழைத்தே உடன்மீள்வேன்
பொருந்தஅவர் வராவிடின்அப் போதேஎன் உயிர்மாள்வேன்
வாருங்கள்; நீங்களும்தான் வருகஎனச் சென்றழைப்போம்
நேர்உங் களைக்கண்டால் நெஞ்சிரங்க வும்கூடும்.

இடம் : கங்கைக் கரை

(பரதன் தாய்மார்களோடும் மற்றவர்களோடும் கங்கைக்கு வருகிறான். அதைக் கண்ட குகன் தவறாக அவர்களை எண்ணி மனம் பொருமுகிறான்)

குகன் : அதோஅதோ பெரும்படையாய் அணிவகுத்து வருபவர் யார்?
இதோஅவரும் வாடுமீங்கே இளவலொடு தேவியுமாய்

வனத்திற்கே அனுப்பிவைத்த வஞ்சகர்தாம் இங்கேயும்
மனத்தில்கே டாய்விரட்டி மாய்த்துவிட வருகின்றார்.
வரட்டும்;அந்தப் பெரும்படையும் வழிதிரும்பிப் போகாமல்
விரட்டிஅடிக் கின்றேன்; ஆம் விண்ணுலகுக்கே புகவும் ஏன்?
நானேசென்று அவரை நன்றொருகை பார்க்கின்றேன்.
தானேஎன் தோழமை தந்தவரைப் பேணுகின்றேன்.

(குகன் முனைந்து வரக்கண்டு)

சுமந்திரர் : வான்ஏனும் தோள்வலியாய் வருவதுபார் குகனேதான்!
உனைக்காணும் நோக்கத்தில் உனதுமுன்னே வருகின்றான்;போர்
தனக்காகா நண்பனெனத் தான்எண்ணி மாறிவிட்டான்.

(பரதனை நெருங்கி)

குகன் : ஆம் ஐயே! அண்ணலுக்காம் அரும்தம்பியாநீவிர்?
தாம்மெய்யாய் வந்திருக்கும் தகவென்ன கூறுவீரோ?

பரதன் : அன்னையின் சூழ்ச்சியினால் அயோத்திவிட்டுப் போனவரை
முன்னமங்கே அழைத்துப்போய் முடிசூட்டத் தான்விரைந்தேன்.
மன்னுமிந்த நினைவையல்லால் மற்றெதுவும் கொண்டதில்லை.
இன்னுமிந்த உயிர்இருத்தல் இதன்பொருட்டே குகமுன்னோய்!

(பரதனின் பெருந் தகைமை உணர்ந்த குகன்
அவனை வணங்கிக் கூறல்)

குகன் : அண்ணலே,உம் பெருந்தன்மை அடடா, யான் என்னென்பேன்!
எண்ணஎண்ண இனிக்கிறது இவ்வரிய தனிக்குணத்தால்
ஆயிரம்ரா மர்வரினும் ஆவதுண்டோ, உமக்கிணையாய்?

(பாட்டு)

பரதன் : தாய்உரைகொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்
தீவினை என்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்றபோழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேள் ஆவரோ, தெரியின் அம்மா!

(கோசலையைக்காட்டி)

குகன் : தாய்இவரும் யாரோதான்? தயவுபுரிந் துரைத்திடுக)

பரதன் : இவ்வன்னைதான் புவனாம் ஈன்றவனை யோன்ற
அவ்வரிய மாதவத்தாள் ஆம் இராமன் தாய்கோசலை!

குகன் : தாயேஉன் திருவடியைத் தலைஏந்தி வணங்குகிறேன்.
நீயேஇப் புவியினுக்கே நிகர்இல்லாத் தாய்த்தெய்வம்!

(கோசலையை வணங்குதல்)

கோசலை பரதன் குகனை வாழ்த்துதல்)

கோசலை : குகன்என்னும் குணக்குன்றே, கூர்ந்துன்றன் பணிவறிந்தேன்
மிகநன்று எழுந்திரு கான் மேவியரா மன்செயலால்
உன்னரிய உறவுமன்றோ உற்றது.நீ வீர்அதனால்
பன்னரிய ஐவருமாய்ப் பார்நெடுநாள் ஆண்டிருப்பீர்.

(பாட்டு)

நைவீர் அலீர் மைந்தீர்! இனித்துயரால்
நாடுஇறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலம்ஆயிற்று
ஆம்அன்றே! விலங்கல் திண்தோள்
கைவீரக் களிறுஅனைய காளைஇவன்
தன்னோடும் கலந்து நீவிர்
ஐவீரும் ஒருவீர்ஆய், அகல்இடத்தை
நெடுங்காலம் அளித்திர் என்றாள்.

குகன் : நல்லதுஅன்னாய் எல்லோரும் நாவாயில் ஏறுங்கள்
ஒல்லஇந்த நதிகடந்தே உடன்பயணம் தொடர்ந்திடலாம்
இராமஅண்ணல் இருப்பிடமும் ஏகிஉடன் சேர்ந்திடலாம்
நாமும்அண்ண லைக்காணும் நற்பேறும் பெற்றிடலாம்.

(ஒடங்களில் அனைவரும் ஏற அவை நகரும் தண்ணீரின் ஓசை கேட்கிறது)
(சித்திர கூடத்தில்)

இலக்குவன் : நாட்டைவிட்டே காட்டிற்கு நமைவிரட்டியது அல்லாமல்
(கோபமுடன்) மீட்டுமிங்கே நமைஅழிக்க மேவுததோ பாதபடை.

இராமன் : பொறுதம்பி பொறு; எதுவும் புகலாதே இலக்குவா
வரும்அவர்தம் நோக்கத்தை வகையாக அறியாமல்.

பரதன் : அண்ணலேஉன் திருவடியை அனைவரொடும் வணங்குகிறேன்.

இராமன் : கண்ணனைய பரததம்பி, கண்ணீரை நிறுத்திஎழு.
அன்னையரே, உங்களையும் அடிபணிந்து கேட்கின்றேன்.
என்னவொரு காரணம்நீர் எல்லோரும் சேரவந்தீர்?

பரதன் : நாட்டுக்கே திரும்பிநீங்கள் நல்ஆட்சி தரவேண்டும்.

இராமன் : காட்டுக்கே வந்தபின்நாம் கருதஅதற் கிடம்இல்லை.

இராமன் : தந்தைஉரை காப்பதுவும் தாய்விருப்பம் ஏற்பதுவும்
மைந்தனது கடமையன்றோ! மாறுவது தருமம்அல்ல!

பரதன் : இல்லை இல்லை இராமஅண்ணா, இப்பதிலுக் காவந்தேன்?

இராமன் : மெல்லமெல்லக் கானகத்தில் மெய்யாய்ஈ ரேழாண்டு
செல்லவும்நான் திரும்பிடுவேன், சீதையொடு இலக்குவனுமாய்.

பரதன் : அவ்வாறேல் உன்கமல அடிஇணையும் பாதுகைகள்
தவ்வாமல் தரவேண்டும் தயவோடு மறுக்காமல்!

இராமன் : தருகின்றேன்; பாதுகைகள் தந்தாலும் நீயேதான்
பெறுகின்ற ஆளுகைக்குப் பிரதிநிதி; மறவாதே!

பரதன் : நகருக்குள் இனிச் செல்லேன் நந்திகிராமத் தேயிருந்து
புகலொத்த நாட்டைஉங்கள் பொறுப்பாய்த்தான் கவனிப்பேன்.

இராமன் : சென்றுவருக தம்பியேஉன் சேவைமிகு எண்ணங்கள்
வென்றுநிற்க அன்னையரே வேண்டுகிறேன். நீங்களும்தான்
மன்னித்தென் கடமைஎண்ணி மனம்நிறைந்து வாழ்த்துங்கள்.

கோசலை : என்இதய வாழ்த்துகளை ஈன்றவர்கள் கூறுகிறோம்.
போய்வருக அனைவருக்கும் புனிதமிகு வாழ்த்துகள்.

(கோதாவரிக்கரையில் பஞ்சவடி ஆசிரமம் சேர்தல்)

இராமன் : சான்றோர்தம் காவியம்போல சவிஎனவே தெளிந்தோடும்
தேன்தோய்ந்த கோதாவரித் தீரமேநாம் வந்துவிட்டோம்.

சீதை : செம்மொழியாய்த் தமிழ்தந்த செழுமுனிவர் அகத்தியனார்
தம்மொழியில் சொன்னதுபோல் தனிச்சிறப்பே இங்குள்ளது!

இராமன் : கோதாவரித் தீரமெனில் கூறஎன்ன மேலுண்டு?
சாதாவரிச் சொல்கொண்டா, சாற்றுதற்கு ஏலும்அவை?

இலக்குவன்: வரும்வழியில் தவம்வளர்க்கும் வகைவகையாம் முனிவர்கள்தாம்
தரும்மொழியும் கேட்டல்லவோ தாம்இங்கு சேர்ந்துவிட்டோம்!

இராமன் : பஞ்சவடித் தீரத்தில் பஞ்சமில்லை எவ்வனப்பும்.

சீதை : கொஞ்சமல்ல அழகனைத்தும் கொட்டித்தான் குவிந்துள்ளன.
தங்கஒரு குடில்அமைக்கத் தக்கஇடம் இவ்விடம்தான்.

இலக்குவன் : இங்குடனே குடில்எழுப்ப ஏற்பாடுகள் தொடங்குகிறேன்.

(பின்னணியில் அமைதியான இசை ஒலிக்கிறது)

இராமன் : அன்புடைய சீதாஎன் அரும்தம்பி இலக்குவன்
முன்புறமாய் சற்றேபுல் முற்றமெலாம் பார்த்துவிட்டு
வருகின்றேன் அதுவரையும் வைத்தகவ னமாய் இருங்கள்
அருகில்தான் செல்லுகின்றேன் அருவிஅதோ பார்க்கத்தான்!

(இராமன் செல்ல எதிரில் சூர்ப்பனகை வருகின்றாள்)

(சூர்ப்பனகையின் நடை பற்றிய பாட்டு)

பஞ்சிஒளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்க,
செஞ்செவியக் கஞ்சம்நிகர் சீறடியள் ஆகி
அஞ்சொல்இள மஞைஎன, அன்னம்என மின்னும்
வஞ்சிஎன நஞ்சம்என வஞ்சமகள் வந்தாள்.

(வரும் சூர்ப்பனகையை நோக்கி)

இராமன் : ஆடிவரும் நீரோடை ஆன்றபெண்ணே, யாரோநீ?

சூர்ப்பனகை: பாடிவரும் தென்றலில்சூர்ப் பனகைபேர் - பெரியஇடம்
(கம்பீரமுடன்) தென்இலங்கை இராவனனும் திசைவடக்குக் குபேரனும்என்
முன்னில் வந்த தமையன்மார். முழுமையும்செல் வாக்கினள்நான்!

இராமன் : புரிகிறது,உன் தேவைஎன்ன? புகன்றிடுக இப்போது.

சூர்ப்பனகை: புரியும்வகை சொன்னால்தான் புரியுமாஎன் உட்கிடக்கை?
சொல்லாம லேபுரியும் சுகம்அல்லவா? இன்றுமாநீ
நல்லாண்மை யாய்ப்புரிந்தும் நளினங்கள் பண்ணுகிறாய்?

இராமன் : நளினங்கள் பண்ணுவது நங்காய்,உன் வாய்மொழிதான்!
வழிஇங்கு மேலுமில்லை; வஞ்சகிநீ போய்விடலாம்.

சூர்ப்பனகை: பெண்ஒருத்தி வாய்விட்டுப் பேசியும்நீ இணங்காத
மண்உறுத்தும் பொம்மைஎன மனத்திற்குள் புரிகிறது.

(வெளியே வந்த சீதையைப் பார்த்து விட்டு)

எவளோ ஒரு பெண்ணையும்தான் இங்கே நீ வைத்திருந்து
அவளிடம் மயக்கம்தான் அலட்சியமெனைச் செய்கிறது!

இராமன் : பெண்ணேநான் சொல்லுகிறேன், பேசாமல் போய்விடுநீ.
(சினத்துடன்) கண்ணேஎன்று அச்சீதை என் கைப்பிடித்த அறச்செல்வி
கண்டபடிப் பேசாதுஉன் காமக்கடையைக் கட்டு
விண்டபடிப் புரிந்துகொண்டேன் வெளிவேட அரக்கிநீதான்!

சூர்ப்பனகை: அரக்கிஎன்றால் என்ன;எனக் காசைஒன்றும் இருக்காதா?

இராமன் : இருக்கலாம்தான்; ஆனாலும் இல்ஒருத்தி கொண்டவன்நான்!
விரோதமாய் அவ்அறத்தை விட்டெதையும் அண்டாதான்.

சூர்ப்பனகை:குரோதமாய்ப் பேசாதே: கொஞ்சமெல்லக் சிந்தியேன்நீ.
மீண்டும்சொல் கிறேன்; கொஞ்ச மெல்லவே சிந்தியேன்நீ.

இராமன் : சிந்திக்கத் தேவைஇல்லை; சீதைஎனும் பெண்தவிர
நிந்திக்க வேண்டாம்நீ, நீங்கிஇடம் காலிபண்ணு.

சூர்ப்பனகை: காலிபண்ண வாவந்தேன்? காதலிக்க வேவந்தேன்!
கேலிபண்ணி என்னைநீ கேவலமாய் ஒதுக்குகிறாய்!
மங்கையொடு நானும்தான் மனையாளாய் இருப்பதற்குப்
பங்கமென்ன? என்னையும்நீ பரிந்தேற்றுக் கொண்டுவிடு!

இராமன் : வஞ்சகிநீ வாய்திறந்த வாறெல்லாம் உளறுகிறாய்;
நெஞ்சுகொளச் சொல்கின்றேன்; நிற்காதே ஓடிவிடு!

சூர்ப்பனகை: போகின்றேன் ஆம்நானும் போகத்தான் போகின்றேன்.
போகின்ற வேளையில்நான் புயல்கிளப்பித் தான்போவேன்.

(கோபமுடன் போகிறாள். சில விநாடிகள் கழித்துச் சூர்ப்பனகை அழும் ஒலி கேட்கிறது.)

இராமன் : என்ன இது? பேரலறல்! எங்கிருந்து வருகிறது?
முன்னமிங்கு வந்தவளின் முழுக்கதறல் கேட்கிறது.
(பர்ணசாலைப் பக்கம் போய்)
நடந்ததென்ன இலக்குவா? நங்கை இவள் குருதிகொட்டப்
படர்ந்தமுகம் மார்பகம்கை பற்றிமறைத்து அழுகின்றாள்.

இலக்குவன் : அண்ணிஇங்கே வெளிவரும்கால் அந்தரத்தே இழுத்தேகப்
எண்ணிஇவள் முயன்றமைக்கே இவ்வாறாம் செயல்புரிந்தேன்
அரக்கிஇவள் மார்பகம்மூக்கு அறுக்காமல் விட்டிருந்தால்
இருக்கிறநம் அண்ணியையே இழுத்தோடிப் போய்இருப்பாள்.

இராமன் : தம்பிநீ எச்செயலும் தகுந்தபடி தான்செய்வாய்
நம்பிக்கை எனக்குண்டு. நகர்த்துஇவளை மேற்கொண்டு.

சூர்ப்பனகை: மேற்கொண்டு நடப்பதைப்பார் மின்னலையே சீண்டிவிட்டாய்!
தீக்கொண்ட பழிஇதற்குத் தீர்க்காமல் விடமாட்டேன்
கண்எட்டும் தூரம்தான் கரன்தூடணன் திரிசிரன்எம்
அண்ணன்மார் உள்ளனர் அப்புறமும் இலங்கையர்கோன்
எல்லோர் இட மும்சொல்லி இதற்குவிலை வாங்கிடுவேன்
வல்லோர்என் அண்ணன்மார் வலியுணர்த்திக் காட்டிடுவேன்.

(மறு காட்சி)

(மானபங்கம் அடைந்த சூர்ப்பனகை இலங்கையில் இராவணன் மாளிகையில் நுழைகிறாள். அதைக் கண்டு இராவணன் என்ன என்று கேட்கிறான்.)

இராவணன் : தங்கையே, நிகழ்ந்ததென்ன? தமையன் இராவணன்
கேட்கின்றேன்
பங்கம்இவ் வாறாய்ப் படுத்தியவர்யார்? விரைவில்சொல்.

சூர்ப்பனகை: அண்ணாஇக் கொடுமைஎலாம் ஆரண்யத்தில் நிகழ்ந்ததுதான்!
பெண்ணாள் ஒருத்திஅங்கு பேரழகாய் இருத்தல்கண்டு
கண்ணாக அவளைஉன்றன் கையில்தர வேமுயன்றேன்.
திண்ணார்தோள் இலக்குவ னாம் தீரமிகும் இளைஞன்தான்
மானபங்கம் இவ்வாறாய் மார்பகம்மூக் கறுத்துவிட்டான்.

இராவணன் : ஊனமுற இக்கொடுமை, உடனேசொல்; அவர்செயலா?

சூர்ப்பனகை: தயரதனின் பிள்ளைகளாம் தடம்தோள்ராம இலக்குவனாய்ப்
பெயரதனைக் கொண்டவர்தாம் பெரும்கொடுமை
இவைஇழைத்தார்.

இராவணன் : அண்மையுள்ள கரதூடணன் அவர்களொடு திரிசிரனும்
கண்முன்இந்தக் கொடுமையினைக் கண்டுமாசும் மாஇருந்தார்?

சூர்ப்பனகை:போய்ச்சொன்னேன் அவர்இடமும்; புறப்படுஎன் றேஎழுந்து
மூச்செறியப் புறப்பட்டு முடிவுஇறப்பே கண்டுவிட்டார்!

இராவணன் : அப்படியா? இப்போதே அவர்கள்கதை நான்முடிப்பேன்.

சூர்ப்பனகை: எப்படியா யினும்சரிஅவ் ஏந்திழையை நீகவர்ந்தால்
ஒப்பரிய சுகபோகம் உயர்வெல்லாம் உண்டாகும்.
செப்பரிய பெண்அவள்பேர் சீதை;உனக் கேபொருத்தம்.

இராவணன் : தங்கைசூர்ப் பனகையே,உன் தனிப்பரிவை
உணர்ந்துகொண்டேன்.
பங்கமுற்ற போதும்அண்ணன் பால்பரிவு மிக்கவளாய்ச்
செய்யஎண்ணு கின்றனையே; சிறக்கஅதற் கென்நன்றி.

சூர்ப்பனகை: மெய்யோடும் அந்நன்றி மேலும்என்பால் காட்டஎனில்
தையலைநீ கொள்வதுபோல் தருகஎன்பால் இராமனையே.
மையல்அவன் மீதெனலால் மனம்நிறைந்த வேட்கை யொடு
நாணம்விட்டும் உன்னிடமே நங்கைஇதைக் கேட்கின்றேன்.
வேணஇதைத் தருவாயா? வேண்டியும்பின் கேட்கின்றேன்.

சூர்ப்பனகை சூழ்ச்சி
(பாட்டு)

மீன்கொண்டு ஊடாடும் வேலை மேகலை உலகம் ஏத்த,
தேன்கொண்டு ஊடாடும் கூந்தல், சிற்றிடை, சீதை என்னும்
மான்கொண்டு ஊடாடு நீ; உன் வாள்வலி உலகம் காண
யான்கொண்டு ஊடாடும் வண்ணம், இராமனைத் தருதி என்பால்!

இராவணன் : சரிதங்காய் சரிஅதற்குச் சரியான திட்டமிட்டுக்
குறிதக்க வைத்தேதான் கொள்ளணும்இப் பெருஞ்செயலை.

புறப்படுகின் றேன்இதோஅப் பூங்கிளியை அவ்வகையும்
சிறைப்படுத்தி வந்திடுவேன் சீரோடுஇதை நிறைவேற்ற
அம்மான்நம் மாரீசர் அம்மானாய் உதவிடுவார்.
செம்மாந்து கொண்டிடுவேன்; சீதைமான் என்மான்தான்!

சூர்ப்பனகை: சீதைமான் மட்டும்மல்ல. சீமானும் நீயே;தான்!
வாதைமான் நானுமல்ல; வரும்இராமன்என் வலைமான்தான்!

(பஞ்சவடியில் பொன்மான் ஒன்று அங்கும் இங்கும் மருண்டு மருண்டு துள்ளிக்குதித்துத் திரிகிறது. அதைக் கண்டவளாய்)

சீதை : அழ்கொளிரும் பொன்மான். ஆம் அதிசயப்
பேரொளிமான்தான்!
பழகுவதற் கேற்றதொரு பைம்பொன்னின் வடிவநல்மான்
வானகத்து மின்னல்ஒன்றே வழிதவறி வந்ததுபோல்
கானகத்தில் இங்குமங்கும் கால்தெறிக்கப் பாய்கிறது!

இராமன் : என்னசீதா, பார்க்கின்றாய்? ஏகும்அந்த மானினையா?

சீதை : முன்னம்அதை யேபிடிக்க முயலுங்கள் என்னவரே.

இலக்குவன் : வேண்டாம்வேண் டாம்அந்த விபரீத வீண்முயற்சி
ஆண்டாண்டும் யாரோஓர் அரக்கர்செயல் ஆகிடலாம்.

சீதை : இருக்கட்டுமே; அப்படியும் இருந்தாலும் அம்மானை
வரக்கட்டி வைத்தபடி வரும்வெற்றி நம்மதன்றே!
முயலுங்கள்; அம்மானை முடிந்த மட்டும் பிடித்துவரும்
செயல்இங்கு இறங்குங்கள்; செல்லுங்கள் பின்னேயே.

இராமன் : இலக்குவநீ இங்கேயே இரு காவல் சீதைக்கே.
அலக்கழிக்கும் மானைஇதோ அரைநொடியில் பிடிக்கின்றேன்.

சீதை : தொலைதூரம் ஒருமுறை தொடர்கின்றார் உன்அண்ணன்
நிலை, நேரம் எனஇன்றி நெடும்தொலைமான் போகிறதே!

இலக்குவன் : மனம்என்பது கால்பாய மானமென்று தான்பாயும்
எனஅந்த மனம்போன்றே எங்கோமான்சாய்கிறது!

(பேரோலி ஒன்று அப்போது அலறலாகக் கேட்கிறது)

சீதை : ஏதோஓர் அலறல் ஒலி - என்னவோ அண்ணனதுபோல்
காதோடு கேட்கிறது, கடுகியும்போய்ப் பார்இலக்குவா.

இலக்குவன் : அண்ணனுக்கு ஏதோன்றும் அபாயமாய் நிகழாது
திண்ணமிது; பொறுமையுடன் தெளிவாக வேஇருங்கள்.

சீதை : சமாதான மேவேண்டாம்; சட்டெனப்போய்ப் பார்த்திடுக.

இலக்குவன்: அம்மாஇதோ செல்கின்றேன்; அமைதிஒன்றே காத்திடுக.

(இலக்குவன் சென்ற பின் இராவணன் சந்நியாசி வேடத்துடன்
அங்கு வருதல்)

சீதை : வாருங்கள் பெரியவரே, வணக்கம்; இங்கே அமருங்கள்!

இராவணன் : தூரங்கள் பலகடந்து தொலைவிருந்து வந்துள்ளேன்;
சீர்உங்கள் அழகுஎவர்க்கும் சிக்காத பேரழகு!

சீதை : நேர்உங்கள் தேவைஎன்ன? நீட்டாது சொல்லுங்கள்.

இராவணன் : சிக்காதது என்றேனா? சிக்கல்அதில் தான்உள்ளது!
மிக்கஉங்கள் அழகுக்கும் ஏற்றவரா இங்குள்ளோர்?

சீதை : வீணைக்கை ஏந்திவந்து வீணுக்குஎன்னவோ பேசுகிறீர்!

இராவணன் : ஆணுக்குத் தக்கதைத்தான் அடிபேதாய் சொல்லுகிறேன்.
இலங்கையர்கோள் இராவணன் நான்! என்னோடும் வந்துவிடு!
நலம்கொழிக்க உன்னையும்நான் நாயகியாய் வைத்திருப்பேன்.

சீதை : வேண்டாம் இராவணா வேண்டாம் இவ்ஆசை
நீண்டாங்கு வேள்விஅவிர் நெய்விரும்பி நாய்வரல்போல்
தீண்டவரு கின்றீர்நீர் திசைதிரும்பிப் போய்விடும்.

இராவணன் : தீண்டேன்நான்; ஆனாலும் தேரோடு கொண்டுசேல்வேன்.

(ஜடாயுகுறுக்கிடுதல்)

ஜடாயு : பாவிகொடும் பாவிஇந்தப் பாதகம்ஏன் செய்கின்றாய்?

இராவணன்: தாவிவரும் ஜடாயுவா? தடைஏதும் செய்யாதே
எட்டவே நின்றுவிடு இல்லையேல்உன் சிறகிரண்டும்
வெட்டவேசெய் வேன்;இதோ வீழ்ந்துகிட, இங்கேயே!

(ஜடாயுவைத் தாக்கிவிட்டு இராவணன் சீதையைக் கொண்டு போகிறான்.பஞ்சவடியில் இராமனும் இலக்குவனும் பேசிக்கொண்டு திரும்புகிறார்கள்.)

இராமன் : இலக்குவாநீ இயம்பியது எல்லாமே உண்மைதான்
அலக்கழித்த மாயமான் அன்றொழிந்த தாடகைசேய்
மாரீசன் தான்;இன்று மாட்டிக்கொண் டேஒழிந்தான்.

(பர்ணசாலையில் சீதை இல்லாதது கண்டு)

பார்இங்கே சீதைஇல்லை! பர்ணசாலை எங்கும்தான்!
யார்இங்கே கடத்தி இருப்பார்? யாதுஇங்கே நிகழ்ந்திருக்கும்?

இலக்குவன் : தேர்இங்கு வந்ததடம் தெரியுதுஅண்ணா! போய்ப்பார்ப்போம்
தொலைவில்அதோ துடிதுடிக்கும் சிறகோடு கழுகுஒன்று
நிலைஇழந்து கிடக்கிறது. நெருங்கிப்போய்ப் பார்க்கலாம்.

ஜடாயு : வாருங்கள் தசரதனார் வரம்பெற்ற மைந்தர்காள்.
தேரும்கொண்டு இலங்கையன்தான் சீதையினைக்
கொண்டுசென்றான்
தடுத்ததனால் என்சிறகைத் தானும்வெட்டிச் சாய்த்துவிட்டான்!
அடுத்துமக்குச் செய்தியினை அறிவிக்கவே உயிர்த்திருந்தேன்.

(இராவணன் சீதையைக் கடத்தியது பற்றிக் கூறியது)
(பாட்டு)

'வடுக்கண்வார் கூந்த லாளை, இராவணன் மண்ணினோடும்
எடுத்தனன், ஏகு வானை, எதிர்ந்துஎனது ஆற்றல் கொண்டு
தடுத்தனன், ஆவது எல்லாம் தவத்துஅரன் தந்த வாளால்
படுத்தனன்; இங்கு வீழ்ந்தேன்; இதுஇன்று பட்டது என்றான்.

இராமன் : எந்தைஒத்த ஜடாயுவெனும் எம்பெரியோய் மாண்டீரோ?

இலக்குவன் : முந்தமுந்த எங்களுக்காய் முனைந்துயிரும் விட்டீரோ?

இராமன் : தியாகத்தின் திருஉருவே, தெய்வபதம் உமக்கென்றே
நியாயத்தில் காத்திருக்கும்! நிலைபேறும் வாய்த்திருக்கும்!

வாதம்பி வா; இவர்க்கு வணங்கிக்கடன் செய்துவிட்டுச்
சீதைஎங்கு சென்றதெனத் தேடுதலும் பின்தொடர்வோம்.

(கிஷ்கிந்தை மலைமேல் இராம இலக்குமணர் பேசிக்கொண்டு வருகிறார்கள்.)

இராமன் : நெடும்தொலைவு தேடிவந்தும் நேரிழைநாம் காண்கிலோம்.

இலக்குவன் : கடும்தொலைவு கண்டதல்லால் கண்டதில்லை அண்ணியைநாம்.

இராமன் : சபரிசொன்ன மலைகண்டோம்; சற்றிங்கு இளைப்பாறுவோம்.
அபரிமித மானபம்பை ஆற்றுவளம் அமைதிதரும்.

(அனுமன் அங்கு பிரம்மச்சாரியாக வருதல்)

இலக்குவன் : யாரோஓர் இளைஞர்நமை எதிர்நோக்கி வருகின்றார்.

இராமன் : வீறொடுதான் வருகின்றார்; விபரம் கேட்டுத் தெரிந்துகொள்வோம்.

(அனுமனை நோக்கி)

வா இளைஞ யார் நீயோ? வரும் உனது காரணத்தை
நேயமுடன் யாமறிய நிகழ்த்துவையோ சற்றேநீ?

(அனுமன் தன்னை அறிமுகப்படுத்தல்)
(பாட்டு)

மஞ்சுஎனத் திரண்ட கோல மேனிய! மகளிர்க்கு எல்லாம்
நஞ்சுஎனத் தகைய ஆகி, நளிர்இரும் பனிக்குத் தேம்பாக்
கஞ்சம்ஒத்து அலர்ந்த செய்ய கண்ண!யான் காற்றின் வேந்தற்கு
அஞ்சனை வயிற்றில் வந்தேன்; நாமமும் அனுமன் என்பேன்

அனுமன் : வாயுமகன் தாய்அஞ்சனை வயிற்றிலே தோன்றியவன்.
ஆயஎன்பேர் அனுமன்நீவிர் யாதிங்கு வந்ததெனச்
சுக்கிரீவன் என்றஎங்கள் சுடர்ப்புதல்வன் ஆணையினால்
இக்கிரிகிஷ் கிந்தையில்நீர் ஏறியமை கண்டுவந்தோம்.

இராமன் : நன்றுநன்றிவ் இளைஞன் நயமாகப் பேசுகிறான்!
குன்றாத கலைகளொடு கொழுமறையின் கடலுமிவன்

சொல்லாலே தோன்றுவதால் யார்கொலோஇச் சொற்செல்வன்?
நல்லானாம் நான்முகனோ? நரைவிடைகொள் சிவன்தானோ?
(அனுமானை நோக்கி)
சீர்கொளும் அனுமனெனும் சொற்செல்வ, இப்போதே
நேர்கொள நாம் சந்திக்க நினைக்கிறோம் சுக்ரீவரை.

அனுமன் : இப்போதே நான்அவரை இங்கழைத்து வருகின்றேன்.
ஒப்போடு வருவர்அவர் உளம்நிறைந்த மகிழ்வோடு
தப்போடு மனையாளும் தன்னகரம் அண்ணன்கொண்ட
வப்போடு குமைந்தஅவர் விரைந்தழைக்க வந்திடுவார்.
(சுக்கிரீவனை அழைத்து வருதல்)

சுக்ரீவன் : வணக்கங்கள் பெருமனத்தீர், வந்தெம்மை அழைத்ததென்னோ?

இராமன் : இணக்கங்கள் தேவைஎன்றே இங்கும்மை வரச்சென்னோம்.
சுணக்கமின்றி உம்குறையும் சுருக்காகத் தீர்த்துவைப்போம்
பிணக்குபட வாலிசெய்த பிழைஒழித்தும் காத்திருப்போம்.
(சுக்ரீவன் சற்று தயங்கி மவுனமாக இருத்தல்)
ஏன்ஐய மாய் உளதா? என்னஎண்ணி இத்தயக்கம்?

சுக்ரீவன் : வாலிஅவர் பெருவலிமை வாய்த்தவர்; நீங் கள்அறியீர்
மேலுமெவர் பொருதிடினும் மெய்வலிமை பாதிஅவர்
பக்கமே சேர்ந்துவிடப் பரமனிடம் வரம்பெற்றுள்ளார்
மிக்கவே அதனால்தான் மெய்அச்சம் எங்களுக்கு.

இலக்குவன்: தேவையே இல்லைஇனி; தெளிவாக நீர்அறிக.
சேவைஎன எண்ணிஎல்லாம் செய்துமுடிப் பார்அண்ணன்!

இராமன் : அம்மட்டும் இல்லை உன்றன் அன்பர்களே என்அன்பர்
உன்மட்டும் வம்பரெனில் உறவில்லை. எமக்கும்தான்
நம் மட்டும் எவ்உறவும் நம்இருவர்க் கும்உறவே
விம்மட்டும் நம்முன்அன்பு வேண்டலாம் உயிர்த்துணையே!

அனுமன் : அவ்வளவே சுக்ரீவ அண்ணலுக்கும் தேவை இதோ
தவ்வஇவர் மனைவியையும் தான்வாலி கவர்ந்துள்ளார்.

இராமன் : கவலைவிடு சுக்ரீவ கட்டாயம் மனைவியையும்
தவ்வியஉன் ஆட்சியையும் தந்திடுவோம் மீட்டிஇங்கே
சான்றுஏழுஅம் மராமரமும் சரம்ஒன்றால் துளைத்தவழி
தான்தெரியக் காட்டிவிடின் தனித்தொப்பு வைஅன்றோ?

சுக்ரீவன் : போதுமருள் புண்ணியனே பூரணமாய் உன்சரணம்.

அனுமன் : வாதமென்ன இனியும்? எங்கள் வானரமே நின்அரணும்.

சுக்ரீவன் : (ஒரு துணி முடிப்பைக் காட்டி)
சின்னாள்முன் நிலம்வீழ்ந்த சிறுதுணியின் முடிப்பொன்றை
இந்நாளும் வைத்துள்ளேன்; இதோஎடுத்துக் காட்டுகிறேன்
தென்நோக்கித் தசகண்டன் தேரில்கொண்டு போகும்கால்
மண்நோக்கித் தேவிவிட்ட மணிநகைதாம் இதில்உள்ளன!

இராமன் : ஆம்எனது சானகியின் அணிகலன்கள் தாம்இவையே
போம்வழியில் களைந்தெறிந்து போயுள்ளாள் கொடியனொடு.

சுக்ரீவன் : தேவியினை இழந்ததுயர் தெரிகிறது தங்களின்பால்.

இராமன் : மேவிஅதே துயரும்தான் மிகநொந்தாய் சுக்ரீவ,
வாலிமுன் னோன்இருக்குமிடம் வந்தெனக்குக் காட்டிவிடு.
ஏலமுன்னே அழித்துனது இல்லாளை மீட்டளிப்பேன்.

சுக்ரீவன் : இப்போதே அவன்உறையும் இடம்சென்று, 'வாவெளியே
தப்பாதே' எனஅழைப்பேன் தமையனிடம் போர்செயவே.

அனுமன் : ஆம்அதுபோல் வாலியினை அழித்தால்தான் அவர்படையும்
நாம்உரிமை செய்துகொண்டு நம்அன்னை யைத்தேடலாம்.

சுக்ரீவன் : வாருங்கள்அவ் வாறுசெய வாலியின்தற் போதிடத்தைச்
சேரஉங்க ளோடுசென்று சீக்கிரமே காட்டுகிறேன்.
(எல்லோரும் மலை உச்சிக்குச் செல்கிறார்கள். மலையைக் காட்டி...)
வாலிஇந்த உச்சியில்தான் வாழ்கிறார் தாரையொடும்.

இராமன் : மேலிருந்து கீழ்வரச்சொல், மிகப்பொருது பார்ப்பதற்கே!

சுக்ரீவன் : தைரியமெனும் ஒன்றிருந்தால் தம்பிமனை கவர்ந்தவனே
வயிரமொடு நேருக்குநேர் வாமோதிப் பார்த்திடலாம்.
உயிரின்மேல் ஆசைஎனில் உடனேவிடு என்மனையை
பயிரின்மோல் ஆனைபுகப் பார்அதுபோல் அழிந்திடுவை!

(மலை உச்சியில் வாலிகுடி இருப்பில் போர்க்கெழும் வாலியை அவன் மனைவி தாரை தடுக்கிறாள்.)

தாரை : வேண்டாம்போர் வல்லோரே, விவேகமொன்றே இனிவேண்டும்.
நீண்டநெடு நாள்கிடந்தே நேரில்வந்து உமதுதம்பி.
வேறுதுணை யோடுஇங்கு வீரங்கள் பேசுகிறார்
மாறுதுணை யோடுவந்து மல்லுக்கே அழைக்கின்றார்.

(தாரை விலக்கவும், வாலி மறுத்துக் கூறுதல்)
(பாட்டு)

கொற்றவ! நின்பெருங் குலவு தோள்வலிக்கு
இற்றனன், முன்னைநாள், ஈடு உண்டு ஏகினான்
பெற்றிலன் பெருந்திறல் பெயர்த்தும் போர்செயற்கு
உற்றது, நெடுந்துணை உடைமை யால்என்றாள்.

வாலி : மல்லுக்கே அழைத்தாலும் மாவாலி மலைப்பேனா?
சொல்லுக்கே அழைப்பதுவீண் சுக்ரீவன். அறியேனா?
தவிரவும்எத் துணையோடு தாக்கிஎனை எதிர்த்தாலும்
அவிர்ஒளியின் முன்இருள்போல் அப்படியே சுருண்டிடுவான்.

தாரை : சாதாரணத் துணைஅல்லவே. சக்ரவர்த்தி தசரதனின்
தோதான மைந்தர்அவர்; துணிவுமிகு ராமஇலக்குவர்!

வாலி : போடிபோ தாரைகையே பொருதஅவ ராவருவர்?
கூடிஇந்த உலகெல்லாம் கும்பிடுதெய்வம் போன்றஅவர்
இவ்வழிவைச் செய்வாரா? இளவலுக்கே ஆட்சிஎலாம்
பவ்வியமாய்த் தந்தவரா பாதகங்கள் செயத்துணிவார்?
பெண்ணியல்பால் இவ்வாறு பேசுகின்றாய் பேதைமையாய்.

தாரை : எண்ணியும்தான் பேசுகிறேன்; எழவேண்டாம் போருக்கு;
கண்ணியமாய் அவ்வழைப்பைக் காதோடும் வீட்டிருங்கள்
புண்ணியமாய்ப் போகிறது; பொறுமைஇங்கே காத்திருங்கள்.

வாலி : பயன்ஒன்றும் இல்லாமல் பயம்ஒன்றைக் கிளப்புகின்றாய்
துயர்ஒன்றும் அறிவுரையே தொடர்ந்தெனக்குக் கூறுகிறாய்.
பெண்ணாய்நீ இருப்பதனால் பிழைஉரைத்தும் தப்பித்தாய்.
எண்ணாதும் உனைவிட்டேன்; இதோபோர்க்கே புறப்பட்டேன்.
(பாட்டு)
உழைத்தவல் இருவினைக்கு ஊறு காண்கிலாது
அழைத்துஅயர் உலகினுக்கு அறத்தின் ஆறுஎலாம்
இழைத்தவற்கு, இயல்புஅல இயம்பி என் செய்தாய்?
பிழைத்தனை; பாவி!உன் பெண்மை யால் என்றான்.

(கிஷ்கிந்தை மலைச்சரிவில் வாலி இறங்கி வந்து சுக்ரீவனைப் போருக்கு அழைத்தல்)

வாலி : வாய்வீரச் சுக்ரீவா வந்துவிட்டேன்; நீயும் வா!
மாவீரம் காட்டுக. உன் மாப்பிளந்து வீழ்த்திடுவேன்!

இலக்குவன் : அண்ணாஇவ் வாலிஉடல் அரும்கட்டைப் பார்த்தீரா?
திண்ணான சுக்ரீவன் தேகத்தையே ஒத்துளது.
தமையனென்றும் பாராமல் தான் எதிர்க்கும் சுக்ரீவன்
நமக்குமட்டும் எவ்வாறு நறும்துணையாய் உடன்இருப்பார்?

இராமன் : வானரர்தம் பழக்கவழக்க வகைஎல்லாம் மானுடர்க்குத்
தான்ஒக்கப் பொருந்தாது; தனித்தனிதான் அவ்வகையில்
ஆகஎதும் பயப்படஓர் அவசியம்இல்லை. இருவருமே
வாகைவெற்றி சூடுதற்கு வலிமையுடன் மோதுங்கால்
நாம்புகுந்து வாலியினை நறுக்காக வீழ்த்திடலாம்
ஆம்புகுந்து சுக்ரீவன் அங்குவெற்றி பெறச்செயலாம்.

இலக்குவன் : இருவருமே தோற்றமொன்றாய் இருக்கஇவர் போரிடும்கால்
கருவமிகு வாலியைநாம் கண்டுகொள்வது எவ்வாறு?

அனுமன் : சுக்கிரீவர் மாலைஒன்றைச் சூடுவரேல் வாலியினை
விக்கினம்இல் லாமல்இனம் விரைந்தெளிதாய்க்
காணலாம்தான்.

இராமன் : அப்படியே சுக்கிரீவன் அணிந்துகொள்க மாலைஒன்றை
தப்படிமேல் வாலியினைத் தான்வலியச் சண்டைக்கிழு.

(வாலி அங்கு வருதல்)

வாலி : நீஎன்ன எனைஇழுக்க? நேருக்குநேர் வந்துவிட்டேன்!
வா,என்னை மோதிப்பார். வகையாய்என் பலம்தெரியும்!

இலக்குவன் : அண்ணாபா ரும்வாலி அந்தரத்தில் சுக்ரீவனைப்
புண்ணாக வேசுருட்டிப் போய்எறியப் பார்க்கின்றான்.
இத்தருணம் அம்புவிடின் இறந்துபடு வான்வாலி
உத்தமச் சுக்ரீவனும் உயிர்பிழைக்கத் தப்பிப்பார்.

இராமன் : புறம்இருந்தே அம்பெறிதல் போர்அறம்இல் லைஎனினும்
வரம்அறிந்தே மறைவிருந்து வாலியின்மேல் என்அம்பை
விடுகின்றேன் இக்கணமே; வேறுவழி இல்லைஅதால்
நெடுங்குன்ற அவன்மார்பை நேர்இதுவே துளைக்கட்டும்.

(வாலியின் மார்பில் அம்பு பாய்கிறது. ஒ என அலறிக் கொண்டே)

வாலி : என்னஇந்தக் கொடுங்கணையை யார்விடுத்தார் என்மீது?
மின்னல்வந்து பாய்ந்ததுபோல் மேவியதென் மார்மீது
சுக்ரீவன் தப்பிக்கச் சூழ்ச்சிஇதை யார்சொன்னார்?
உக்கிரமாய்ப் போரிடுங்கால் உண்மையில்நேர் வராதபடி
வக்கிரமாய் மறைந்திருந்து வாளிஎய்தல் யார்புரிவார்?
சிக்கியஇவ் அம்பிலதே சீர்ராமன் பேர்உள்ளது!

(வியப்புடன்)

மூவுலகுக் கெல்லாமாம் மூலவன்பேர் அல்லவோஇது!
பூவுலகின் எழுபிணியும் போக்குமருந் தன்றோஇது!

(பாட்டு)

மும்மைசால் உலகுக்கு எல்லாம் மூலமந் திரத்தை, முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தை, தானே
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை, 'இராமன்' என்னும்
செம்மைசேர் நாமம் தன்னை, கண்களின் தெரியக் கண்டான்

(இராமன் எதிரே தோன்றுதல்)

இராமன் : வில்இங்கு வளைத்தம்பை விட்டதெலாம் நானேநான்!

வாலி : வில்அங்கம் செய்துவிட்டாய் வில்லங்கம்கொண்டேதான்!
கோதண்டம் கொண்டேதான் கோதண்டச் செய்துவிட்டாய்!
தீதுஅண்ட முடியாத திருவுடைய ராமாநீ
தவறுசெய்ய லாமா?உன் தனிப்பெயரால் கேட்கின்றேன்.

இராமன் : கவர்ந்திளையோன் மனைவியைநீ கைக்கொளநேர் துயர்கிறான்.

வாலி : ஒஹோ, மனைவிநீயும் பிரிந்ததனால் மதிஇழந்து போயிற்றோ?
நினைவில்கொள், பிறர்மனையை நேர்தலும்வா னரர்வழக்கே!

இராமன் : புரிந்துகொண்டேன். ஆனாலும் பொருந்ததாத செயல்இதுவாய்.
வரிந்துகொண்டே தம்பிக்கு வகைவகையாய்த் தந்ததுயர்
நீங்கத்தான் இவ்வாறு நின்றம்பு விடலானேன்.
ஆங்கிதைநீ உணர்ந்துகொண்டால் அறமாய்என்
செயல்தெளிவாய்.

வாலி : போகட்டும் இனிஇந்தப் புன்செயலலே வேண்டாம்தான்.
நேர்கட்டுப் பாட்டிலினி நேயம்கொள். தம்பிஇடம்
அங்கதன்என் மகன்முதலாய் அனைவருமே உன்உடைமை!
பங்கமெது நேர்ந்தாலும் பரிசுடனே அன்னவரைத்
தங்குதடை இல்லாமல் தான்புரத்தல் உன்கடமை.

இராமன் : அறம்உணர்ந்த பெரியோய்நீ அமைதிகொள்க. யாவருமே
திறம்உணர்ந்த உறவினர்தாம்; தீரமிகும் அங்கதனே
என்உடைவாள் ஏந்துதற்கோர் இளைஞனெனும் பணிச்சிங்கம்.

வாலி : மன்னுடைய ராமா,உன் மகிமைஇனி வீடடைவேன்.

(பாட்டு)

தன்அடி தாழ்த லோடும், தாமரைத் தடங்க ணானும்
பொன்உடை வாளை நீட்டி, 'நீஇது பொறுத்தி' என்றான்
என்னலும், உலகம் ஏழும் ஏத்தின; இறந்து, வாலி,
அந்நிலை துறந்து, வானுக்கு அப்புறத்து உலகன் ஆனான்.

(வாலி கீழே விழுந்து உயிர் விடுகிறான். மனைவி தாரை அவனைக்காண ஓடி வருகிறாள்)

அனுமன்: தாரைஅதோ வருகின்றார் தன்வாலி வீழ்ந்ததற்கே.

தாரை (அழுதபடி) : யார்ஐயோ செய்துவிட்டார் இக்கொடுமை? அறமாமோ?

இராமன் : அறம்எதுவாய்க் கேட்டினியும் அரற்றுதல்வேண் டாம்வீணே,
வரம்இதுவாய் வாலியும்தான் வான்பேறு பெற்றுவிட்டார்?

அனுமன் : பரம்பொருளாம் இராமன்அம்பின் பாக்கியம்தான் இப்போது
தரும்புகழாய்க் கொண்டிடுக; தாயும்நீ வாழ்ந்திடுக.

இராமன் : நாளையே கிட்கிந்தை நகர்புகுந்து சுக்ரீவர்
ஆளவும் முடிசூட்ட ஆவனவே செய்திடுக.

அனுமன் : ஒப்புகிறோம் பெருமானே. உமதுஆணை போல்நடந்தே
அப்புறம்நம் தேவியையும் அனைத்திடமே தேடலாம்.

அனுமன் : இராம நாமம் வாழ்க. சுக்ரீவ ராஜ்யமிங்கும் சூழ்க!
(அனைவரும் ஆடிப்பாடி மகிழ்கின்றார். அதற்கான இசை ஒலி)

(சீதாதேவியைத் தேடிப்போன அங்கதன் அனுமன் ஜாம்பவான் நீலன் ஆகியோர் மகேந்திரமலையில் கூடுகின்றனர்.)

அங்கதன் : ஆரணியம் அத்தனையும் அலசிவிட்டோம். ஆனாலும்
சீரணியும் பிராட்டிஅன்னை சீதையினைக் கண்டறியோம்.

அனுமன் : எத்தனைதான் மாமலைகள்! எத்தனைதான் பெரும்நதிகள்!
எத்தனைதான் சமவெளிகள்! என்றாலும் தென்திசையில்
ஓர்இடமும் அன்னையினை ஒளித்தஇடம் நாம்அறியோம்!
வேறிடமும் பார்த்தறியோம்; வீண்நாள்தாம் கழிந்தனவே.

அங்கதன் : ஆயினும்நாம் பிராட்டிசிறு அடிச்சுவடும் காண்கிலோம்
தாயினும்மேல் சீதைஅன்னை தடம்சற்றும் பார்த்தறியோம்.

ஜாம்பவான் : விந்தைமலை விந்தியமும் வேய்ந்தோடும் நருமதையும்
முந்தவரும் ஏமகூட முண்டகத்துச் சோலைகளும்
பொன்மணல்கள் உருட்டிவரப் போந்தகோ தாவரியும்
நன்மரகதப் பலசுனையும் நதிகளுமாய்க் கடந்துவந்தும்
எவ்விடமும் நமதன்னை இருக்கின்ற சுவடறியோம்.
இவ்விடம் மகேந்திரமலை இறுதியாய்க் கூடிவிட்டோம்.

அனுமன் : செய்யஇனி என்னஉண்டு? இச் சிகரத்தின் மலைமீதே
பையஇனி ஏறித்தென் பால்மட்டும் பார்த்திடலாம்
ஆம் அதோபார் விண்நகர்போல் ஆங்கோர்நிலம் தெரிகிறது.
மாமயனார் படைப்பேபோல் மாடகூடம் மிளிர்கிறது.

ஜாம்பவான் : சடாயுஅண்ணன் கழுகரசன் சம்பாதி சொன்னதுபோல்
அடாதுசெய்து இராவணன்நம் அன்னையையும் அங்கேதான்
கொண்டுசென்று வைத்திருக்கக் கூடும்என எண்ணுகிறேன்.

அங்கதன் : விண்டுசென்று போய்ப்பார்த்தால் விவரம்தெரியப் போகிறது.

நீலன் : யார்அங்கு போகிறது? அனுமனே போய்வரலாம்.

ஜாம்பவான் : நேர்அங்கு போவதற்கு நிச்சயம்நம் அனுமன்தான்
ஏன்னென்றால் அனுமன்தான் எவ்வகையும் வலிமிக்கார்
வான்நின்ற காற்றுமழை வளைக்கின்ற ஊழிஅனல்
எதனாலும் பாதிப்பே இல்லாதார். கோள்களையும்
பதமாகத் தூக்கிவிண்மேல் பந்தாக ஆடவல்லார்!

அங்கதன் : மேலும்அன்றே ஆதவனை மேவிஎதிர்த் தேஅவர்பால்
நாலுவகைச் சாத்திரமும் நறுக்காகக் கற்றறிந்தார்.

நீலன் : வாயுமகன் ஆதலினால் வாயுமனோ வேகமுடன்
போயுமங்கே உள்விபரம் புரிந்துகொண்டு திரும்பிடலாம்.

ஜாம்பவான் : ஆம்; ஆதனால் அனுமனையே அவசரமாய் அனுப்பிவைப்போம்.
நாம்அவரை எண்ணுமுன்னே நம்அண்ணல் இராமபிரான்
இவரிடம்தான் சீதைஅன்னை இயல்புகளைக் கூறிமற்றும்
உவகையுடன் அடையாளம் உள்ளகணை யாழியையும்
தந்துள்ளார்; ஆகையினால் தான்இவரே இக்கடமை
முந்துள்ள மோடுமுழு மூச்சாக மூடிக்கவல்லார்.

அனுமன் : நீங்களெல்லாம் இவ்வாறு நிச்சயித்தால் உங்களெண்ணம்
தாங்கவந்த பெரும்பேறாய்த் தான்ஏற்றுக் கொள்ளுகிறேன்.
அண்ணல்திரு நாமத்தை அப்படியே ஒருகணம்நாம்
எண்ணிவிடின் போதாதோ, எக்கடலும் தாண்டுதற்கு!

அங்கதன் : ராம்அண்ணல் நாமத்தை ராம்ராம் என முன்ஒருநாள்
நாம்அனைவ ரும்சொல்லவே நைந்த இருசிறகு
சம்பாதிக் கேமுளைத்த சம்பவமே சான்றுஅதற்கு
நம்பாதிருக்க இனி நமக்கென்ன ஐயஇலக்கு?

அனுமன் : அங்கதன்கீழ் சொன்னதுபோல் அடியேனே இக்கடலைத்
தங்குதடை இல்லாமல் தாவிஇலங் கைபுகுவேன்.
புகுசெயலே மட்டுமில்லை; புண்ணியநம் செல்வியினை
வெகுவிரைவில் இங்கேயும் மீட்டுவந்து சேர்த்திடுவேன்.

ஜாம்பவான் : வீரமிகு ஆஞ்சனேய வெற்றியுடன் போய்த்திரும்பு,
தீரமிகு மாருதியே, தேவியைத்கண் டுடன்திரும்பு.

அனுமன் : இக்கணமே கடல்தாவ இதோஎழுந்து செல்லுகிறேன்
நற்கடமை முடித்துவிட்டு நான்மீளும் வரைநீரும்
இங்கேயே இருந்திடுங்கள் இராமபிரான் திருவருள்நம்
பங்கேசேர்ந் திருப்பதனால் பணித்தசெயல் வெற்றிபெறும்.

(ராம்ராம் எனச் சொல்லிக் கொண்டே கடல்கடந்த அனுமன்
இலங்கைக்குள் புகுந்து)

அனுமன் : எத்தனைஎத் தனைத்தடைகள்! எத்தனைஎத் தனைஇடங்கள்!
அத்தனையும் இராமஅண்ணல் அருள்பெயரின் உச்சரிப்பால்
தேர்ந்தறியும் ஞானமுன்னே திரண்டோடும் பேதைமைபோல்
நேர்ந்தறியப் போயிற்று; நேர்இலங்கை வந்தாயிற்று
திருமகளை யும்எளிதாய்த் தேடுவதற்கு உதவுதல்போல்
இருள்மகளும் வந்துவிட்டாள், இலங்கை முற்றும் தழுவஎன்றே!
நல்லநல்ல வாய்ப்பிதுதான்; நவநவமாய் மாளிகைகள்
வல்லவல்ல மாடங்கள் வான்எழும்உப் பரிகைகள்
அத்தனையும் தேடுவதற்கு அரியதொரு சந்தர்ப்பம்
முத்தனைய நிலவுமட்டும் முழுப்பொலிவாய் எரிகிறது!

(தேடிப் பார்ப்பதால் ஏற்படும் சிறிது தாமதத்தின்பின்)

எங்கெங்கு தேடியுமே என்அன்னை இருக்குமிடம்
கண்கள்முன் படவில்லை. காணுமதோ சோலைஒன்று
பாப்போமே அங்கும்தான் - பதற்றமாய் ஆம்அன்னை!

(சீதாதேவியைக் கண்ட அனுமன் மகிழ்ச்சி அடைதல்)
(பாட்டு)

வீடினது அன்று அறன்; யானும் வீகலேன்
தேடினென் கண்டனென்; தேவி யே!என
ஆடினன்; பாடினன்; ஆண்டும் ஈண்டும் பாய்ந்து
ஓடினன்; உலாவினன்; - உவகைத்தேன்உண்டான்

(சீதையொடு இராவணன் வந்தெதிரே பேசுதல்)

அனுமன் : பேசுவதை என்னஎன்றே பின்மறைந்து கேட்டுவைப்பேன்
சூசும்வகை என்னென்வோ கொடுமதியன் வீசுகின்றான்.

(அனுமன் மறைந்திருந்து கேட்க, இராவணன் சீதை - உரையாடல்)

இராவணன் : பேதைமையின் வடிவான பெண்அழகே, ஏன்இனியும்
வாதைஎனக் கேதந்து வதைக்கின்றாய்? உனைவிரும்பி
நாளைமறு நாள்எனவே நாள்எண்ணிக் கழிக்கின்றேன்.
வாழஇள மைஎனும்கால் வாழ்வதன்றோ சுகம்எதுவும்?
மவுனமும்தான் ஏன்இனியும்? மறுக்காதே; உனக்குரித்தாய்
எவனுமிங்கே வந்துன்னை எடுத்தேகும், கனவெண்ணாதே.

சீதை : போய்விடுநீ இங்கிருந்தே; புலம்பாதே காமவெறி
வாய்விடநீ சொல்லும்சொல் வந்தெவர்க்கும் பொருந்தாது.

பிறன்மனையை நயக்கமுழுப் பேதைமைநீ துணைக்கொண்டு
திறன்முனையப் பேசுகிறாய் சீச்சீநீ ஓர்துரும்பே!

இராவணன் : மடத்தனமாய்ப் பேசாதே; மடநங்காய், யார்எனநான்
அடுத்தினமாய்ச் சொல்லுகிறேன். அரன் இடத்தே பலவகையும்
வரம்பெற்று வாழுகிற வலியமகா அரக்கன்நான்!
திறம்பெற்ற தேவருமே தேடிஎனை எதிர்க்கவரார்
அவ்வாறெல் லாம்இருக்க அற்பமனி தரைநம்பிச்
செவ்வாழைத் தண்டிஎமைச் சீரையேவீண் செய்கின்றாய்
எவ்வாறே அவரைநம்பி இன்னமும்நாள் போக்கிடுவாய்?
ஒவ்வாதே போம்காலம் ஒருநாளும் திரும்பாதே!

சீதை : திரும்பாத மதியால்தான் திருந்தாது பேசுகிறாய்.
புறம்பாக எதைஎதையோ பொருந்தாமல் உளறுகின்றாய்.
புல்அனைய அரக்கர்குலப் புழுவேநீ போய்விடு; உன்
சொல்இணைய ஒப்புதற்குச் சூழ்பவளே இல்லைநான்.

இராவணன் : நீமட்டும் ஒப்புவையேல் நின்னதென இவ்விலங்கை
தான்மட்டும் அல்ல;இந்தத் தராதலமே உரிமைசெய்வேன்.

சீதை : உரிமைஎன முதலில்உயிர் உன்னிடமே இருப்பதற்குச்
சரிவரவே பேசாத சழக்கன்நீ; அகன்று வீடு.

இராவணன் : அகலத்தான் போகின்றேன்; ஆயினும்உன் ஒப்புதலைப்
புகலத்தான் வேண்டுமென்பால்; பொறுத்திருப்பேன்
சிலநாள்தான்.

மறுத்துவிடத் துணிவையேல்அம் மனிதப்பதர் இருவரையும்
பொறுத்துவிடத் துணிவுகொள்ளேன். போக்கிடுவேன் எமனுலகு.
அயோத்திக்கும் சென்றங்கே அனைவரையும் மாய்த்துவிட்டு
வயோதிகர்உன் சனகர்முதல் வாழ்வோரையும் மிதிலையில்
கொன்றுவிடத் துணிந்துவிடும் கொலைகாரன் ஆகிடுவேன்.
நன்றுநீ புரிந்துகொள்;இந்நாள்மட்டும் செல்கின்றேன்.

(இராவணன் செல்கின்றான் சென்றபின்)

சீதை : என்னஇது? சீக்கிரமே இதற்குவழி பிறக்காதா?
மன்னருமே எனைத்தேடி மறவாழல் வாருவாரா?
மானையே தேடிஅவர் மறுப்பின்றிப் போகஎன்
சீமானையே துறந்துவிட்டேன்; சீச்சீஎன்ன மடமைஇது!

ஆறுதலைச் சொல்லஎன்றே அண்மையுள்ள திரிசடையும்
தேறுதலைச் சொல்லிவிட்டுத் தீர்ந்ததென எங்குசென்றாள்?
மாளுவதல் லால்எனக்கு மறுவழியே தோன்றவில்லை.
நீளுவதேன்? இனியுமொரு நிமிடம்உயிர் பொறுப்பதில்லை.

(சீதை தன் உயிரை மாய்த்துத் கொள்ள முனைதல் அப்போது மறைவில் இருந்த அனுமன் வெளிவந்து)

அனுமன் : பொறுங்கள்அன்னாய் பொறுங்கள்சற்று புகல்வதையே கேளுங்கள்
அறம்கொளவே இராமஅண்ணல் ஆணையிலே வந்துள்ளேன்.

சீதை : திறம்கொண்டெனைச் சம்மதிக்கத் தேருமொரு சூழ்ச்சியினால்
மறம்கொள்அந்த இராவணனே மறுபடியும் அனுப்பினனோ?

அனுமன் : இல்லைஇல்லை அன்னையே நான் இராமபிரான் தாதுவனே!
சொல்லஅதற் காகவேமுன் சூழ்ந்தபழம் நிகழ்வுகளும்
நல்இதய மோடுரைத்து நம்பஇக்கணை யாழியையும்
வல்லியுங்கள் இடமேதான் வழங்கிடுமாறு அனுப்பிவைத்தார்.

சீதை : ஆம் இதுஎன் கணையாழிதான்! அண்ணலா தரச்சொன்னார்?
பூமிசைநான் உயிர்பெற்றேன் புனிதஅவர் அன்புமுற்றேன்.
சாமிஅவர் கொடுத்தஇதால் சத்தியம்நான் வாழ்வடைவேன்.
சேமமுடன் அனுமனேநீ சிரஞ்சீவி நிலைபெறுவாய்!

அனுமன் : பெரும்பேறே பெற்றேன்நான். பெறலரிய பேறினியும்
வரும்பேறாய் உங்கள்திரு வடிக்கான சேவைஒன்றே.

சீதை : அங்குஅவர்எவ் வாறுள்ளார்? நவின்றிடுக அதை முதலில்.

அனுமன் : எல்லோரும் உங்களைத்தான் எங்கெங்கும் தேடுகிற
வல்லோராய் முனைந்துள்ளார். வள்ளலுமே வாட்டத்தால்
உங்களைப்போன் றேபிரிவால் உயிர்உருகித் தேய்கின்றார்!
தங்கள்மனம் சம்மதித்தால் தாமதியேன். இங்கிருந்தே
உங்களைநான் விடுவித்தென் உரமிகுதோள் ஏற்றுவித்துப்
பங்கமிலா அவ்வண்ணல் பால்கொண்டு சேர்த்திடுவேன்.

சீதை : வேண்டாம் அனுமன்அது வீரத்திற் கழகுஅல்ல
பூண்டாய்இவ் வரக்கர்தமைப் பொசுக்கிவிட்டே என்தலைவர்
எனைமீட்டுச் செல்வதுதான் இனிச்செய்ய வேண்டியது.
வினைமீட்டிச் செல்லஇனி வித்தகஇச் சூடாமணி

கொண்டுபோய் அண்ணலின்பால் கொடுத்துவிட்டுஓர்
திங்களுக்குள்
கண்டுவந் தெனைமீட்டும் கருணைசெய்யச் சொல்லிவிடு
இல்லைஎனில் உயிர்துறப்பேன். இனியுமிந்த அசோகவனத்
தொல்லையொடும் வாழேன்நான். தொடந்திதையும் கூறிவிடு.

அனுமன் : அவ்விதமே செய்கின்றேன் ஆணைஎன விடைகொடுங்கள்.
கவ்வியஉம் துயரெல்லாம் களையத்தான் போகின்றேன்.
போகும்வழி இலங்கையையே பொசுக்கிவிட்டுத் தான்போவேன்
ஆகும்வழி நகர்முற்றும் அழித்துவிட்டுத் தான்நகர்வேன்.
சோகவன மாய்இவ்வ சோகவனம் மாறியும்போய்
ஏகமெனப் பாலைவனம் என்றேதான் ஆக்கிவைப்பேன்.

(அனுமன் இலங்கையை அழிக்க முற்படுதல்.
அரக்கர்கள் அனைவரும் அச்சத்தால் முறையிடல்)

அரக் 1 : ஐயையோ! குரங்குசெயும் அழிவுக்கே எல்லைஇல்லை!

அரக் 2 : பொய்யேபோல் மரங்களெலாம் பொலபொலெனச் சாய்கின்றன.

அரக் 3 : மையமுள்ள வேள்விமணி மண்டபமும் சரிகிறது!

அரக் 4 : செய்யஇந்த இலங்கைக்கோ சீரழிவு நேர்கிறது?

அரக் 5 : அட்சயன் சம்புமாலி அனைவருமே இக்குரங்கை
மிச்சமின்றி எதிர்க்கப்போய் மீளாமல் மாண்டுவிட்டார்!

(இம்முறையீடுகளைக்கேட்ட இந்திரஜித் உடனே போய் அனுமனைப்
பாசத்தால் கட்டி இராவணன் முன் நிறுத்தித் கொண்டு)

இந்திரஜித் : பட்சமின்றி அதனால்தான் பாசத்தால் இக்குரங்கை
மெச்சஇங்கு பிணித்துவந்தேன் மேகநாதன் எந்தையே.

இராவணன் : அப்படியே வால்முழுதும் அனல்கொழுத்தி யேவிடுங்கள்
வெப்படியில் கருகட்டும்; வீடாதீர்கள் தப்பிக்க.

அனுமன் : நல்லதாய்ப் போயிற்றுன் நாசகாலப் புத்திகொண்டே
வல்லஇவ் இலங்கைமுற்றும் வாயுமகன் யான்எரிப்பேன்
அக்கினிஎன் சிறியதந்தை. அவரேஎன் உறுதுணையாய்ப்
புக்கிலங்கை பொசுக்கிடுவேன். போய்வருகிறேன், ராம்! ராம்!

(அனுமன் புறப்பட்டுச் செல்கிறான்.)
(சீதையைத் தேடிச் சென்ற வானரர்களை எதிர்பார்த்துக் கிஷ்கிந்தையில் இராம இலக்குமணர்கள், சுக்ரீவன் ஆகியோர் காத்திருக்கின்றனர். வானவீதியில் இராம நாமத்தை முழக்கிக் கொண்டே அனுமன் வருகிறான்.)

அனுமன் : ராம்! ராம்! ராம்! ரகுநாயக ராம்! ராம்! ராம்!

(அனுமன் வருவதைப் பார்த்துவிட்டு)

சுக்ரீவன் : சுவாமி, அதோ பாருங்கள்; சூறைஒன்றே வருவதுபோன்
அவாமிகவே மகிழ்வோடும் அனுமன்அதோ வருகின்றாள்.
(வருகை பற்றி பாட்டு)
கண்டனென், கற்பினுக்கு அணியை, கண்களால்,
தெண்திரை அலைகடல் இலங்கைத் தென்நகர்
அண்டர்நா யக!இனி, துறத்தி, ஐயமும்
பண்டுஉள துயரும்என்று அனுமன் பன்னுவான்.

(சீதையைக் கண்டதை அனுமன் இராமனிடம் கூறுதல்)
(பாட்டு)

அனுமன் : விற்பெருந் தடந்தோள் வீர! வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்தள் ஆய நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற்பிறப்பு என்பது ஒன்றும், இரும்பொறை என்பது ஒன்றும்
கற்புஎனும் பெயரது ஒன்றும், களிநடம் புரியக் கண்டேன்.

இலங்கையை முழுதும் நாடி, இராவணன் இருக்கை எய்திப்
பொலங் குழை யவரை எல்லாம் பொதுவுற நோக்கிப்
போந்தேன்.
அலங்குதண் சோலை புக்கேன்; அவ்வழி, அணங்குஅன் னாளைக்
கலங்குதெண் திரையிற்று ஆய கண்ணின்நீர்க் கடலில்,
கண்டேன்.

(பாட்டு முடிந்து)

அனுமன் : கண்டேன்என் அன்னையைமெய்க் கற்புக்கணிகலனை
கண்டதம் மட்டுமல்ல. கற்பின் நடனமும் கண்டேன்.

இராமன் : மிகமிகவே மகிழ்ச்சிஉன்றன் மேனிகொண்ட பரவசம் பார்த்து
அகம்மிகவே மகிழ்கின்றோம் அனைவருமே உன்னோடும்!
சீதைநங்கை எங்குள்ளாள்? சீக்கிரம்சொல், எவ்வாறுள்ளாள்?

அனுமன் : போதெல்லாம் உங்கள்திருப் புனிதமிகும் நினைவுஒன்றே
கொண்டவராய் அரக்கியர்தம் கும்பலிடை அசோகவனம்

கண்டவராய்ப் பெரும்காவல் கட்டிடையே உயிர்த்துள்ளார்.
ஆனாலும் தங்கள்கணை யாழியினைக் கண்டவுடன்
வான்ஆளும் மகிழ்ச்சியினை வந்துஅவரே பெற்றுவிட்டார்!
பாருங்கள் இதோஅவரும் பதிலுக்குச் சூடாமணியைச்
சேருங்கள் எனச்சொல்லிச் செய்தியுமே தந்துள்ளார்.

இராமன் : என்னசெய்தி அனும?அதை இயம்புக உடனேயே!

அனுமன் : இன்னுமொரு திங்களுக்குள் இராமபிரபு அங்குசென்று
அன்னையினை மீட்டனுமாய் அழுதழுது செய்திசொன்னார்.
இல்லைஎனில் தன்உயிரும் இராதென்றே உறுதியொடு
சொல்லியுமே அனுப்பிவைத்தார், சூடாமணி தந்தவொடு.

சுக்ரீவன் : இப்போதே ஒன்றாய்நாம் இலங்கைக்குப் புறப்படுவோம்.
தப்பாதே அன்னைஉயிர் தரித்திருக்கச் செயற்படுவோம்.

இராமன் : ஆம்.நீங்கள் யாவருமே ஆனபெரும் படையோடு
தாம்நீங்கா ஒற்றுமையாய்த் தகும்வழியே செல்லுங்கள்.

ஜாம்பவான் : அனுமனேஉன் தோளில்நம் அண்ணலைமுன் தாங்கிடுக
மனம்உவந்து அங்கதன்தோள் மணிஇளவல் ஏந்திடுக.

அங்கதன் : புறப்படுவோம் இப்போதே போய்ச்சேரும் இலங்கைமுன்னே
சிறப்பொடுதென் பால்உள்ள செம்பவள மலைஅடைவோம்.

அனைவரும் : ராம்! ராம்! ராம்! ஜெய ராம்! ராம்! ராம்!

(இராமநாமத்தை முழக்கிக் கொண்டே புறப்படுகின்றனர்.)
(இலங்கையில் இராவணன் தன் சபாமண்டபத்தில் அமைந்தபடி மந்திராலோசனை)

இராவணன் : மாமாயக் குரங்கொன்று மமதையுடன் இங்குவந்து
தாம்மாயம் செய்தபடித் தனிஎரியும் மூட்டிவிட்டுப்
போமாறு துணிச்சலென்ன? பொறுத்திடவோ நாம்இனியும்?
ஆமாறு வெட்கம்!வெட்கம்! ஆனதலைக் குனிவுமன்றே?

அமைச்சர் : அயனாரின் ஆணைவழி அன்புங்கள் மாமனெனும்
மயனாரும் இலங்கையினை மறுசெப்பம் செய்துவிட்டார்.

இராவணன் : இருந்தாலும் இலங்கையுள்ஓர் இழிகுரங்கு புகுந்ததெனில்
பொருந்தாது.என் புகழுக்கே; புகலரிய அவமானம்!
வருந்தாமல் இருந்திடவும் வழிஎனக்குத் தோன்றவில்லை.
சிரம்தாழ்த்த வோசெய்வான், சீச்சீஇத் தசகண்டன்?
விடாதுஎங்கே இருந்தாலும் விரட்டியும்தே டிக்கொணர்ந்து
படாதபா டெல்லாமே படும்படியக் குரங்குக்கும்
தூண்டிவிட்ட மானிடராம் துணைஇரண்டு பதர்களுக்கும்
வேண்டியபா டங்களைநாம் விரைவில்கற் பிக்காவிடின்
ஈண்டுமனம் ஒருகாலும் எய்தாதே அமைதியினை!

(கும்பகாணன் அங்கு வருதல்)

கும்பகர்ணன்: ஆண்டுபெறும் அமைதிக்கே அண்ணாவழி நான்சொல்வேன்.

இராவணன் : வாதம்பி கும்பகர்ணா வந்திங்கே சற்றுஅமர்நீ,
ஏதும்பிழை இல்லாமல் என்னசொல்லப் போவதுநீ?

கும்ப : பிரமகுலத் தேபிறந்தும் பெரும்பிழைகள் செய்துவிட்டுத்
தருமநெறி பேசுவது தான்என்ன ஞாயமிங்கே?

(கும்பகர்ணன் அறிவுரை)
(பாட்டு)

ஆசுஇல்பர தாரம்அவைஅம் சிறை அடைப்பேம்
மாசுஇல்புகழ் காதலுறு வேம்; வளமை கூரப்
பேசுவது மானம்; இடை பேணுவது காமம்.
கூசுவது மானுடரை; நன்று, நம் கொற்றம்!

பேசுவது மானம்,இடை பேணுவதோ தீக்காமம்!
கூசுவதோ யானுடரை கொற்றமெலாம் நன்றுநன்று!
அயலானின் மனைவியைப்பெண் டாஎஇங்கு கொண்டுவந்த
செயலாலே தான்இந்தச் சீரழிவு கண்டுவிட்டோம்.
கேவலம்ஓர் பெண்காலின் கீழ்விழுந்தா தான்கொண்ட
ஆவலினை நிறைவேற்ற அடிக்கடியும் கெஞ்சுவது?
அக்கணமே மானம்மரி யாதைஎலாம் நம்மைவிட்டுப்
பொக்கெனவே போனதுஅண்ணா; புரிந்துகொள்நீ! அதனாலே!

இராவணன்: அதனாலே? - சொல்வதென்ன? அத்தனையும் சொல்லிவிடு.
இதம்நானும் கேட்கின்றேன். எனசொல்லப் போகின்றாய்?

கும்ப : சொல்லஇனி என்னஉண்டு? சுணங்காதுஅப் பெண்நெருப்பை
மெல்லவெளி விட்டாலும் மிகவருதல் இகழ்வேதான்!
எனவேநாம் போர்மூலம் எதிர்த்துஇறுதி காண்பதற்காய்
முனைவதொன்றே இப்போது முடிவாய்நாம் கொள்ளும்வழி!

இராவணன் : இம்முடிவுக் கேநானும் இறங்கிவிட்டேன். அதன்படியே
நம்முடிவைச் செயற்படுத்த நன்றுகொள்நீ போர்த்தலைமை!

இந்திரசித் : நிறுத்துங்கள் தந்தையே,அந் நீசநரப் பதர்களைப்போய்
ஒறுத்துதற்குச் சிறியதந்தை உயர்தலைமை யாவேண்டும்?
நானேஅம் மானுடரை நமன்உலகுக் கனுப்பிவைப்பேன்.
ஏன்நீங்கள் போகவேண்டும் எளியவரை நசுக்குதற்கு?

(உடனே எழுந்து, இந்திரசித்து சொல்வதை மறுத்தபடி)

வீடணன் : எளியவர்கள் அல்லர்,அந்த இராமனும் இலக்குவனும்
ஒளியருள்மும் மூர்த்தியரில் ஒருவர்தாம் இராமபிரான்!
அவர்தம்பி இலக்குவனும் ஆதிஅமரர்ஒருவர்.
தவறுதலாய் அவர்களைநீர் தாழ்ந்தவராய் எண்ணாதீர்.

இராவணன் : இருந்தாலும் அவரினும்நான் எண்ணிலா வரம்உடையேன்.
பொருந்தாது பேசுகிறாய் புல்லன்நீ, தம்பிஅல்லன்.

வீடணன் : அண்ணாநான் சொல்வதுகேள்; அந்நாளில் இப்படித்தான்
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிஎண்ணி இரணியனும்
பண்ணாத பாவமெலாம் பலவகையும் பண்ணிநின்றான்.
கண்ணான பிள்ளையையும் கதறக்கதறக் கலங்கடித்தான்.
நானேதான் தெய்வமென்றும் நாரணனே அல்லன்என்றும்
ஊன்ஏறும் கருவமுற்றான். உடன்அரியால் குடல்கிழிந்தான்!

இராவணன் : கதைக்கின்றாய் வீணாகக் கற்பனைகள் வளர்த்தபடி!

வீடணன் : கதைஒன்றும் அல்லஇது, கற்பனையும் அல்லஇது!
விதைஒன்றே நாளடைவில் விரிந்துமரம் ஆவதுபோல்
நாமேதான் புரிந்துகொள்ள நடந்தமுன்னாள் உண்மைஇது!

இராவணன் : ஆம்; எல்லாம் யான்அறிவேன் அறிவுரைகள் தேவைஇல்லை
மனைவியையே வேறொருவன் மாயமாய்க் கவர்ந்துசெல்ல
வினைஇழந்து நிற்பவரோ வீரரென்பாய்? வெறும்
பொய்ம்மைதான்!

அவர்களையே புகழ்ந்துகொண்டும் அண்ணனையே
இகழ்ந்துகொண்டும்
தவறுகளையே அடுக்கடுக்காய்த் தான்பேசி மகிழ்கின்றாய்!
போய்விடுநீ, இங்கிருந்தே, புன்மொழியை அடுக்காதே!
நோய்விடுதல் போல்உன்னை நொடியில்எண்ணி மறந்திடுவேன்.

வீடணன் : போகின்றேன் அண்ணாநான் போகத்தான் போகின்றேன்.
ஆகின்ற உண்மைஇது! அவரால்தான் உன்இறுதி!

இராவணன் : இதுவரைஇல் லாள்இழந்தும் எத்தனைநாள்
போர்க்கெழுந்தான்?
புதுவகையில் மால்அவனாய்ப் புகல்கின்றாய் எனக்கிறுதி

வீடணன் : திண்ணமுடன் சொல்கின்றேன் தெய்வத்தைப் பழித்தவரும்
பண்ணுமிழி செய்கையரும் படுவர்ஒரு நாள்அழிந்தே!
அழிவுக்குப் பாத்திரமாய் ஆனவரை எவ்விதிதான்
விழி வைத்துக் காப்பாற்றும்? விழும்பள்ளம் தடுத்தகற்றும்?

இராவணன்: தடுத்தகற்றத் தேவைஇல்லை. தம்பிஎன்றும் பாராமல்
அடுத்துனையே கொல்வதற்கும் ஆம்துணிவேன்.
ஆகையினால்
உடன்வெளியே சென்றுவிடு.அவ் உத்தமரைச் சரண்அடையும்
கடன்எளிதே கொண்டாலும் கவலைஇல்லை ஓடிவிடு!
மாற்றான்கை மாறிவிட்ட மனைமீட்ட வருபவர்பால்
தோற்றாலும் நான்கொண்ட துணிச்சலிலே தளர்ந்துவிடேன்.
ஆழியன்மால் என்கின்றாய்? ஆனாலும் இத்தனைநாள்
வாழிஎன்றே என்செய்தான்? வரட்டும் ஒரு கைபார்ப்பேன்!

வீடணன் : பார்ஒருகை; ஆனாலும் பார்க்கஇனி நான்இங்குஇரேன்
நேர்ஒருகை வில்லுடையான் நிகழ்ந்துபின்னால்
பதில்கொடுப்பான்.
போகின்றேன். மீண்டும்தான் புகல்கின்றேன் இறுதியுமாய்.
ஆகின்ற அறம்எதுஎன் றாய்ந்தேபார். வருகின்றேன்!

(தெற்குக் கடற்கரையில் வானரப் படைகளுடன் இராமபிரான் இருக்க, இராமநாமத்தை முழக்கிக்கொண்டே வீடணன் அங்கு வருகிறான்)

வீடணன் : ராகவ சரணம்! ராம் ராம் சரணம்!
ஆகவ சரணம் ! ஐயனே சரணம்!

இராமன் : சரணமென என்பெயரைச் சதாசொல்லிக் கொண்டிந்தத்
தருணமிங்கு வருபவர்யார்? தான்பார்த்து வந்திடுக.

மயிந்தன் : இராவணனின் இளையதம்பி வீடணன் என்பவர்தாம்.
(வானரன்) பராவஎன்றே உங்களிடம் பக்தியொடும்
வரஉள்ளார்!
தமையனின் செய்கைஎலாம் தவறென்னும் காரணத்தால்
அமையஇங்கே வந்துள்ளார், அடைக்கலம்தான் கேட்டபடி!

சுக்ரீவன் : இதுகூட ஒருசமயம் இராவணன்சூ தாகிடலாம்;
அதனாலே எளிதாக அவரைநம்பக் கூடாது.

அனுமன் : அவ்வாறாய் இருப்பதற்கு அணுவளவும் ஏதில்லை
ஒவ்வாத செயல்புரிவோன் உடன்பிறந்தோன் என்பதனால்
அவ்வுறவைக் கட்டறுத்தே அறவழியில் நடப்பவர்தான்
வீடணன்என் றறிகின்றேன். வெறுத்துப்போய் அதனால்தான்
கேடெண்ணும் இராவணனைக் கிஞ்சித்தும் மதியாமல்
அண்ணல்உங்கள் பாலேதான் அபயமென வந்துள்ளார்!

இராமன் : கண்ணனைய அனுமனே,உன் கணிப்புமிக வும்சரிதான்.

அனுமன் : அம்மட்டும் அல்ல;இவர் அன்புமகள் திரிசடைதான்
விம்முற்று இலங்கையிலே வெம்பிடும்தாய் சீதைக்கோர்
ஆறுதலும் தேறுதலும். ஆனதொரு குணச்செல்வி
மாறுதலாய்த் தேவிக்கு மகிழ்வூட்டும் உயிர்த்தோழி!

சுக்ரீவன் : ஆனாலும் அண்ணனைவிட்டு அன்புடையார் யார்வருவார்?
வானாளும் தமையனுக்கே வலக்கரமாய் இருப்பதே!

இராமன் : இருந்திடலாம், ஆனாலும் எல்லோரும் அவ்வாறே
பொருந்திடலாம் என்றுசொல்லப் புகுந்திடுதல் தக்கதன்று.
வரட்டும்அந்த வீடணரும். வரச்சொல்லி அழையுங்கள் நம்
பொருட்டுவந்தே அபயமெனும் புண்ணியரை
ஏற்றுக்கொள்வோம்!

அனுமன் : வாருங்கள் வீடணரே, வருகைஉங்கள் நல்வரவு!
சீர்எங்கள் அண்ணலைமுன் சேவித்துக் கொள்ளுங்கள்.

வீடணன் : உலகமெலாம் உய்யவந்த உன்னதமாம் மறைமுதலே,
கலகமெலாம் செய்வதையே கடமைஎனக் கொண்டோரை
விலகிஇங்கே வந்துவிட்டேன். வீழ்கிறேன்;நின் அடிசரணம்.
அலகிலாஉம்கருணை அடியேன்கொள் வரம்தரணும்!

இராமன் : அன்புடையீர், எழுந்திடுக அபயமென வந்தவரைத்
தன்படையாய் ஏற்பதுதான் தருமத்தின் உயர்ந்தநெறி.
ஏழிரண்டு புவனம்மற்றும் என்பெயரும் நிலைக்கும்வரை
வாழிஎன இலங்கையினை வழங்கினேன்உம் ஆளுகைக்கே!

வீடணன் : புண்ணியம்நான் பன்முறையும் புரிந்துள்ளேன். அதனால்தான்
எண்ணிஇங்கே வந்தவனுக்கு இலங்கையையே தந்துள்ளீர்!
தம்பிபரதன் கேட்டதற்குத் தந்ததுபோல் பாதுகைகள்
எம்பிறவித் துயர்அறவும் என்தலைமேல் சூட்டிடணும்!

இராமன் : களங்கமேஇல் லாதநெறிக் கடமையுள்ள வீடணரே,
விளங்கஇனிச் சொல்லுகிறேன். விரும்புகுகன் ஐவரானோம்.
சுக்ரிவனொடு அறுவரானோம் சுயநலமில் லாஉமையும்
இக்கணமே சேர்த்ததனால் எழுவருமாய்க் கூடிவிட்டோம்!
தக்கஎன்றன் பாதுகையும் தருவேன்.சூடிக்கொள்க.
மிக்கஇனி மகிழ்ச்சிதானே? மேற்கொண்டும் ஆதல்செய்வோம்
சுக்கிரீவ! இலக்குவ!நாம் சூட்டும்முடிச் சான்றாய்எத்
திக்கிலும் எதிரொலிக்கத் திருக்கட்டி யம்கூறி
விமானத்தும் ஏற்றுவித்து விழாவலமாய் வந்திடுக.
இமாசலம்நம் குமரிவரை இலங்கையர்கோன் இவர்என்க.

(இராமன், வீடணனுக்கு இலங்கை அரசை அளித்தல்)
(பாட்டு)

ஆழியான் அவனை நோக்கி, அருள்சுரந்து, உவகை கூர
ஏழினோடு ஏழாய் நின்ற உலகும்என் பெயரும் எந்நாள்
வாழும்நாள், அன்று காறும், வாள்எயிற்று அரக்கர் வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன் என்றான்.

வீடணன் : எல்லைஇலாப் பெரும்கருணைக் கிலக்கியமாம் அரும்கடலே,
தொல்லைஎலாம் நீங்கஇன்றே தூயபெரும் பேறுபெற்றேன்.
அள்ளஅள்ளக் குறையாத அமுதகுணப் பெருநிதியே,
கொள்ளைகொள்ளை யாய்மகிழக் கொடுத்தீர் அடைக்கலமே.
இதனிலும்வே றெய்தஉண்டோ இன்பமெனும் சாம்ராஜ்யம்?
நிதம்நிதம்உம் கருணைஒன்றே நிலைக்குமினி ராம்ராஜ்யம்!

(வானரர் உட்பட அனைவரும் ஆடிப்பாடி மகிழ்ந்தபடி இராமநாமத்தை முழங்குகிறார்கள்.)

அனைவரும்: ராம்ராம் ஜெயராம்! ராகவ ஜெயராம்!
நாம்அனை வர்க்குமே நறும்துணைப் பெயர்ராம்!

(தென்கடற்கரையில் வானர வீரர்கள் தங்கி இருக்கையில் சுக்ரீவன் சீதையைத் தேடும் பணியை நினைவுபடுத்துகிறான்.)

சுக்ரீவன் : சீதைஎனும் நம்திருவைச் சிறைமீட்ட வேண்டாமா?
வாதையுறும் அன்னைக்கே வாழ்வுதர வேண்டாமா?

வீடணன் : பாதையதற் கிலங்கைவரை பாலம்ஒன்றை அமைப்பதுதான்
ஓதைஇந்தக் கடல்கடந்தும் உள்நுழைய வழிஅதுதான்.

சுக்ரீவன் : வந்திதைநாம் அண்ணலிடம் வரைமுறையாய் எடுத்துரைத்து
முந்திஇதைச் செயல்படுத்த முனைந்திடலாம், இப்போதே.

(இருவரும் இராமனிடம் செல்கிறார்கள்)

இராமன் : வீடணரே, வருக. இனி வேண்டியதை நாம்செய்து
நாடிலங்கைச் சிறையினின்றும் நங்கைவர வேண்டுமன்றோ?

வீடணன் : பாலமொன்று கடல்மிசைஏற் பட்டால்தான் அதுஇயலும்
ஓலமொன்றும் கடல்தாண்டி உற்றபடை அத்தனையும்
கொண்டுபோய் அங்கரக்கர் கும்பலைத்தீர்த் துக்கட்டிச்
செண்டுபோல்நம் அன்னையையும் சிறைமீட்டி வரஇயலும்.

இராமன் : நன்றுநன்று உம் யோசனைதான்; நடைமுறையில் செயல்ஆக்க
இன்றினிநாம் செய்யவேண்டி இருப்பதென்ன வீடணரே?

வீடணன் : பாலமொன்றைக் கட்டுமுன்னே பரந்திருக்கும் இலங்கைபற்றிச்
சாலநன்று தெரிந்திருத்தல் சகலவகைக் கும்உதவும்
நெடுநாள்முன் சேடனுக்கும் நேர்வாயு தேவனுக்கும்
இடைநாளும் போர்நிகழ எதிர்மேரு சிகரமொன்று
பெயர்ந்தேபோய்க் கடல்வீழ்ந்து பேரிலங்கை ஆயிற்று!
உயர்ந்தேபோய் நிற்குமிந்த உன்னதமா இலங்கைஅது
கோட்டைகளும் கொத்தளமும் கோடிகோடி அரக்கர்களின்
தேட்டமிகு காவல்களும் திகழுமொரு மாநகரம்.
அந்நகரைப் போய்அடைய அணைஎனுமாய்ப் பெரும்பாலும்
முன்னர்அமைப் பதுஒன்றே முக்கியம்எவ் வகையிலுமே.

இராமன் : எவ்வகையில் பாலமங்கே எழுப்புவதாம்? அதற்கான
நல்வகையும் கூறிவிடின் நன்றாகும் வீடணரே!

வீடணன் : நீர்த்தேவன் வருணனையே நேரில் இங்கு வரவழைத்துப்
போர்த்தேவைக் காய்இலங்கை புகும்வழியைச்
சொல்லுமென்றால்
உபாயமொன்றைச் சொல்லிடுவார்; உடன்அனைவரும்
எழுப்பி
அபாயமில்லாப் பாதையையும் அவரேதான் அறிவிப்பார்.
வரச்சொல்லுங் கள்பிரபோ, வருணதே வனைஇங்கு.

இராமன் : வரச்சொல்கின்றேன், இதோஅவ் வருணதேவர் மந்திரத்தால்.

வீடணன் : துதிசெய்தும் வருணதேவர் தோன்றவில்லை. அலட்சியம்தான்!

இராமன் : விதிசெய்யும் வில்அம்பை விட்டுவரச் செய்கின்றேன்.

(வில்வளைக்க நாண் ஒலி எழும்புகிறது வருணதேவன்
உடனே வருகிறான்.)

வருணன் : சினம்வேண்டாம், ரகுகுலத்துச் செம்மலே, கடற்கப்பால்
மனம்வேறு பணிகொண்ட மாயத்தால் தாமதித்தேன்.
மன்னிக்க வேண்டுகிறேன்; மனம்உவந்து நான்செயஎன்
முன்நிற்கும் பணிஎன்ன? முடிக்கின்றேன், உடனேயே!

இராமன் : ஆழ்கடல்மேல் நம்படைகள் அணிவகுத்து இலங்கைசெல்லச்
சூழ்கடல்மேல் அணைப்பாலம் சுணங்காமல் உடன்வேண்டும்.

வருணன் : கடல்மீது பாலத்தின் கட்டுமானப் பொருள்கள்எல்லாம்
உடன்மீந்து மிதக்காமல் உள்ளேயே போம்அதனால்
கிடக்கின்றேன் மிதவையாய்க் கீழ்ஆழம் வரைநானே
நடக்கட்டும் அதற்குமேல் நளன்என்னும் மயன்மகனே
பெயர்த்துவந்த பாறைகளைப் பெரும்அளவில் போட்டுஎன்மேல்
உயர்த்திஅந்தப் பாலத்தை உறுதியுடன் அணைக்கட்டும்.

இராமன் : நன்றுநன்று வருணரே. நளனைஇதோ அழைக்கின்றேன்.
குனிறினுமே உயர்வாகக் குன்றாத சேது எனும்
பந்தனமாம் பேர்சொல்லப் பாலமிது அமைபட்டும்.

சுக்ரீவன் : வந்தனமாய் நம்படைகாள் வாருங்கள் எல்லோரும்
கடமைஎனப் பாலத்தைக் கட்டிமுடிப் போம்விரைவில்.
மடமடெனக் காரியம்தா மதம்இன்றி நடக்கட்டும்.

(பணிகள் விரைவாக நடக்கின்றன. அதற்கான பின்னணி ஒலி.)

மூன்றேநாள் தான் பாலம் முழுமையுமே கட்டிவிட்டோம்!
ஆன்றேநம் அண்ணல் சொல் அத்தனையும் செய்துவிட்டோம்!
அணைஇடுக என்றண்ணல் ஆணை உயர்ந்துவர
அணைஇதுவும் ஆணைநிகர் அடடாஉயர் வாயிற்று!
துணைஇருக்க இராமபிரான் தொண்டிங்கே உண்டெனில்
அணைஎன்ன! வான்முகட்டின் அளவுகூடச் சாதிப்போம்.

இராமன் : சரி நமது படைமுழுதும் சலியாமல் முன்னும் பின்னும்
வரிசையுடன் வீடணனும் வகைதெரிந்த அனுமனுமாய்
நடத்திடுக. சீக்கிரமே நண்ணிடுவோம் இலங்கையின்மேல்
படைத்திடுக அங்குமொரு பாசறைநாம் தங்குதற்கே!

(வானரப் படைகள் புறப்படுகின்றன. அதற்கான ஆரவார இசைஒலி)
(இலங்கை அரண்மனையில் இராவணன் விசனத்தோடு
மற்றவர்களைக் கலந்து உரையாடுதல்)

இராவணன் : வீடணனும் போய்விட்டான் வெறுப்பாகப் பேசிவிட்டுக்
கேடுஅண்ணன் எப்படித்தான் கெட்டாலும் சரிஎன்று
மற்றுமிங்கே குரங்குகளை மடப்பதர்கள் திரட்டிவந்து
முற்றுகைக்கே பாசறைபல் முகாம்களையும் தொடங்கிவிட்டார்.
தாண்டமுடி யாதபெரும் தடைஎனவே கடல்இருந்தும்
நீண்டமுழு அணைஎழுப்பி நேர்இங்கும் புகுந்துவிட்டார்!

(இராவணனின் தாய்வழிப்பாட்டன் மாலியவான் அங்கு வருதல்)

மாலியவாள் : இராவண, உன் தாய்வழியின் தாத்தாநான் சொல்லுகிறேன்.
பொறாமையில்இம் மாலியவான் புகலுவதாய் எண்ணாதே
யானிடரே அல்லர்அவர். மகாமகா மூர்த்தி அவர்!
வானரரும் அல்லர்அவர், வான்உலகத் தேவர்அவர்!
நின்னையும்நின் குலப்படையும் நேர்மோதி வேரோடும்
முன்னம்நின்று சாய்ப்பதற்கே முகாந்தரமாய் வந்துள்ளார்!
ஆகையினால் நீகொணர்ந்தே அசோகவனம் வைத்திருக்கும்
சோகமகள்சீதையினைச் சுருக்கஇன்றே விட்டுவிடு!

இராவணன்: இப்படிநீ சொல்வதற்கா, இங்கேநான் அழைக்கவந்தாய்?
மைப்படிந்த கண்ணாள்அம் மைதிலியை என்றும்விடேன்!

மாலியவான்: நிலைமைகளைப் புரியாமல் நீசஉரை பேசுகிறாய்.
குலமகளார் வீறுகொண்டால் கொற்றமெலாம் உடன்சாயும்!

இராவணன்: சாயட்டுமே, எனது சாம்ராஜ்யம் சரிந்தாலும்
ஓயட்டும் என்கிறேன்; ஓடஓட விரட்டிஅடிப்பேன்.
தேவர்களே ஆனாலும் திரண்டிடும்அத் தேவர்களுள்
மூவர்களே ஆனாலும் முடிக்காமல் விடமாட்டேன்.
(இராவணன் அனுப்பிவைத்த ஒற்றர்கள் வருகிறார்கள்.
அவர்களிடம்)
ஒற்றர்களும் திரும்பிவிட்டார்; உடன்அங்கே நிலைமை என்ன?

ஒற்றர் : முற்றுமவர் படைவலிமை முகாம்களெல்லாம்
தெரிந்துகொண்டோம்
எழுபத்து வெள்ளமென எத்திசைகள் பார்த்தாலும்
சூழமொத்தம் குரங்குகளே சுறுசுறுப்பாய்ப் படையுள்ளார்.
அங்கிருந்தே தப்பிவர ஆனாலும் பெரும்பாடே!
எங்கிருந்தே பார்த்தாலும் எப்புறமும் வானரர்தாம்!

இராவணன் : வீடணன்எவ் வாறுள்ளான்? வெறும்கைய னாய்த்தானே?

ஒற்றர் : நாடிலங்கை அவர்க்கென்றே நல்கியுள்ளார் அந்நரர்கள்.

இராவணன் : தானவர்கள் நாம்இருக்கத் தான்அவர்கள் நாடுதர்து
கூனல்மதி காட்டிவிட்டார். கொலுவிருக்கப் படையோடும்.
சுற்றிஅந்தப் படையனைத்தும் சுக்குசுக்காய்ச் செய்துவிட
முற்றிலுமிது தான்சமயம்; முழுமூச்சும் கொண்டெழுவோம்.
(அரக்கர்படைகளும் வானரர்களும் சந்திக்கின்றன)
எதிர்எதிரே சந்திக்க இருபடைக்கும் நல்வாய்ப்பு!
அதிரடிஅடித் தேஅவரை அப்படியே விரட்டிடுவோம்
விரட்டஎன்ன? ஒருவரையும் விடாதவண்ணம் உயிர்பறிப்போம்.

சுக்ரீவன் : மிரட்டுகின் றாயா?உன் மேல்மகுடம் இப்போதே
பறித்தெடுத்தும் அதன்வண்ணப் பன்மணிகள்
பெயர்த்தெடுத்தும்
சுவாமிக்குக் காணிக்கை சுக்ரீவன் யான்படைப்பேன்.

(தாவிப்போய் இராவணனின் மணிமுடியைப் பறித்தல்.)

இராவணன் : அவமிக்க குரங்கதோபார் அணிமுடியைக் கவர்ந்றோடுதே!
சகுனமிது. இன்றேனோ சரியில்லை அதனால்தான்

வெகுநயமாய் மணிமுடியும் விழக்குரங்கு பற்றியது!
போய்வருவோம்; நாளைக்கே புதுத்தெம்போ டிவரைஎல்லாம்
நாய்விரட்டு வதுபோன்றே நன்கடித்து விரட்டிடுவோம்.

சுக்ரீவன் : விரட்டஎனில் நாளைக்கே வேறுபடை யும்திரட்டி
முரட்டுகுண இராவணரே, முன்நிறுத்த முயற்சிசெய்யும்.

(திரும்பிச்சென்ற இராவணன் தன்அரண்மனையில் இரவெல்லாம் தூங்காதிருக்கும் பொழுது விடிகிறது. விடியல் இசை)

இராவணன் : இரவெல்லாம் துயில்முயன்றும் இம்மியும்கண் மூடவில்லை.
வரவெல்லாம் துயர்துயராய் வளர்கின்ற நினைவுகள்தாம்.
பரலெல்லாம் ஆனஎன்றன் பளிங்குமுடி இழந்தும்என்
திறலெல்லாம் இனித்தேயத் தெரிவதுபோல் படுகிறது.
வருவனஎல் லாம்வரட்டும்; வந்தவற்றைச் சந்திக்க
உரமெனஎன் தோள்களும்முன் உயர்வரங்கள் பலவுமுண்டு!

(இவ்வாறு இராவணன் தன்னைத் தானே தேற்றிக் கொள்ளும்போது இராமன் அனுப்பிய தூதுவனாக அங்கதன் தோன்றுகிறான்.)

அங்கதன் : வருவனவெல் லாம்வரட்டும்: வரங்கள்பல உண்டெனுமாய்க்
கருவமிகு இராவண,உன் கண்எதிரே வந்துள்ளேன்!

இராவணன் : யாரடாநீ? இங்குவந்தே யாதோமார் தட்டுகிறாய்?
கூறடாநீ, இங்குவந்த குறிக்கோளை வெகுதடுத்தாய்

அங்கதன் : யார்என்றா வினவுகிறாய்? யானேதான் கூறுகின்றேன்.
சீர்நன்றாய்ப் புரிந்துகொண்டு செய்தியையும் புரிந்துகொள்நீ
பூத நாயகன், நீர் சூழ்ந்த புவிக்கு நாயகன். அப்பூமேல்
சீதை நாயகன், வேறுள்ள தெய்வ நாயகன் தான்வீட்ட
தூதன் யான் பணித்த மாற்றம் சொல்லியே வந்தேன் இங்கு.
வந்திருக்கும் நான்தான்முன் வாலில்உன்னைப் பிணித்தபடி
அந்தரம்விண் புவனமெலாம் அலைக்கழித்த வாலிமகன்!
அங்கதன்பேர்! நான்உனக்கு அறிவிக்கும் செய்தியாம்.

இராவணன் : நன்கொருபால் இருக்கட்டும் நண்பனன்றோ அவ்வாலி!
அன்னவரைக் கொன்றவர்க்கும் அதைச்செய்யச்
சொன்னவர்க்கும்

என்னபெரும் மடமைஇது! ஏவலென வந்தனைநீ!
முன்னம்என்றன் சொல்கேட்டால் முதல்மகனாய் ஏற்றுனக்கே
என்னஉயர் ஆட்சியையும் இப்போதே நான்தருவேன்.
மானிடராம் அவர்தமக்கு மரணமுண்டு; மரணமில்லா
நான்இடராய் வருவதெலாம் நசுக்கிஉனைத் தலைமைவைப்பேன்.

அங்கதன் : வாய்குழறிப் பேசுகிறாய். வாழ்வினெல்லை நிற்பவன்நீ!
நோய்குழறிப் பேசுகிற நோயாளிக் கொப்பவன்நீ
தாடகைஉன் அத்தையினைத் தான்வதைத்தும் உன்தங்கை
கேடுறவே மூக்கறுத்தும் கேவலம்வா ளாயிருந்தோய்
இப்போதோ ஆண்மையுடன் எல்லாமே பேசுகிறாய்
தப்போத வேண்டாம் உன் தவறைஎல்லாம் திருத்திக்கொள்
தேவியினை விடு;இலையேல் தேடியும்நீ வைத்திருக்கும்
ஆவியினை விடு இதுதான். அண்ணல்உனக் குரைத்த செய்தி.
போர்வரும்முன் தூதுவனாய்ப் புகலஇதை யேகொணர்ந்தேன்.
நேர்வருமேல் ஏற்றுக்கொள்; நின்றிலையேல் போருக்கெழு.

இராவணன் : தூதனென வந்ததனால் தொடாதுன்னை விடுகின்றேன்.
போதுமெனும் அளவில்உன்மேல் பொறுமையொடும்
இருக்கின்றேன்
மாதவளை விடுவன்என்று மட்டும்நீ எண்ணாதே.
வாதினியும் வேண்டாம்;நீ வந்தவழி யேதிரும்பு.

அங்கதன் : திரும்புகின்றேன்; உன்னுடைய தீர்மானம் அத்தனையும்
அறம்புகுந்தே வென்றுவிடும்; ஆணைஇது இராமனருள்!

(தூது சென்ற அங்கதன் வருகைக்காக வானரர்கள் சூழ இராமபிரான் பாசறையில் காத்திருக்கிறார்)

சுக்ரீவன் : தூதுசென்ற அங்கதன்ஏன் துரிதமாகத் திரும்பவில்லை?
வாதுநின்று இராவணன்தன் வலிமையினைக் காட்டினனோ?
ஏதுவராக் காரணம்தான்? என்னஎன்றே புரியவில்லை!
தீதுவரு மோஎன்றே தெளிந்தமனம் குமைகிறது!

இராமன் : அவ்வாறெல் லாம்இராது. அஞ்சற்க சுக்ரீவ!
ஒவ்வாத பேச்செல்லாம் உரைத்திருப்பான் இராவணன்தான்
அதனாலே இருக்காலம்; அதோவருதல் அங்கதன்தான்!

அங்கதன் : எதனாலும் அறவழியில் இராவணன்வா ரான்பிரபோ
வீரங்கள் பேசுகிறான்; வெற்றுரைதான் ஆடுகிறான்;

சோரம்கொண் டோம்என்னும் சுயமதியே அணுவுமில்லை.
ஆவியையே விட்டாலும் அன்னையாம் நம்சீதா
தேவியைவிட மாட்டானாம்; தீர்மானம் இதுஎன்கிறான்
போருக்கே ஆயத்தமாய்ப் புறப்படுவன் போல்உள்ளான்.

இராமன் : யாருக்கே தெரியுமிங்கு அழிவுறும்கால் நேர்மைஎலாம்?
புறப்படுங்கள், நாமும்நான் போருக்கென் றேஎழுவோம்.
முறைப்படுங்கள் ஆங்காங்கு முனைப்பாக அணிவகுத்தும்.

சுக்ரீவன் : எதிரில்அதோ இராவணனே இணைந்தரக்கர் படைசூழ
உதிரிஎன மாள்வதற்கே ஓடோடி வருகின்றான்.
வரட்டும்; அந்தப் பெண்கவரும் வஞ்சகனுக்கேஉயிரைப்
புரட்டுகின்ற பாடங்கள் புதுவிதமாய்க் கற்பிப்போம்.

(போர் நிகழ்கிறது. இருபடைகளும் மோதிக் கொள்கின்றன
அதற்கான ஆரவாரப் பேரொலி)

இலக்குவன் : பாருங்கள் அங்கேதன் படைபலங்கள் அத்தனையும்
ஓர்அங்க மாய்க்கொண்டே உறுமுகின்றான் கொடும்அரக்கன்!

இராவணன் : இலக்குமணன் என்னுமொரு இளநரனும் நீதானே?
கலக்குவன்பார் உன்னையும்உன் கண்எதிரில் படைகளையும்!

இலக்குவன் : அறவழியில் நில்லாதான் ஆயிரமாம் பலம்பெறினும்
புறவழியில் தீப்பட்ட புல்போலும் பொசுங்கிடுவான்.

இராவணன் : பொசுங்குவதே எம்படையா? போக்கற்ற உம்படையா?
நசுங்குவதும் பார்நீயே நாலாவிதம் என்கணையால்

இலக்குவன் : கணைஎறியும் காவலனே, கண்முன்னே உன்படைதான்
துணைஅறிய இப்போதே தூள்தூளாய்ப் போகிறது!

இராவணன் : பார்த்திடலாம் உன்வீரம்; பகழிஇதற் கேபதில்சொல்.

(இராவணன் எய்த அம்பால் இலக்குவன் கீழ் விழுதல்)

சுக்ரீவன் : ஆர்த்தெழுந்த இலக்குமணன், ஐயகோ விழுந்துவிட்டான்!

அனுமன் : ஓடிப்போய் நானேதான் உடன்தூக்கி வருகின்றேன்.

இராமன் : வாடிப்போ கேல்;அனும. வலிந்துனையும் வீழ்த்திடுவன்.

அனுமன் : இராமபிரபு இவர்களைநாம் இனியும்விடல் நியாயமில்லை.
ஏமனவன் உலகுக்கே இவனையும்அப் படைகளையும்
அனுப்புதல்தான் முழுநீதி! அறத்தினுக்கும் பலம்அதுதான்!
முனைப்புடனே இராவணன்தன் முழுபலமும் கொண்டவனாய்த்
தேர்ஏறி வருகின்றான்; தேர்பலமாய் ஈடுதரப்
போர்ஏறி என்தோள்மேல் புயல்போலும் அமருங்கள்.

இராமன் : ஏறிவிட்டேன் அனும,உன்றன் இணைத்தோளில் இப்போதே
மீறிவிட்ட இராவணனின் மிகுபலத்தைக் குறைக்கின்றேன்.

(இராவணனின் கிரீடம் கீழே சாய்கிறது)

இராவணன் : என்னஇது? மணிமுடியே இப்போதும் விழுகிறது.
தன்னந்தனியாளாய்த் தவிக்கஎன்றன் தேருமன்றோ
சின்னா பின்னம் ஆகிறது! சிதைகிறதென் படைகளுமே!
மன்னுமிந்த நரப்பதர்கள் மாவலிதாம் என்னென்னே!

இராமன் : இன்னுமுண்டு இராவணனே இயம்புகிறேன் கேள். உனக்குத்
திசைகண்ட எட்டோடும் திளைக்கமண்விண் சேர்பத்தாய்த்
தசகண்டன் எனும்பெயரைத் தாங்கிவிட்டாய். ஆனாலும்
பத்துகண்டம் மட்டுமல்ல. பலகண்டம் இன்னுமின்னும்
எத்துகண்ட உனக்கேதான் இகழ்வோடு தொடர்ந்துவரும்.
ஆனாலும் தனிமைக்குள் ஆளாகி நிற்குமுனைப்
போனால்போ கிறதென்றே பொறுத்தின்று விடுகிறேன்.
ஆள்இழந்து படைஇழந்து அணிமுடிதேர் குடைஇழந்து
ஊழ்இழந்தும் நிற்கின்ற உன்னைஇன்றே ஒன்றும்செய்யேன்.
பூளைஎன ஆகியநீ போர்க்கின்று என்னசெய்வாய்?
நாளைவா மீண்டும்தான்; நமனையுமே கூட்டிவா!
ஈதென்ன பார்க்கின்றாய்? எதிர்த்துநாள் பாராத
பூதலமா, கால்விரலால் புலம்கீறிப் பார்க்கின்றாய்?
வாய்விட்டுச் சொல்லுகிறேன். வாட்டமுடன் நிற்பதினும்
போய்விட்டு வாநாளை; புறப்படுஉன் இடத்திற்கே!

(இராமன் அறிவுரை கூறி இன்று போய் நாளை வா எனல்)
(பாட்டு)

ஆள் ஐயா! உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த
பூளை ஆயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாஎன நல்கினன் - நாகுஇளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்.

(இராவணன் தலை குனிவோடு செல்கிறான். பின்னணியில் பாடல் இசையோடு ஒலிக்கிறது.)

(இராவணன் இலங்கை மீளுதல்)

பாட்டு

வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவற்கு ஏற்ப நயம்பட உரைத்த நாவும்
தார்அணி மவுலி பத்தும், சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போட்டு, வெறுங்கையோ டிலங்கை புக்கான்.

(முதற்போரில் திரும்பி வந்த இராவணன் இராமன் சொன்னதைக் கேட்டு, அவமானத்தால் துயரேந்திப் பேசுதல்)

இராவணன் : இன்றேபோய் நாளைவா என்றேஓர் நரமனிதன்
நன்றேதான் சொல்வதுபோல் நாராசம் பாய்ச்சிவிட்டான்!
அவமானம் இதை விடவும் அமைவதுண்டோ வாழ்வினிலே?
தவமான தவமாகத் தான்புரிந்து சங்கரனார்
நவமாக எனக்களிக்க நான்பெற்ற வரம்அனைத்தும்
உவமானம் இல்லாவீண் ஒருகவிபோல் ஆயிற்றே!

(மாலியவான் அப்போது வருதல்)

மாலியவான் : முன்பே நான் உனக்குரைத்தேன்; முறைத்தென்மேல் சினமுற்றாய்
தெம்பேதான் அற்றுப்போய்த் திகைக்கின்றாய், இப்போது!
விட்டுவிடு சீதைஅந்த வெங்கனலை. தப்பிக்கப்
பட்டுவிடு தலைபெறலாம், பழியினின்றும் அறவேதான்.

(மந்திரி மகோதரன் குறுக்கிடுகிறான்)

மகோதரன் : மறுக்கின்றேன் உம்உரையை மாலிஎனும் பெரியவரே,
வெறுக்கின்ற வாறினியும் விடுவதாஅச் சீதையினை?
இருக்கின்ற படைஎல்லாம் இன்னும்நாம் திரட்டிவந்து
நெருக்கின்ற சேனை நேருக்கு நேர் நின்று
போர்புரிந்துஅம் மானிடராம் புல்லரையும் அவர்படையும்
யார்சிறிதும் தப்பாமல் அழிப்பதுதான் இனியும்முறை!
அதைவிட்டுத் தேம்பிஇனி அழுவதிலே என்னபயன்?
கதைவிட்டுத் தம்பிகும்ப கர்ணணை எழுப்புங்கள்.
சதைஒட்டும் பாசமென்ன சாம்பியுமா தூங்கிவிடும்?
போர்க்கவரைத் தற்போதே புறப்படுஎனச் சொல்லுங்கள்.

இராவணன் : யார்க்கும்வரா யோசனையை அறிவித்தீர் மகோதரன்நீர்
சொன்னபடி யேசெய்யலாம் சுழற்புயலாய் வரட்டுமவன்!

(கும்பகர்ணன் வருதல்)

கும்பகர்ணன்: முன்னமிதோ வந்துள்ளேன்; மொழிகளென்ன
ஆணைஅண்ணா?

இராவணன் : போருக்கு நீதான்இனிப் புறப்படணும் கும்பகர்ணா!
தேரைக்கொள், உடனேசெல், தேவைஇல்லை தாமதங்கள்!

கும்பகர்ணன்: அன்றேநான் சொன்னேன்;என் அறஉரையை மறுத்ததனால்
இன்றேநாம் விளைவெல்லாம் எதிர்மறையாய்க் காண்கின்றோம்!

இராவணன் : புகலஇனித் தேவைஇல்லை. போர்க்கேநீ உடனேசெல்
பகலவன்முன் புகைப்பனிபோல் பகைவர்அவர் ஓடச்செய்.

கும்பகர்ணன்: செல்கின்றேன் இனிஉனைநான் சிறிதும்பார்க்கப் போவதில்லை!
வெல்கின்ற வாய்ப்புமில்லை; வெறும்மரணம் தான்அடைவேன்

(போர்க்களத்திற்குக் கும்பகர்ணன் வருகிறான். அவனைப்
பார்த்துவிட்டு இலக்குவன்)

இலக்குவன் : வீடணரே, யார்இவர்தாம்? வெஞ்சினமாய் வருகின்றார்!

வீடணன் : கேடெண்ணும் இராவணனுக் கிளையதம்பி என்மூத்தோன்
கும்பகர்ணன் எனும்பெயர்தான். கொண்டநெறி தவறாதார்.

இலக்குவன் : அவ்வுறவேல் நீர்சென்றே அழைத்திடுமே இங்குஅவரை!

வீடணன் : எவ்வுறவும் கொள்வரல்லர்! எனினும்தான் முயல்கின்றேன்.

(தம்பி வீடணன் அழைக்க வருதல் கண்டு)

கும்பகர்ணன்: அரும்தம்பி வீடணனே அழைக்கஎனை வந்தாயா?
வருந்தாதே நான் உன்பால் வராமைக்காய். நீயேனும்
எங்களுக்காய் இருந்துகடன் இறுதியில்நீ செய்து முடி
இங்குனக்கே இனிஅதுதான். இருந்துஅதைநீ செய்வாயா?

வீடணன் : அண்ணா,இவ் வாறெல்லாம் அழுவதற்கா நான்வந்தேன்?
ஒண்ணாது ஒண்ணாது.என் உடன்நீர்தான் வந்திடணும்!

கும்பகர்ணன்:நீர்க்கோல வாழ்வைநம்பி நெடும்பகைநாள் வளர்த்துஇன்று
போர்க்கோலம் ஆனவரைப் புறம்தள்ளவா சொல்கின்றாய்?
நன்றில்லை தம்பிஅது! நல்லறமும் இல்லைஅது!
சென்றிருந்தும் அவரோடு சேர்ந்துதக்க கடமைகள்செய்.

(பாட்டு)

நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலம் செய்து விட்டார்க்கு உயிர்கொடாது,
அங்குப் போகேன்
தார்க்கோல மேனி மைந்த! என்துயர் தவிர்த்தி ஆகின்
கார்க்கோல மேனி யானைக் கூடுதி, கடிதின் ஏகி

வீடணன் : கடமைஎன்ன இனிஎனக்கு? கட்டாயம் நீர்திரும்பின்
உடமைஎன அவர்அளித்த ஊர்ஆட்சி உமக்களிப்பேன்.

கும்பகர்ணன்:என்னஉரை சொன்னாலும் ஏற்காதென் உள்ளம்தான்
பொன்னனைய வாழ்த்துனக்கு; போய்விடுநீ; வருந்தாதே!

வீடணன் : வருகின்றேன் அண்ணா,உம் வரலாறு காலமுற்றும்
தருகின்ற பாடமொன்று தனிக்கடமை யாய்நிலைக்கும்!

(போர் நிகழ்கிறது. சுக்ரீவனைக் கும்பகர்ணன் தன்தோளில் தூக்கிக் கொண்டு வான்வழியே கடத்திச் செல்லப் பார்க்கிறான்.)

நீலன் : ஏன்னஇது? சுக்ரீவனை எதிர்த்து வந்த கும்பகர்ணன்
தன்னந்தனித் தோள்ஏற்றித் தாவிவிண்ணில் பாய்கின்றான்?

அனுமன் : அண்ணலே விபரீதம்; ஆபத்து சுக்ரீவர்க்கு!

ஜாம்பவான் : விண்ணெடும்அத் தோள்களைமுன் வெட்டிஎறி யுங்கள்பிரபு!

அங்கதன் : கால்கைகள் இழந்திடினும் கனத்தபெரும் உடம்பினையே
மேற்கொண்டு நம்மீதும் மிகத்தாக்கப் பார்க்கின்றான்.

அனுமன் : தலையினையும் வெட்டிஎறிந் தால்தான்நாம் உயிர்பிழைப்போம்.

இராமன் : நிலைஇழந்து அஞ்சற்க, நிமிடத்தில் அதைமுடிப்போம்!

கும்பர்கணன்:முடிக்குமுன் இராமா, உன் முகம்பார்த்தே விண்ணப்பம்
துடிக்குமன வேட்கையொடு துணிந்துன்னை வேண்டுகிறேன்.
ஆயிரம் சிவிவிண்டும் ஆகிவிடான் உனக்கிணையாய்
நீஇருந்தென் தம்பியினை நிச்சயம்காத் திடவேணும்.
மூர்க்கஅண்ணன் தசகண்டன் முழுப்பாசம் இல்லாதான்
காக்கஅத னால்உன்னையே கையில்லை; கெஞ்சுகிறேன்.

இராமன் : அவ்விதமே செய்கின்றோம்; ஆதரவும் வீடணர்க்கே!

கும்பகர்ணன்:எவ்விதமும் என்தலையை இறுதியிலே கடல்சேர்க்கச்
செய்விதமும் இறைஞ்சுகின்றேன்; சேர்த்திதற்கும் அருள்புரிக!

இராமன் : கொய்வதுமுன் தலையை கொண்டுகடல் சேர்ப்பிப்போம்.

கும்பகர்ணன்:போதுமென்றன் ஆன்மாவும் புனிதமுடன் அமைதிபெறும்.

இராமன் : கோதுமென்றன் இராமகணை கொய்திப்போது முடித்துவிடும்!

(இராம பாணத்தால் கும்பகர்ணன் தலை கொய்யப்பட்டுக் கடலில் கொண்டு வீழ்த்தப்படுகிறது.)

சுக்ரீவன் : வீழ்ந்தொழிந்தான் கும்பகர்ணன் விழுந்ததலை கடலோடும்.

அனுமன் : ஆழ்ந்தொழிந்தான் இராமஅண்ணல் அருள்வீரம் வாழ்க! வாழ்க!

(காட்சி மாற்றம்)
(இராவணன் தன் சபா மண்டபத்தில்)

இராவணன் : மாயமென்ன செய்துமந்த மங்கைமனம் மாறவில்லை.
தேயுமுன்னம் வேட்கைக்குத் தேவிஅவள் ஒப்பவில்லை
சனகனைப்போல் நடிக்கவைத்தும் சம்மதித்தாள்
இல்லைஅவள்!
கனகல்லினும் நெஞ்சமுத்தக் காரி!இதற் கிடையேஎன்
கும்பகர்ணத் தம்பியையும் கொன்றுவிட்டார் போர்ப்பகைவர்!
நம்பவே முடியவில்லை; நடப்பதெலாம் என்னசெய்ய?

(இந்திரசித் அங்கு வருதல்)

இந்திரசித் : செய்யவதென்ன? போருக்குச் சென்றஅதி காயன்முதல்
உய்வதென எவரும்தான் உயிருடனே திரும்பவில்லை.

இராவணன் : ஆம் இந்திரசித், அதிகாய னைஇலக்குவன்
தாம்எளிதாய்க் கொன்றதெனும் தகவலிங்கு வரக்கேட்டேன்.

இந்திரசித் : கவலைஇனி விடுங்கள்எந்தாய், கட்டாயம் அவர்களைநான்
திவலைதிவலை யாய்உதிரம் தீர்ந்துவிடக் கொன்றொழிப்பேன்.

(இந்திரசித் போர்க்களம் வர, அவனைக்கண்டு)

இலக்குவன் : வீடணரே, யார்இவர்தாம்? வெறிகொண்டே வருகின்றார்?

வீடணன் : பேணஇவன் இராவணர்க்குப் பேரன்பு மூத்தபிள்ளை!
மாயம்வல்ல இந்திரசித் மகாக்கொடிய இளஅரக்கன்.
சாதாரணன் அல்லன்இவன். சதாரணம்எச் சான்றோர்க்கும்
தீதாகச் செய்வதிலே தீரனொடு பெரும்சமர்த்தன்!

இந்திரசித் : என்னஉரைக் கின்றீர்நீர் எனைப்பற்றிச் சிற்றப்பனே?

வீடணன் : உன்னரிய பலம்எல்லாம் உரைக்கின்றேன் எடுத்தவர்க்கு!

இந்திரசித் : புரிந்துகொண் டீராநீர்? போர்க்கெழுக, என்னோடும்
வரிந்துகண்ட வீரரெனில் வந்தெம்மை எதிர்த்துநில்லும்!

வீடணன் : இப்போதே இலக்குவநீர் இவனைமுடிவு ஆக்கிவீடும்!
தப்போட விட்டீரேல் தனிமாயம் நிகழ்த்திடுவான்!

இலக்குவன் : அம்பைஇதோ ஏவுகின்றேன்; ஆம் விண்ணுள் மறைந்தானே!
வம்பென்ன? எல்லோரும் வாழைமரம் போல்விழுந்தார்!

வீடணன் : விண்ணேறி மறைந்தஅவன் விடும்நாக பாசம்தான்
கண்நேரில் அனைவரையும் கட்டிஇவ்வாறு ஆக்கியது!

இலக்குவன் : என்னஇனிச் செய்குவது? எவ்வாறே எழுப்புவது?

வீடணன் : மன்னுதிரு மாலைஎண்ணின் மணிக்கருடன் தோன்றுவரே!

இலக்குவன் : நினைப்பதென்ன? அவர்தானே நெஞ்செல்லாம் நிறைந்துள்ளார்!
வினைப்பயனும் விளைப்பவனும் விரைவாக அவர்தானே!

வீடணன் : கருடபிரான் வந்துவிட்டார். கவலைஇல்லை, கருடநிழல்
வருடஇவர் மேற்படும்கால் வலியஇவர் எழுந்திடுவார்.

இந்திரசித் : படைகளெல்லாம் எழுந்தனவே; பார்!மீண்டும் எதிர்ப்பாகத்
தடைகளின்றி வருகின்றன. தைரியமாய் அவற்றைஎலாம்
புடைபெயர விரட்டிடுவேன். பொடிப்பொடியாய். ஆக்கிடுவேன்.
இடைகொளவே நானும்போய் இலங்கைசென்று
திரும்பிடுவேன்.

(இலங்கை அரண்மனையில் இராவணன் சோகமுடன்.)

இராவணன் : போர்க்கெழுந்த அரக்கரெலாம் பூளைப்பஞ் சாகிவிட்டார்.
யார்க்கழுது தீர்க்கஇனி? அணிகொள்படைத் தலைவர்களும்
போயேபோய் விட்டார்!இப் புழுதிமண்ணில் சாய்ந்துவிட்டார்!
சேய்என்அதி காயன்முதல் செத்தனர்பல் உறவோரும்!

இந்திரசித் : தந்தையேநீர் கலங்காதீர்; தனயன்மீண்டும் புறப்பட்டேன்!
அந்தநர மாந்தரையும் அவர்குரங்குப் படைகளையும்
வந்தினியும் வாழவிடேன்; வாழ்த்திஅனுப்புங்கள் இந்த
இளையவன் போர்முறையை இங்கிருந்தே காணுங்கள்.

இராவணன் : இளையவன் போர்முறையா? இலை.இளைய
வன்போர்முறையா?

இந்திரசித் : எதுஎன்ன ஆனாலும் இனிஅவரை மீளவிடேன்.
புதுமின்னல் மழைஇடிவான் புயல்போலும் போர்முடிப்பேன்!

(போர்க்களத்திற்கு மீண்டும் புறப்படுகிறான்.
போர்க்களத்தில் இந்திரசித் வரக்கண்டு)

இலக்குவன் : போர்முடிக்க எண்ணியவன் போய்முடிய வருகின்றான்
யார்முடிக்க இவனைஇனி? யானேதான் போய்முடிப்பேன்
கொடும்நாக பாசத்தால் கூட்டமாய்ப் பிணித்தவனைக்
கடும்நரகம் ஆக்காமல் கண்டிப்பாய் விடமாட்டேன்!

இந்திரசித்: வாய்வீரம் பேசுகிறாய்; வஞ்சகமே செய்துன்னை
நீவேறுஉன் உயிர்வேறாய் நிலைகுலையச் செய்திடுவேன்
(தனக்குள்)

மாவீர பிரம்மகணை மறைந்துஏவி னால்ஒழியச்
சாவீறு கொள்ளான்இவன் சரி, விண்போய்க் கணைவிடுவோம்!

(அம்பை விட்டதும் அனைவருமே வீழ்தல்)
(மகிழ்வுடன்)

நினைத்தபடி அனைவருமே நெடும்கிடையாய் விழுந்துவிட்டார்!
முனைத்தபடிப் பிரம்மகணை முன்இவர்பூண் டோடழிந்தார்!
வந்தசெயல் முடிந்தது; இனி வான்வழியே திரும்பிடுவோம்.

(இந்திரசித் இலங்கை செல்லஅவ்விரவில் இராமன் போர்க்களத்திற்கு வருதல்)

இராமன் : அந்தகாரம் எங்கெங்கும்! யாவருமே கிடக்கின்றார்!
எந்தவிதம் நேர்ந்ததுஇது? என்னஎன்றே புரியவில்லை!
விந்தை இதைச் சொல்வதற்கும் விளக்குதற்கும் ஆள்இல்லை!
தம்பிஇலக்குவன்சுக்ரீவன் தணல்நீலன் மற்றுமுள்ள
நம்பிக்கைப் படைஅனைத்தும் நள்ளிரவில் ஐயையோ
வெற்றுமரக் கட்டைகள்போல் விழுந்துகிடக் கின்றனரே!
பற்றுமுள்ள நானும்தான் பார்த்துக்கொண்டு உள்ளேனே!
இலக்குவனும் மாண்டுவிட்டான் எனும்போல்தான் தெரிகிறது.
துலக்கமுள்ள மற்றோரும் துஞ்சிவிட்டார். என்ன செய்ய?
உடன்பிறப்பாய்ப் பிறந்ததன்றி உடன்துணையாய்க் காடும்வரத்
திடம்பிறந்த தம்பிஅன்றோ திடீரென்றே இழந்துவிட்டேன்
இத்துயரைக் காண்பதற்கா இங்கிவனைஅழைத்துவந்தேன்?
ஒத்துயிரும் என்னைவிட்டே ஒழியாமல் நிற்கிறதே.

(இராமன் மயங்கி விழ, அதற்குப்பின் சீதையை அசோகவன அரக்கியர்கள் அழைத்து வந்து காட்டுதல்)

அரக்கி-1 : பார்த்தாயா சீதை?உன்றன் பதிமுதலாய் அனைவருமே
சேர்த்தாவி நீத்துவெறும் சிதைக்கட்டை யாகஉள்ளார்!

அரக்கி-2 : சீதைஇணங் காமையினால் சிதையாகக் குன்றிவிட்டார்.
வாதைஇவை கண்டேனும் வாய்ப்புஏற்க லாம்அன்றோ!

சீதை : இராதுஇராது! இவை எல்லாமே சூழ்ச்சிகள்தாம்!
வராதுவராதுஉம் தலைவர்க்கு வாழ்நாளில் மரணமுமே.
எல்லாமே இராவணனின் ஏற்பாட்டில் நடப்பவைதாம்!
வில்லால்மெய் என்பிரபு விரைந்துவந்தென் துயர்தீர்ப்பார்!

அரக்கி : சரிப்படுவாள் இல்லைஇவள்; சரிமீண்டும் இலங்கையில்தான்
சிறைப்படவே அசோகவனம் சேர்ப்பிப்போம் விடியுமுன்னே!

(அரக்கியர்கள் சீதையைஅழைத்துக்கொண்டு போகிறார்கள். அதன்பின் வீடணன் அங்கு வருகிறான், மயக்கம் அடைந்தவர்களைப் பார்த்து)

வீடணன் : இவைஎல்லாம் இந்திரசித் எய்தகணை மாயம்தான்!
கவடெல்லா மாய்ப்பிரம்ம கணைவிட்ட அபாயம்தான்!
அனுமனே,கண் விழித்துப்பார்; அதோ ஜாம்பவானும் எழுந்தார்.

ஜாம்பவான் : மனம்விரைந்து செய்யவேண்டும் மறுசெயலாய் இப்போதே!

அனுமன் : முனம்விரைந்தென் செயவேண்டும்? மொழியுங்கள் ஜாம்பவான்!

ஜாம்பவான் : பிரம்மகணை செய்தஇந்தப் பெரும்மயக்கம் தீர்வதற்கும்
வரும்பிறவாம் துயர்களுக்கும் வாய்ப்பான மருந்தொன்று
சஞ்சீவி மலைவடக்குச் சாரலிலே வளர்ந்துளது.
பிஞ்சோடம் மூலிகையைப் பெயர்த்தெடுத்துக் கொண்டுவந்தால்
விஞ்சோடு சாவையும் விநாடியிலே தீர்த்திடலாம்
கொஞ்சமல்ல; அம்மருந்தின் குணவிசேடம் பற்பலவாம்!
வெட்டுண்ட அங்கங்கள் விரைவாகப் பொருந்திடவும்
பட்டுண்ட அம்புகளைப் பளீரென்று பிடுங்கிடவும்
ஒக்கஇராம இலக்குமணர் உட்படவே அனைவரையும்
பிழைப்பிக்க லாம்;இந்தப் பெரும்பணியில் யார்முனைவர்?

அனுமன் : களைப்பின்றி நானேஅக் கடமையினை முன்செய்வேன்!
இக்கணமே செல்கின்றேன் எம்பெருமான் இராமன்முதல்
சிக்கியவர் மீண்டுமெழச் செய்யுமந்த மலைமருந்தைக்
கொணர்வதுவே முன்வேலை கொண்டிருங்கள் பொறுமையுடன்.
கணமுமினித் தாமதியேன்; கதிர்எழும்முன் வந்திடுவேன்.

(அனுமன் சஞ்சீவி மலைக்குச் சென்று விரைவில் திரும்பி வருகிறார். காத்திருக்கும் ஜாம்பவான் வீடணன் ஆகியோர் ஆவலுடன் அவரை வரவேற்கின்றனர்.)

ஜாம்பவான் : சொன்னவண்ண மேஅனுமன் சுகமருந்தை மட்டுமல்ல
அன்னமலைச் சஞ்சிவியே ஆம்.எடுத்து வந்துவிட்டான்.

வீடணன் : என்னபெரும் விந்தைஇது? இறக்கிமலை வைக்குமுன்பே
மன்னுமலைக் காற்றுபட்டே மடிந்தோரும் எழுந்துவிட்டார்!

இராமன் : ஆம் வீடணரே! நான்கூட அயர்வகன்று எழுந்துவிட்டேன்.
தாமதமின் றிப்பாரும், தம்பிஎங்கே இருக்கின்றான்?

அனுமன் : இளையபெரு மாள்கூட எழுந்துவிட்டார் முன்போன்றே!
வளையஅதோ சுக்ரீவரும் வருகின்றார் மெல்லமெல்ல.

இராமன் : எல்லாமே மாருதிஉன் இணையில்லாச் சாதனைதான்!
(மகிழ்ந்து)
சொல்லாலோ உணர்வாலோ சூழஇன்னும் எதனாலும்
இப்பெரிய சாதனைக்கே ஈடுரைக்க இயலாது
ஒப்பரிய மாவீரன் உனக்கு நன்றி எவ்வாறு சொல்ல?
புரியவில்லை என்றனுக்குப் புதுப்பிறப்பே தந்தனைநீ!
அரியசெயல் அப்பப்பா! அனுமன்நீ வாழ்க! வாழ்க!

இலக்குவன் : ஆம் அனும, அண்ணல்சொல் அத்தனையும் உண்மை!
உண்மை!
நாம்அனைவ ரும்ராம நாமத்தைச் சொல்வதற்கு
மந்திரமே போன்றதொரு மணிச்சொல்தான் உன்பெயரும்
உன்திறமே எங்களுக்கு உயிர்ப்புதந்த ஜீவசெயல்!

ஜாம்பவான் : வாழ்த்துகிறோம் அனைவருமே; வாழ்க வாழ்க ஆஞ்சநேயர்!

சுக்ரீவன் : தாழ்த்துகிறோம் எங்கள்சிரம் தலைவன்நீயே மனிதநேயர்!

(இலங்கையில் இராவணனிடம் வானரப் படைகளும் இலக்குவனும் பிரம்மாத்திரத்தில் மயங்கிக்கிடப்பதாகவும், அவர்கள் உயிர்த்தெழுந்ததை அறியாமல் அறிவிக்கவும் இந்திரசித் வருகிறான்.)

இந்திரசித் : குரங்குபுடைக் கோமான்கள் கூண்டோடு மேஒழிந்தார்.
நெருங்கஅவர் போர்க்களத்தில் நெடும்கிடையாய்க்
கிடக்கின்றார்.
தந்தையேநீர் பெற்றதவத் தலைமகன்இவ் இந்திரசித்
கந்தையே எனஅவரைக் கசங்கிவிழச் செய்துவிட்டேன்!

இராவணன் : மகனே,உன் தனித்திறமை மறவாமல் அன்றன்று
மிகநேர்த்தி யாய்க்கண்டு மெச்சியுள்ளேன்; இப்போதும்
வானரவால் படைகளையும் வந்திரண்டு நரர்களையும்
தான்அறவே வீழ்த்திவிடத் தனித்திறமை காட்டிவிட்டாய்!

பூரிக்கின் றேன்அகமும் புறமுமொன்றாய் வாழியநீ!
(வானரர்கள் உயிர்த்தெழுந்த ஆரவாரம் கேட்கிறது.)
என்னஅந்தப் பேரொலிதான்? எங்கிருந்து வருகிறது?

(அப்பொழுது தூதன் ஒருவன் வந்து தெரிவிக்கிறான்.)

தூதன் : மாண்டவராய்ப் போர்க்களத்தில் மண்தழுவக் கிடந்தவர்தாம்
பூண்டஒரே இராப்பொழுதில் புத்துயிர்பெற் றெழுந்துவிட்டார்!
சஞ்சீவி எனும்மலையாம் சார அதன் மூலிகையை
அஞ்சனைசேய் கொண்டுவர அம்மருந்தால் அனைவருமே
தூங்கியே எழுந்ததுபோல் துள்ளிஎழுந் தாடுகின்றார்.
ஒங்கியே ஆரவார உச்சத்தில் பாடுகின்றார்!

இராவணன் : என்னஇது? அந்நரர்கள் இறந்துபட்டார் என்றுசொல்ல
அன்னதொரு காட்சிஎலாம் அசோகவனம் இருப்பவளும்
கண்டுகொளட்டும் எனச்சொல்லிக் காண்பித்து
வரச்சொன்னேனே!

இந்திரசித் : விண்டுகொள இப்போதுஅது வீண்முயற்சி ஆகியது!

இராவணன் : சீதைஎன்ன நினைப்பள்?எனைச் சீச்சீஎன வேஇகழ்வாள்!

இந்திரசித் : வாதைஎன்ன தந்தையே? வருந்தவேண் டாம்அதற்காய்!
மேற்கொண்டும் ஆவனவே மிகவிரைவாய்ச் செய்திடுவோம்.
போர்க்கென்று முயலுமுன்னம் பொழுதுவெற்றி காண்பதற்காய்
நிகும்பலையின் வேள்விஇன்றே நேரில்செய்யப் போகின்றேன்.
தகும்பலனாய் வேள்விஅது தரும்பயனும் வெற்றிஎன்றே
ஆகும்படி வருகின்றேன்; அடுத்தசெய லேஅதுதான்!

இராவணன் : யாகமது வேனும்வெற்றி யாகட்டும்; போய்வருக.

(இந்திரசித் கிளம்புகிறான். வேள்விக் கூடத்திற்கு
அவனுக்கு முன்பே வானரர்கள் அங்கு வந்திருக்கிறார்கள்.)

இந்திரசித் : வேள்வியையும் வெற்றிபெற விடாதிங்கே வந்துவிட்டார்.
கேள்விமுறை இல்லாமல் கிடத்துகின்றேன் பிணம்அவராய்!
(பின் விளைவுகளைப் பார்த்து)
தோல்வி எமக்கிருக்கட்டும் தொலைவாகப் போய்விடுவீர்
மேல்விழுந்து சாவைமுன்போல் மிகத்தழுவிக் கொள்ளாதீர்!

எம்மலையின் மாமருந்தும் இனிஉமக்கே உயிர்தராது.
விம்மலைத்தான் காண்பீர், உம் உடல்உயிரும் சிதறிவிடும்!

இலக்குவன் : வீணுரைகள் பேசாதே வெறுமனே நீ இந்திரசித்;
ஆணவமே உன்னுடைய ஆண்மைஅவம் ஆக்கிவிடும்!
அம்பைவிட்டுப் பார்அல்லால் ஆகாதிப் போர்என்று
வம்பைவிட்டுத் தந்தைக்கே வழங்கப்போ அறிவுரைகள்!

(வானத்தில் மறைந்து நிற்கிறான் இந்திரசித்.)

இந்திரசித் (தனக்குள்) : அறிவுறுத்திச் சொன்னதெலாம் வீணேதான் ஆயிற்று.
விரிவெடுத்துச் சொன்னதெலாம் வீணேதான் போயிற்று!
கோபத்தால் என்மேல்தான் குமுறிஎந்தை எழுகின்றார்!
பாபத்தால் செய்தவினை பாபம்தா னேஅளிக்கும்?

(வானத்தில் இருந்து வெளிப்படுகிறான் இந்திரசித்.)

வீடணன் : மறைந்து சென்ற இந்திரசித் மறுபடியும் வந்துவிட்டான்.
பறந்துவிடப் போகின்றான். பார்த்திருக்கும் இக்கணமே
சிரத்தையுடன் அக்கொடியோன் சிரத்தையேமுன் அறுத்தெறிவீர்.
வரத்தைமிகப் பெற்றதனால் வந்தினியும் கேடுசெய்வான்
விடாதீர்அவ் வெய்யோனை; விடுகசரம் அவன்தலைக்கே.
அடாதுசெய் வோர்எவரும் அழியட்டும், இளையவரே!

இலக்குவன் : இப்போதே அவன்தலையை இற்றுவிழச் செய்கின்றேன்.
தப்பாதே அவன்உடலைத் தனிமுண்டம் ஆக்குகிறேன்!
(இலக்குவனின் பாணத்தால் இந்திரசித் தலை அறுபடுகிறது)
வீழ்ந்துவிட்டான் இந்திரசித் விழுந்தலை எடுத்துவந்து
தாழ்ந்துவிடாது அண்ணலுக்கே தாள்படைப்போம் காணிக்கை!

(இந்திரசித்தின் வீழ்ச்சிகேட்டு இலங்கையில் இராவணன் கோபமும் சோகமுமாய்க் கொதிக்கிறான்.)

இராவணன் : காணிக்கை யாய்எனது காதல்மகன் தலையினையே
வேணக்கொள் அவ்விரண்டு வீணரையும் படைகளையும்
கொன்றுகுவிப் பேன்பழியும் கூடவே தீர்த்துவைப்பேன்.
இன்றேஏழ் தீவினிலும் இணைந்தெட்டுத் திசைகளிலும்

வாழும்மொத்த அரக்கரையும் வரச்சொல்லித் திரட்டுங்கள்.
சூழும்அந்த மூலபலச் சூறைப்படை இப்போதே
பாழும்அந்த நரமனிதப் பதர்களையே மோதிஅவர்
தூள்எனவே செய்யட்டும், தொடருகபோர் அரக்கர்காள்!

(மூலபலப்படை திரண்டு வருகிறது. அதைக்கண்டு)

இராமன் : பேரண்ட மாஎன்ன? பெரும்கடலு மாஎன்ன?
வீறண்டம் நடுங்கிடுமாய் வீடணரே என்னஇது?

வீடணன் : மூலபலம் என்றேபேர் முனைப்புள்ள அரக்கர்படை
காலபல இராவணனின் கட்டளைக்கே வருகிறது!

இராமன் : நன்று நன்று; அப்படைகளை நான்ஒருவ னேஎதிர்த்து
வென்றுவிடு வேன்.உடனே; வீடணரே, இங்குஇருங்கள்.

(இராமன் மூலபலப் படையுள் புகுதல் - படை வீரர்கள் வியத்தல்)

படைவீரர்-1 : என்னவிந்தை! இராமனெனும் இவ்வொருவ ரேஅரக்கர்
சின்னபின்னம் ஆகிவிடச் செய்கின்றா ரேஅம்பால்.

படைவீரர்-2 : ஒருவரே அல்லர்இவர். ஓராயிரம் இராமர்!

படைவீரர்-3 : மருவுமிடம் பொருதுமிடம் மயங்குமிடம் எலாம்இவர்தாம்
எனும்படியும் ஆகஅன்றோ எங்கெங்கும் தோன்றுகிறார்!

படைவீரர்-1 : பனம்பழம்போல் மூலபலப் படைவிழவும் செய்கின்றார்!

(மூலபலப்படையின் வீழ்ச்சியையும் கேட்டு இராவணன்
குமுறுகிறான்.)

இராவணன் : காலன்படை என்றல்லவா கருதியதை நம்பிநின்றேன்!

தூதர் : கருதியதில் தவறில்லை; கருதுமெந்தச் செயலினையும்
பொருதுமெந்த முயற்சியையும்அப் போதேவீண் ஆக்கிவிடும்
வித்தகங்கள் பகைவர்க்கு விளம்புவது வீடணரே.

இராவணன் : இப்போதேஅவ் வீடணனை என்மாமன் வேற்படையை
முற்போக்கி வீழ்த்துகிறேன். முடியட்டும் வீடணன்தான்!
தொலையட்டும் சகோதரத் துரோகிஇவ் வேலோடு!

(அமைச்சர் மகோதான் அங்கு வருதல்)

மகோதான் : நிலைகெட்டுப் போயிற்று நிமிர்ந்தினிமேல் செய்யஉள்ள
காரியத்தில் முனைந்திடுவோம் கவனமினி அதில்வைப்போம்
வீரியத்தைப் பேசிமட்டும் வெற்றிநமக்கு ஏற்படாது!

இராவணன் : அதற்குமுன்னே போர்க்களத்தில் அமைந்தநிலை கேட்டறிவோம்;
பதைக்கமுன்னே விட்டஎன்வேற் படை என்னஆயிற்று?

தூதன் : தாங்கள்விட்ட வேற்படையைத் தாங்கிஅந்த இலக்குவனே
அங்குதன்னுள் வாங்கி விட்டார்.

இராவணன் : அழிந்தானா இளைய நரன்?

தூதன் : இல்லைஇல்லை; முன்போன்றே இறந்துமுயிர் பெற்றுவிட்டார்!
வல்லனுமன் மீண்டும்வந்து வழங்கியஅம் மலைமருந்தால்!
சஞ்சீவி ராயனென்றும் சகலஉயிர் நேயனென்றும்
நம்சீவ மணிஎன்றும் நயந்ததனால் புகழ்கின்றார்!

இராவணன் : புகழ்வதெல்லாம் பேசிஆகப் போவதென்ன இனிஇங்கே?
நிகழ்வதென்ன? அதைத்தான்நாம் நிச்சயிக்க வேண்டும்நன்கே!

மாலியவான்: பேசாமல் சீதைஎனும் பெண்நலத்தைச் சிறையினின்றும்
கூசாமல் விடுவதுதான் கொண்டுபோ அவர்களிடம்!

இராவணன் : வயதானீர் மாலியவான்; வந்தெனக்குப் பாட்டனும்நீர்
அயல்தானும் இல்லைஇவை ஆராய்ந்தே உமைப்பொறுத்தேன்
மீண்டும்மீண்டும் சொல்வதையே மிடுக்காகச் சொல்கின்றீர்!
ஆண்டுபல வானதல்லால் அறிவிலிநீர் போகட்டும்
செய்யவேண்டி இனிநானே செல்கின்றேன் போர்முனைக்கு
தையல்சீதை தன்வயிற்றில் தானேஅடித்துக் கொளவேண்டும்
மண்டோ தரிக்கில்லை அது மாறாக நேர்ந்திடினும்
கொண்டுவருக புதுத்தேரை; கூடவரட்டும் பெரும்படைகள்
கண்டதுண்ட மாய்அவரைக் களத்தில்வெட்டி ஏறிகின்றென்.
சங்கரனார் கொடைவாட்குச் சரியான விருந்தென்று
அங்குஅரனா ரேமெகிழ ஆனவகை செய்கின்றேன்.

(வீராவேசமாகத் தேர் ஏறிப் போர்க்களத்திற்கு வருவதுகண்டு வீடணன் அதை இராமனுக்குத் தெரிவிக்கிறார்.)

வீடணன் : ஆவேச மாகஅன்றோ அதோஇராவணன் வருகின்றான்!
வாழ்வேது? புவிஏது? வானகம்தான் இனிஏது?

இலக்குவன் : ஊழித்தீ நானேதான்! உருத்திரனும் நானேதான்!
பாழித்தீ தள்ளிஇந்தப் பகைமுடிப்பேன் நான்என்றே
சூள்இயம்புவன் போலன்றோ சூறைஎன வருகின்றான்!

இராமன் : அஞ்சாதீர் வீடணரே! அஞ்சாதீர்! அனைவருமே
பஞ்சாக இராவணனும் படைகளுமே தீய்ந்திடுவர்.
நஞ்சான அரக்கர்களும் நாட்டுக்குள் தலைதூக்கார்!
எஞ்சாதுஇன் றையப்போரில் இவைகாண்பீர் நிச்சயமாய்!
(வானில் இருந்து தேர் ஒன்று வருகிறது இராமனுக்காக)
ஏன்இத்தேர்? எனக்காக எதற்காய் வருகிறது?

மாதலி : வானில்இருந்து இந்திரனார் வழங்குகிற தேர்இதுவாம்
மாதலிஎனும் பெயரோன் நான்; மணித்தேரின் சாரதிதான்!
போதினுக்குத் தக்கபடிப் போருக்கும் தக்கபடி
வானளவு மேஉயரும் வட்டமிடும்; பின்குறுகும்!
தானவரின் மாயங்கள் தகர்க்கமிக வேஉதவும்!

இராமன் : ஏறுகின்றேன் அவ்விதமேல் இந்திரனார்க் கென்நன்றி.

அனுமன் : வீறுகொண்ட அரக்கன்இதோ விரைந்துவிட்டான் நம்எதிரில்.

இராமன் : எதிரிஎனில் எதிர்த்தபடி எதிர்நிற்றல் முறைதானே!
உதிரிஎனப் பொலபொலென உதிர்ந்திடும்இத் தரைதானே!

இராவணன் : யார்தலைகள் உதிருமென, யார்உடல்கள் உருளுமென
ஓர்தரமும் பார்க்கலாம்; ஏன் உடனேயே பார்த்திடலாம்!

இராமன் : பார்க்கத்தான் போகின்றோம்; பாபம்என்றும் வென்றதில்லை!
தீர்க்கத்தால் சொல்கின்றோம்; தீமைஎன்றும் நின்றதில்லை!

இராவணன் : போருக்கே வந்தபின்பேன் புலம்பிடுதல்? தேவைஇல்லை,
தேருக்குள் ஏறியநீ திறமைகளைக் காட்டிநில்லு.

இராமன் : காட்டுகிறேன் ஒவ்வொன்றாய்க் கண்டங் களைஅறுத்து!

இராவணன் : மீட்டுமவை ஒவ்வொன்றாய் மிகச்சிரித்தே முளைத்துவிடும்.
(சிரித்தபடி) கூட்டுமவை நீஅறியாய், கொண்டுள்ளேன் அவ்வரங்கள்!
ஈடுமெனக் கெவருமில்லை; எதிர்த்தவரும் வெல்வதில்லை!

இராமன் : இரணியன்போல் பேசுகிறாய், இளையதம்பி வீடணன்முன்
கருணையொடு சொன்னவற்றைக் கதைஎன்றோன் நீதானே?

இராவணன் : கதைப்பதென்ன போர்க்களத்தில்? கற்பனையை
ஒதுக்கியேவை.

இராமன் : பதைப்பதற்கே சரிஇப்போதுன் பத்திருகை அறுத்தெறிவேன்.

இராவணன் : மூடனேநீ முழுமுழுக்க மூடன்தான்நீ எக்கையும்
பாடறிந்து வீழுமெனில் பழையபடித் தோன்றிவிடும்
மோதஇனி உன்னைவிடேன்; மோகனாத் திரம்கொண்டு
காதையினை முடிக்கின்றேன்; காத்துக்கொள் வாயா?பார்.

இராமன் : எக்கணைகள் விட்டாலும் எம்மாயம் செய்தாலும்
அக்கணமே நிற்காமல் அத்தனையும் தோற்றுவிடும்.
தருமத்தின் முன்னேஎவ் வதர்மமுமே வெல்லாது.
கருமத்தின் முன்னேஎக் கயமையுமே செல்லாது!

(அப்போது பின்னணியாய்ச் சங்கொலி கேட்கிறது.)

இராவணன் : இங்கென்ன? திருமால்கை ஏந்தும்சங் கொலிக்கிறது.
பங்கென்ன அதற்கும்தான்? பண்டொருநாள் வீடணன்சொல்
வந்திங்கே நினைவூட்டி வைக்கிறதோ? அல்லதுவீண்
முந்தஇங்கே வெறும்பிரமை மூளுவதோ? புரியேன்யான்!

(சிவனோ அல்லன் எனும் பாடல் இங்கு ஒலிக்கக் தொடங்குகிறது.)
(பாட்டு)

சிவனோ? அல்லன்; நான்முகன் அல்லன் திருமாலாம்
அவனோ? அல்லன்; மெய் வரம் எல்லாம் அடுகின்றான்
தவனோ என்னின், செய்து முடிக்கும் தரன்அல்லன்
இவனோதான் அவ்வேத முதல்கா ரணன்? என்றான்

மாதலி : புரியாமல் மயங்கியஇப் போதே இராவணன்மேல்
குறியாக அயன்கணையால் கொல்லுங்கள் இராமபிரபு.

இராமன் : மயக்கத்தில் வேண்டாமே; மதிதெளிந்தே எழுந்திடட்டும்.

மாதலி : வியக்கஅதோ எழுந்துவிட்டான் விடுங்கள்பிர மாத்திரத்தை!

இராமன் : கோதண்டம் இன்றேதான் கோதண்ட வளைகிறது.
தீதுஅண்ட முடியாஓர் தெய்வீகம் இழைகிறது!

(இராமன் விட்ட பிரம்மாத்திரத்தில் இராவணன் முடிவு எய்துகிறான்.)

மாதவி : விழுந்துவிட்டான் இராவனனே வேரோடும் மாமலைதான்
அழுந்தவும்மண் சாய்ந்ததுபோல் அலறலுடன் பேரிடியாய்.

வீடணன் : பாருங்கள் இப்போது பாவிஅண்ணன் தோற்றத்தை.

மாதவி : நேர்எங்கும் இலாதபடி நிறைபொலிவாய்த் திகழ்கிறது!

இராமன் : காமம்முதல் கெடும்குணங்கள் கழிந்ததனால் இப்போது
தாமிங்கு புரளும்உடல் தகதகப்பாய் ஜொலிக்கிறது!
மண்டோதரி வந்துவிட்டார்; மனம்குமுறி அழுவதனைக்
கண்டோமேல் நாமும்தான் கண்ணீரால் கலங்கிடுவோம்!
வேண்டாமே; அப்பாலாய் விலகியே போய்நிற்போம்!

(எல்லோரும் விலகிவிடுகிறார்கள்.)
(வெள் எருக்கம் கடை முடியான் எனத்தொடங்கும்
மண்டோதரியின் புலம்பல் பாட்டு, இங்கு இசைக்கப்படுகிறது)

பாட்டு

வெள்ளருக்கஞ் சடைமுடியான் வெற்புஎடுத்த
திருமேனி, மேலும் கீழும்
எள்இருக்கும் இடன்இன்றி, உயிர்இருக்கும்
இடன்நாடி, இழைத்த வாறோ?
கள்இருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்இருக்கும் எனக்கருதி உடல்புகுந்து
தடவியதோ, ஒருவன் வாளி?

(பாட்டு முடிவில் வீடணனை அழைத்து)

இராமன் : வீடணரே, நீர்க்கடனை வேண்டியதைத் தமையனுக்குப்
பாடுமுறை செய்திடுக - பாசறைக்கு நாம்மீள்வோம்!

வீடணன் : (அழுது கொண்டே)
எல்லாமே தாயனைய எம்பிராட்டி மேல்கொண்ட
பொல்லாமெய்க் காமமொன்றே போந்திவ்வாறு ஆயிற்று!

இராமன் : வருந்தற்க விதிவலிது; வாழ்விலந்த விதியினும்மேல்
பொருந்தொக்க அறம்வலிது புனிதமுமே மிகவலிது!
ஆகமனம் தெளிவுறுக; அறவழியே நின்றிடுக
வேகுமனத் துயரைவிட்டு வீடணரே, துணிவுறுக.

(இராவண வதை நிகழ்ந்து போர்ஓய்ந்த பின்
பின் இலங்கையில்)

இராமன் : உயிர்அனைய இலக்குவநம் உடன்பிறவாத் தம்பிஎனப்
பயிலநின்ற வீடணர்க்குப் பண்டொருநாள் சொன்னபடித்
திருமுடியைச் சூட்டுதற்குத் தேவையாம்ஏற் பாடுகளை
வரும்விரைவில் செய்துஆட்சி வழங்கிடுக இலங்கையினை.

இலக்குவன் : அவ்விதமே செய்கின்றேன் அண்ணா நம் வீடணர்க்கு
நல்விதமே உடன்விரைவில் நல்கிடுவோம் ஆளுகையை!

இராமன் : மாருதியே, உனக்குமொரு மகத்தான பணியுண்டு.
நேர்அதிகம் நம்நினைவால் நெக்குருகும் சீதையினை
அங்கசோக வனத்திருந்து அழைத்திங்கே வந்திடுக!
நங்கையிடம் வரச்சொன்னதும் நானேதான் என்றிடுக!

அனுமன் : செல்கின்றேன் இப்போதே; சீதைஎனும் தாய்த்திருவைச்
சொல்லியுங்கள் ஆணைபோல் சுணங்காமல் அழைத்துவர.

இலக்குவன் : வீடணர்க்கு முடிசூட்ட வேண்டியசெய் தாயிற்று.
கூடவே படைகளையும் கொஞ்சமங்கே அனுப்பியுள்ளேன்!

இராமன் : வகையாக அவரைஎலாம் வைத்துக்கொண்டு நீயேதான்
மிகையாய்க்கோ லாகலமாய் மெச்சமுடி சூட்டிவிடு.

(அனுமன் சீதையை அழைத்துக் கொண்டு வருதல்;
இராமன் வரவேற்றல்

இராமன் : வந்தனையா சீதா,உன் வருகையும்நல் வருகைஎன்க
முந்தநினக் தென் வாழ்த்து, முறையோடுனை அழைத்துவர
அனுமனையும் தொடர்ந்துநம தரும்குண வீடணரையும்.

சீதை : மனம்மகிழ்ந்தே அனுப்பினீர்கள்; மலரடிக்கே என்வணக்கம்!

இராமன் : ஆனாலும் சீதைநங்காய், அழைத்ததிலும் ஓர்நெருடல்
தானாக எழுகிறது. தகும்படியாய்ச் சொல்லுகிறேன்
பலபலநாள் அசோகவனம் பால்சிறைநீ இருந்துள்ளாய்
சிலசிலஉன் பழக்கங்கள் சிறையதனால் சிதைந்திடலா;ணீ
வழக்கத்தின் மாறாய்நீ வழுவிஇருக் கவும்கூடும்
புழுக்களென அவ்எண்ணங்கள் புகுந்தென்னுள்
நெளிகின்றன.

சீதை : அன்புக்கே உரியஉங்கள் ஐயமெலாம் புரிகின்றன.
முன்புகுந்தே தழலிடைநான் மூழ்கிவந்துஎன் புனிதத்தை
உங்கள்முன் நிரூபிக்கிறேன்; உடன்நெருப்பை மூட்டிடுங்கள்
திங்கள்கறை பொய்எனல்போல் தெளிவாகக் காட்டுகிறேன்.

இராமன் : தம்பி இலக்குமணா தழல்குழிஇங்கு ஆகட்டும்.
(இலக்குவன் தயங்குதல்)
வெம்பியும்ஏன் தயங்குகிறாய்? விறுவிறுஎன் றனல் மூட்டு.

சீதை : தயங்காதீர் இளையவரே, தணல்ஒன்றும் செய்யாது
நயம்காண்என் கற்பினையே நம்பிஇதில் இறங்குகிறேன்.

(சீதை தீயில் இறங்குதல் - எல்லோரும் திகைத்தல் - கதறுதல்)

இலக்குவன் : வேண்டாம்வேண் டாம்தாயே, வெந்தழலே உம்கற்பு!

அக்னி தேவன் : தீண்டாமுன் அழல்தேவன் என்னையே தீய்க்கிறது.

(அந்த சமயம் தசரதர் வானிலிருந்து கீழே இறங்கிவருதல்.)

தசரதர் : தாமரைமேல் வந்தவள்நீ தாழ்ந்துஅதுதான் வெந்தழலும்
பூமலர்போல் மாறிநீயும் புகக்குளிர்ந்து சுமக்கிறது.

(இராமன் உட்பட எல்லோரும் தசரதரை வணங்குதல். பின்)

இராமன் : வானிருந்து வந்தஎந்தாய், வணக்கம்உங்கள் வருகைக்கே
(தசரதரிடம்)

தசரதர் : நான்இங்கு வந்ததெலாம் நன்றும்மை வாழ்த்துதற்கே!
(சீதையை நோக்கி)
மருமகளாய் வந்ததிரு மணிவிளக்கே, உன்கற்புப்
பெருமைகளை நாட்டவேஇப் பிள்ளைஇவ் வாறுசெய்தான்.
மறந்திடுக இனிமேலாய் மகிழ்ந்திடுக நீவிரெலாம்
சிறந்திடுக, சீதேவி திருமாலே என்பதனால்!

இராமன் : தந்தையே நீங்களெம்மைத் தண்ணளிமேல் வாழ்த்திடுக.

தசரதர் : எந்தம்அன்பு வாழ்த்துகள் என்றென்றும் உமக்குண்டு.
வேண்டுமெனில் கேட்கவரம் விரும்பிமிகத் தருகின்றேன்.

இராமன் : தெய்வம்நிகர் கைகேயும் தினமுமகன் பரதனும்என்
கைவணங்கும் தாய்தம்பியாய்க் கண்டருள வேண்டுகின்றேன்.

தசரதர் : கவலைஇனி வேண்டாம்என் கண்மணியே, பரதனைநீ
இவண்நினைவு படுத்திவிட்டாய். எப்போது அயோத்திக்கே
அண்ணன்வரு வான்என்றே ஆழ்ந்துதுய ராகஉள்ளான்
விண்ணெனவே நீஅங்கு விரைந்துசென்று பரதனைமுன்
காப்பாற்ற வேண்டும்உன்றன் கடமையிது வேமுதலில்!
ஏற்பாடாய்ப் புறப்படுக.

இராமன் : இதோஎந்தாய், புறப்பட்டோம்.

(எல்லோரும் விமானத்தில் அயோத்திக்குச் செல்கின்றனர்.)

அனுமன் : பரத்துவாசர் ஆசிரம்மேல் பறக்கிறது நம்விமானம்.

இராமன் : வரத்தயவாய் நம்பால்முன் வாக்குறுதி வாங்கியுள்ளார்
இறங்கிடுவோம். நீமட்டும் இங்கிருந்தே தொடர்ந்துசெல்க
நெருங்கிடும்முன் அயோத்திக்கு நேர்அருகில் உள்ளதிரு
நந்திகிராமச் சிறுகுடிலில் நம்வருகைக் காய்ப்பரதன்
உந்திஎழும் ஆவலில்ஒவ் வோர்நொடியும் காத்திருப்பான்

வந்துகொண் டிருக்கின்றார் வகுந்தவேண் டாம்என்றே
முந்தியவ னுக்குரைக்க முன்னேய நீசெல்அனும.

அனுமன் : செல்கின்றேன், பிரபுஇதோநான் செல்கின்றேன் சென்றங்குச்
சொல்கின்றேன் தாங்கள்வரும் சுந்தரநற் செய்தியினை.

(அனுமன் பயணம் தொடர்கிறான்.)

(நந்தி கிராமத்தில் பரதனும் சத்துருக்கனும் இராம இலக்குமன் சீதை வருகையை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றனர்.)

பரதன் : கானகம் போனஅண்ணன் கற்புளதாய் சீதைமற்றும்
தானுடன் போனதம்பி இலக்குவன் இவரெல்லாம்
இன்றேதான் திரும்பிடும்நாள். ஏன்எனினும் திரும்பவில்லை?
நன்றேதான் முன்சொன்னசொல் நயமாகக் காப்பாரோ?

சத்துருக் : முன்பேநம் தந்தைமொழி முறியாமல் காக்கத்தான்
வம்பேதும் இல்லாமல் வனத்திற்கே போய்விட்டார்.

இப்போதும்அவ் வாறண்ணன் இனிதளித்த வாக்குறுதி
ஒப்போடும் காப்பாரோ? உடனேயும் திரும்புவரோ?

பரதன் : புரியவில்லை சத்துருக்ன பொறாதினியும் என்உயிர்தான்!
எரியும்அழ லில்இறங்கி இறுதியுமே அடைவதுதான்
சிறந்தவழி. நீஎன்ன செப்புகிறாய்? சொல்தம்பி
விரைந்துவரா அண்ணனையே விட்டெங்கன் வாழ்வதுநாம்?

சத்துரு : வேண்டாம்அண் ணாவேண்டாம் விடுவதுயிர் நீங்களெனில்
ஆண்டாண்டு நானும்தான் அதன்பிறகும் உயிர்வாழேன்.
உங்களுடன் தொடர்ந்தடியேன் உடனேபாய்ந்து எரிபுகுவேன்
என்கடனும் அதுவேதான் எனஎண்ணி உடன்மரிப்பேன்.

(கோசலையும் மற்றோரும் அலறி அடித்துக்கொண்டு ஓடி வருகின்றனர்.)

கோசலை : ஈதென்ன விபரீதம்? ஏன்இவ்வாறு எண்ணவந்தீர்?

பரதன் : குதிலாக்கோ சலைஅன்னாய், சொன்னபடி அண்ணல்மற்றோர்
வாராத போதுஇனியும் வாழ்வதெனில் என்னஅறம்?
நேராக இதைவிடவும் நீதிஅறம் தோன்றவில்லை.

கோசலை : பிள்ளைகாள்நீர் இவ்வாறு பேதைமையில் துணிவதை ஊர்
உள்ளவரால் கேட்டுத்தான் ஒருங்கன்னைமார் ஓடிவந்தோம்.
துணிவதுபோல் வேண்டாம்.நம் துயர்தீர்க்க இராமனவன்
அணியுடனே வந்திடுவான் அவசரமே படவேண்டாம்.

(வானிலிருந்து அனுமனும் சொல்லிக்கொண்டே வருதல்.)

அனுமன் : ஆம்நானும் வேண்டுகிறேன். அவசரமே படவேண்டாம்!

பரதன் : என்னசொல் கின்றீர்நீர்? யாவர்நீர்? விரைந்துசொல்லும்.

அனுமன் : முன்னம்உங்கள் எண்ணத்தை முடிவுகட்டி ஒதுக்குங்கள்
பரத்துவாசர் அழைப்பின்மேல் படைகளுடன் அண்ணலவர்
வரத்தங்கி இப்போது வந்துகொண் டேஇருப்பர்.
முன்னம்இந்தச் சேதியினை மொழியத்தான் அண்ணலவர்
சொன்னபடி வந்துள்ளேன். சோகத்தை விட்டிடுங்கள்!

கோசலை : நல்லசெய்தி சொன்னாய்நீ; நவிலுக யார்நீயுமே?

அனுமன் : வல்ல தந்தை வாயுவுக்கும் வந்தன்னை அஞ்சனைக்கும்
செல்லமென வந்தமகன் சீராமர் தொண்டனெனச்
சொல்லஇந்நாள் பேறுடையேன்! சூழ்ந்தபெயர் அனுமனென்பர்
பாருங்கள். அண்ணல் தந்த பரிவுமிகும் அடையாளம்!
நேர்உங்கள் கண்முன்னம் நிரூபிக்கவே கொண்டு வந்தேன்.

கோசலை : அநுமநீயும் எம்பிள்ளை, அளவில்லா மகிழ்வு கொண்டோம்!
இன்னுமென்ன யோசனைதான்? இவர்களும்உன் சோதரர்தாம்!

அனுமன் : தாயேநான் பெரும்பேறு தான்அடைந்தேன் இங்குவந்து
சேயேனாய் என்னையுமே சேர்த்துக்கொண் டீர்கள்நன்றி!

(இராமன் முதலியோர் வான்வழி வந்த விமானத்தில் இருந்து கீழே இறங்குகின்றனர். அவர்களை அனுமன் பார்த்துவிட்டு)

இராமன் : வணக்கம்எங்கள் அன்னையரே! வணக்கங்கள் மூவருக்கும்
மணக்கும்மலர்த் திருவடிக்குஉம் மகன்களின் முன்வணக்கம்.

கோசலை : குலம்விளக்கும் இராம இலக்குவ குலமகளே வாருங்கள்
நலம்விளைய எல்லோர்க்கும் நல்அன்னையர் வாழ்த்துகள்.

பரதன் : வணக்கம், அண்ணா வணக்கம். தாய்
வைதேகிக்கும்வணக்கம்
இணக்கமுடன் திருவடிக்கே எம்சென்னி தாழ் வணக்கம்.

(பாட்டு)

சேவடி இரண்டும் அன்பும் அடியுறை யாகச் சேர்த்தி
பூவடி பணிந்து வீழ்ந்த பரதனைப் பொருமிவிம்மி
நாவிடை உரைப்பது ஒன்றும் உணர்ந்திலன் நின்ற நம்பி
ஆவியும் உடலும் ஒன்றத் தழுவினன் அமுது சோர்வான்.

இராமன் : பரததம்பி எழுந்திருஉன் பக்தியினை என்னென்பேன்!
வரதசத்ருக் கனன்உனையும் வாழ்த்துகிறேன்; எழுந்துவிடு
உங்களொடு மீண்டுமிங்கே உடன்வந்து சேர்ந்துகொளப்
பங்களித்த அக்கருணைப் பரமனுக்கு மிகநன்றி.

பரதன் : நன்றியினைப் பரமனுக்கு நாங்களும்தான் சொல்லவேண்டும்
சென்றபதி னான்காண்டும் சீர்குலைந்த பாழிடமாய்க்
கோசலமும் அயோத்தியுமே கொண்டிருந்த கோலத்தைப்
பேசலுமே ஆகுமோ? பெரும்துயரம் மூழ்கியது.

சத்ருக் : நினைப்பதற்கே நெஞ்செல்லாம் நின்றிடும்போல் ஆகிறது.
முனைப்புறும்உள் உயிர்த்துடிப்பும் முடிவதுபோல் நேர்கிறது.

பரதன் : புகுந்தபெரும் புயல்வெள்ளம் பொறாதபடி விளைந்தவயல்
மிகுந்தபெரும் சேதத்தில் மிதப்பதுபோல் நகரமெலாம்
துடிதுடித்துப் போயிற்று; துயரமுமே ஆயிற்று!
கடிதுநீங்கள் வந்ததனால் கண்டுயிர்மீண் டாயிற்று!

இராமன் : போகட்டும்; எல்லோரும் புறப்படுவோம் அயோத்திக்கே!
ஆகட்டும் நகரமக்கள் ஆசியையும் நாம்பெறுவோம்!

கோசலை : அயோத்திமக்கள் அனைவருமே ஆம்எதிர் பார்த்துள்ளார்.
வயோதிகர்முதல் பாலர்வரை வரவேற்கக் காத்துள்ளார்!

பரதன் : அதற்குமுன்நம் தலைநகரை அழகுபடுத்தி வையுங்கள்.
எதற்குமோ டில்லாதபடி எழில்பெருகச் செய்யுங்கள்!

சத்ருக் : நகரமாந்தர்க் கிதைவிடவும் நற்செயல்வேறு என்னஉண்டு?
சிகரம்போல் அழகெங்கும் சிறக்கவே செய்திடுவோம்!

பரதன் : அத்தோடு நம்அண்ணல் அரியணைமேல் அமர்ந்திடலும்
முத்தோடு வயிரமணி முடிசூடலும் தொடர்ந்திடணும்.

(இராமனுக்கு முடிசூட்டுவிழா ஏற்பாடுகள் தொடங்குகின்றன. நகர பக்கள் மகிழ்ச்சியில் மிதக்கிறார்கள்.)

குரல் 1 : இன்றேநம் கோசலத்திற்கு என்றுமிலா நன்னாளாம்!

குரல் 2 : இன்றேநம் நாட்டுமக்கட்கு இனியதொரு பொன்னாளாம்!

குரல் 3 : நன்றேநம் இராமவள்ளல் நவமணியும் திருமுடியும்
என்றே புனைந்துஅரசும் ஏற்கின்ற பெருநாளாம்.

(பிரமன், மயன் அங்கு வருதல். மற்ற தேவர்களும் வருதல்)

மயன் : முத்தேவ ருள்படைக்கும் முதல்தேவே மயன்வணக்கம்
எத்தேவை யான்முடிக்க? இயம்புங்கள்; செய்கின்றேன்.

பிரமன் : முடிபுனையத் தக்கதொரு முழுஅழகு மண்டபத்தை
வடிவமைத்துத் தந்திடுக வந்தனும நீயுமுடன்
தீக்கெட்டும் சென்றுகடல் தீர்த்தங்கள் ஏழினையும்
பொற்குடத்தில் கொண்டுவந்து பொலியஇங்கு வைத்திடுக
பாலிகை யோடு தென்னம் பாளையுமாய்த் தட்டெடுத்து
வாலிபஇளம் பெண்களெலாம் வரிசைஇங்கே அமைத்திடுக
கோலங்கள் புனைந்திடுக; கொடிவிதானம் உயர்த்திடுக
சீலம்கொள் சரவிளக்கும் சிறக்கும்இடம் ஏற்றிடுக.

அனுமன் : கங்கைமுதல் காவிரிநீர்க் கலசமொடு வைத்துவிட்டேன்
இங்குமற்றும் பணிஎன்ன? இயம்புங்கள் அனுமனுக்கு.

பிரமன் : மங்கலநீ ராட்டுவிழா மணிமுடிமுன் நிகழட்டும்
அங்கங்கு தேவர்நரர் அனைவரும்வந்து அமரட்டும்
சூரியகுலத் தோன்றல்முடி சூட்டுவிழா என்பதனால்
வீரியமாய் இரவியுமே விடியஉடன் எழுந்துவிட்டார்!

பரதன் : பொற்கிரணம் பாருங்கள்; பூப்பூவாய்த் தூவுகின்றார்
நற்கிரண ராம்ராஜ்ய நல்லாட்சிக் கட்டியம்போல்!

பிரமன் : வசிட்ட மகா குலகுருவே, வாருங்கள்; அண்ணனுக்குஉம்
அதிட்டத் திருக்கரத்தால் அணிமுடியைக் சூட்டுங்கள்

வசிட்டர் : எல்லோரும் வந்துளரா, ஏற்றத்தாழ் வில்லாமல்?
நல்லோர்கள் முன்வகிக்க நங்கையீர், குலவை இடுங்கள்

பரதன் : கொண்டல்நிகர் இராமனைக் கொலுஅமர் சீதையொடும்
கண்டு மகிழ்வதற்கே கண்கொள்ளா இத்திருநாள்!
வந்துவிட்டார் அனைவருமே வரிசைகளும் வைத்துவிட்டார்!
முந்தவிட்டுத் குகன் வீடணன் முனிவர்களும் அமர்ந்துள்ளார்!

வசிட்டர் : நல்லதுநீ ராட்டுவிழா நன்மங்கலம் நிகழ்த்திவிட்ட
வல்லநம் ,ராமனைச்சீர் வகையொடும் அழைத்திடுக
வந்தாயிற் றாஇராமா? வரிந்தணையில் அமர்ந்திடுக!
செந்தாமரை முகத்துச் செல்வியொடும் இருந்திடுக
அனுமன் எங்கே?

அநுமன் : இதோ அரியணை தாங்கியுள்ளேன் கூடவே
மனமுவந்தே அங்கதனும் மணிஉடைவாள் ஏந்துகிறார்!

பரதன் : பரதன்நான் குடைபிடிப்பேன் பரிந்துதம்பி யர்இருவரும்
விரதமெனக் கவரிகொள்வர் வெண்ணெய்நல்லூர்ச்
சடையன்வழி
மரபுளோரும் வந்துள்ளார் மணிமுடியும் தரஉள்ளார்!

(வசிட்டர் இராமனுக்குத் திருமுடி புனைதல்)

வசிட்டர் : வருக; அவர் தரும்முடியே வாங்கிஅண்ணலுக் கணிவோம்!
வாழ்கவாழ்க அரசராமன்! வாழ்கவாழ்க கோசலராமன்!
வாழ்கவாழ்க தேவியொடு வளம்புகழ்பட் டாபிராமன்!

(பாடல் ஒலிக்கிறது)

(பாட்டு 1) : அரியணை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்த
பரதன்வெண் குடைக விழ்க்க இருவரும் கவரி பற்ற
விரைசெறி குழலி நங்க வெண்ணெய்ஊர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி.

(இராமன் சீதையோடு அரியணையில் வீற்றிருத்தல்)
(பாட்டு)

பூமகட்கு அணிஅது என்னப் பொலிபசும் பூரி சேர்த்தி
மாமணித் தூணின் செய்த மண்டபம் அதனின் நாப்பண்
கோமணிச் சிவிகைமீதே, கொண்ட மின்னும் போலத்
தாமரைக் கிழத்தியோடும் தயரத ராமன் சார்ந்தான்.

வசிட்டர் : தயரதராமர் மட்டல்ல தண்ணளிசொல் சீதையோடு
இயல்பில்சுடும் சூரியகுல இராமச்சந்திரனும் ஆகிவிட்டார்
மந்திரம்போல் மணிமகுட மங்கலமும் ஆயிற்று!

இராமன் : அரியணையில் நீங்களெலாம் அமர்த்திவிட்டீர் எம்மைஅன்பால்
உரியசிறு பரிசுகளும் உளம்நிறைவாய் நீங்களும்தான்
ஏற்றருள வேண்டுமிதோ என்எளிய காணிக்கை.

சீதை : போற்றவரும் அனுமஉன்றன் புனிதமிகும் தொண்டுக்கே
வாணிமுன்னம் தந்தமுத்து வடமாலை ஏற்றிடுக.

அனுமன் : ஏற்கின்றேன் தாயே,நீர் எனைச்சேயாய் ஏற்றதற்கே
வாய்க்கின்ற பரிசிதனை வாங்கிக்கொண் டேன்பணிந்தே!

சீதை : காவியமாய் வாழ்ந்திடுக கவிக்குலத்துச் செல்வன்நீ!
ஓவியமாய் உயந்திடுக! உயர்திருவழுந் தூர்பிறந்து
ஒவ்வொருஊ ராய்ஒற்றி யூர்ந்துமே அரங்கமிசைச்
செவ்வையுற ஏறிநின்ற செம்மொழியாம் தழிழ்க்கவிதை
போன்றேஉன் புகழ்உயரும்; புனிதமிகு ராமகதை
சான்றே இதற்காகும் ஐயராமன் பேராளும்!

(பாடல் மங்கல இசையாக ஒலிக்கிறது.)

நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே.
இம்மையே ராமா எனும்இரண் டெழுத்தினால்!

(முற்றும்)

சந்தக்கவிமாமணி தமிழழகன் வே.சண்முகம்

புதுப்புதுச் சந்தங்களிலும், யாப்பு வடிவங்களிலும், சித்திர வடிவங்களிலும் நூறாயிரத்திற்குமேல் கவிதைகளும், வெண்பாக்கள் மட்டுமே முப்பதாயிரத்திற்கு மேலும் புனைந்துள்ள இவர், தூத்துக்குடியில் 26.04.1930இல் திரு.வேலு செட்டியார் - வள்ளியம்மை ஆகியோரின் நான்காவது மகனாகப் பிறந்தவர்.

பாரதி பரம்பரை, பாரதிதாசன் பரம்பரை போன்ற பாராட்டுக்களைப் பத்திரிகைகளாலும், சந்தக்கவிமணி, கவிமாமணி, தமிழ் இலக்கியக் காவலர் போன்ற பட்டங்களை இலக்கிய நிறுவனங்களில் பெற்றதோடு, பாரத அரசின் ஒலிபரப்புத் துறை நடத்திய கவிதைப் போட்டியில் இந்திய நாட்டிலேயே முதற் பரிசும், தமிழக அரசின் விருதும் மற்றும் பல நிறுவனங்களின் பணப் பரிசுகளும் பாராட்டுகளும் பெற்றவர்.

இவருடைய நூல்கள் - தமிழழகன் கவிதைகள், மழலை அமுதம், பூ மத்தாப்பு, ஒளியைத் தேடி என்பனவாகும். ஒளியைத் தேடி சென்னைப் பல்கலைக் கழகத்தின் பட்டப் படிப்புக்குப் பாடநூலாக வைக்கப்பட்டுள்ளது. பலவகைப் பக்திப் பிரபந்தங்களும் இவரால் பாடப் பெற்றுள்ளன. சிலேடை பாட வல்லவரான இவர், ஸ்ரீ காமாட்சி அலங்காரம் எனும் அணி இலக்கண அழகோடு பலவகை இசை நாடகங்களும், கவிதை நாடகங்களும் இயற்றியுள்ளார். அவற்றுள் ஒன்றுதான் இந்நூலும். இந்நூல் வானொலியில் தொடர்ச்சியாக ஒலிபரப்பப் பெற்றுள்ளது. வானொலியில் பணியாற்றியுள்ள இவரின் பாடல்கள், திரைப்படங்களிலும் வந்துள்ளன. ஆங்கிலத்திலும் இந்தியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. மற்றும் சிறுவர் இலக்கியத்திலும் சிறப்பான இடம் இவருக்கு உண்டு.

●●●



சந்தக் கவிமாமணி

தமிழழகனார்

